27வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீடு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27　பாலம் 04　சமூக முன்னேற்றப்பத்திரிகை　மாதமிருமுறை　இலவசம்　MARCH 01, 2017

# கனேடிய-அமெரிக்க வர்த்தகம் வளர்ச்சி அடையும்!

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அமெரிக்கப் பயணம் மேற்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் ஐ 2017 பெப்பிரவரி 13இல் சந்தித்தார். அதைத் தொடர்ந்து 2017 பெப்பிரவரி 23இல் இருவரும் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர். அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம் 2016 நொவெம்பர் 8



இல் வெற்றி பெற்றபின்னர், கனேடியப் பிரதமர் இதுவரை அமெரிக்க ஜனாதிபதியுடன் நான்கு முறை உரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

பெப்பிரவரி 13இல் நடைபெற்ற நேரடிச் சந்திப்பின் பின்னர் இரண்டு தலைவர்களும் சேர்ந்து நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் கனடாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையேயான உறவு மிகவும் நல்ல நிலையிலேயே உள்ளது. அதை நாங்கள் இன்னும் முன்னேற்ற ஒன்றாக வேலை செய்யப் போகிறோம் என்றார். அவர் கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான வர்த்தகத்தைப் பற்றி அதுவும் சிறப்பாக வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தமான NAFTA ஐப் பற்றிக் கூறுகையில் கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே மிகவும் சிறந்த வர்த்தக உறவு உள்ளது. அதில் இரண்டு நாடுகளும் பயனடையும் வகையில் சிறு மாற்றங்கள் (Tweaking) மட்டுமே செய்ய வேண்டும் என்றார்.

கனேடியப் பிரதமர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதியின் பேச்சு வார்த்தைகளின் போது டொனால்ட் ட்ரம் அமெரிக்க அரசின் வர்த்தகம் தொடர்பான கொள்கைகளால் கனடா பாதிப்படைய மாட்டாது என உறுதி அளித்ததாக குளோப் அன்ட் மெயில் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அது மேலும் தெரிவிக்கையில் மெக்சிகோவிற்கும் அமெரிக்காவிற்குமிடையேயான வர்த்தகத்தில் தான் பெரிய மாற்றங்களை டொனால்ட் ட்ரம் செய்யத் திட்ட மிட்டுள்ளதாக ஜஸ்ரின் ரூடோ விடம் கூறியதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது.

NAFTA வர்த்தகத்தின் மூலம் அமெரிக்காவிற்கும் மெக்சிக்கோவிற்கும் இடையே $58 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறையை அமெரிக்கா தற்போது கொண்டுள்ளது. ஆனால் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையேயான வர்த்தகத்தில் அமெரிக்கா $11 பில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக வர்த்தகத்தைத் தற்போது கொண்டுள்ளது. இதனாலேதான் அமெரிக்காவிற்கும் மெக்சிக்கோவிற்கும் இடையேயான வர்த்தகத்தில் பாரிய மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்பதில் அமெரிக்க ஜனாதிபதி

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

IP GOLDHOUSE 905-554-5890

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Lic# M15001465
Toll Free: 1-844-878-2721　Fax: 647-351-3099
mortgage@nesan.ca　www.nesan.ca
MORTGAGE ALLIANCE #10530　1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying~Leasing~Renting~Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full-Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
LISTING COMMISSION 1%
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage*

DENTAL OFFICE
இப்பொழுது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
✓Wisdom Tooth Extraction.
✓Root Canal.
✓Gum Treatment.
✓Tooth Filling.
✓Dental Implant.
✓Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

NON-MEDICAL INSURANCE AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
KABIS　Assumption Life　INDUSTRIAL ALLIANCE　Foresters
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca


CaraCo
TRIDEL
BUILT FOR LIFE
1110 KING WEST
Via Bloor
WOODHAVEN
Tridel Via Bloor Condos/37 Story Condo Development
Located between two subway stations
Close to shopping/restaurants/DVP
Brand New House
3 Bed +2 Wash Rooms
Starting
$289,900
புதிய வீடுகளின் விலைகள் $289,900 இலிருந்து ஆரம்பம். சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். பதிவுகளுக்கு அழையுங்கள்
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
www.facebook.com/condohouse.ca
skajaruban@gmail.com
HomeLife/GTA Realty Inc.*
5215 Finch Ave East, #203 Toronto ON. M1S 0C2
* Independently Owned & Operated


NEW HOMES IN LINDSAY
Occupancy Nov. 2017
Only one hour from Ajax
2 Storey
3BR + 2.5WR
$493,900
Bungaloft
4BR + 2.5WR
$490,900
50' Lots
All Brick
Detached
Bungalow
3BR + 2WR
$570,900
Bungalow
3BR + 2WR
$416,900
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract


Call Pat ... for all your Real Estate needs...
Buy , Sell ,Rental & Leasing
வீடு, வியாபார நிலையம்
வாங்க விற்க...
Pat Murugesu
Sales Representative
Cell: 416-271-7452
pat.murugesu@gmail.com
www.hlgtarealty.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, #203 Toronto ON M1S 0C2
Indepadenty Owned & Operated

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தீவிரமாக உள்ளார்.

இந்த உரையாடல்களின் போது கனேடியப் பிரதமர் அகதிகள் தொடர்பாகப் பேசுவதைத் தவிர்த்திருந்தார் எனக்கூறும் குளோப் அன்ட் மெயில் ஊடகம், அமெரிக்க ஊடகவியலாளர்கள் டொனால்ட் ட்ரம் இனுடைய குடிவரவுத்தடை பற்றிக் கனேடியப் பிரதமர் எதிர்ப்புக்காட்டுவார் என எதிர்பார்த்துக் கேட்ட கேள்விகளுக்கு ஜஸ்ரின் ரூடோ சாதுரியமாகப் பதிலளித்தார் எனவும் தெரிவித்துள்ளது.

ஜஸ்ரின் ரூடோ அமெரிக்க ஊடகங்களுக்கு அளித்த பதிலில் கனேடிய மக்கள் தங்கள் பிரதமர் இன்னொரு நாட்டிற்குப் போய் அங்குள்ள மக்களுக்கு அவர்கள் அவர்களது நாட்டை எவ்வாறு ஆள வேண்டும் எனப் போதனை செய்வதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்று கூறினார். ஜஸ்ரின் ரூடோ மேலும் தெரிவிக்கையில் எனது பாத்திரம் (Role), கனேடிய விழுமியங்களை மதித்து உலகத்திற்கு ஒரு நேர்மறையான எடுத்துக்காட்டாக பிரதிபலிக்குமாறு கனடாவை ஆட்சிசெய்வதுதான் என்றார்.

அமெரிக்காவின் நலனை மட்டுமே தனது குறிக்கோளாகக் கொண்டு பிரசாரம் செய்யும் டொனால்ட் ட்ரம் வழமைக்கு மாறாக வேலைகளையும் வர்த்தகத்தையும் வட-அமெரிக்காவிற்குள் மட்டுமே வைத்திருப்பதன் மூலம் அமெரிக்காவையும் கனடாவையும் முன்னேற்றுவோம் என்றும், எமது வளத்தையும் செல்வத்தையும் எமது நாடுகளுக்கு உள்ளேயே வைத்திருப்போம் என்றும் கூறினார்.

டொனால்ட் ட்ரம் இச்சந்திப்பின்போது 1981 இல் அவர் ஜஸ்ரின் ரூடோவின் தகப்பனாரைச் சந்தித்து எடுத்த படம் ஒன்றை அன்பளிப்பாக ஜஸ்ரின் ரூடோவிற்கு வழங்கினார். அதேபோல் கல்லில் செதுக்கப்பட்ட சிங்கம் உருவச்சிலை ஒன்றை ஜஸ்ரின் ரூடோ அமெரிக்க அதிபருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.



அமெரிக்க அதிபரைச் சந்தித்த பின்னர் ஜஸ்ரின் ரூடோ அமெரிக்க உபஜனாதிபதியான மைக் பென்ஸ் மற்றும் அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் போல் றையன் ஆகியோரையும் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பின்போது அவர்கள் கனேடியப் பிரதமரிடம் குடியரசுக்கட்சி அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையே மேலதிக வர்த்தகத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியை ஊக்குவிக்கும் என்றனர். கனடாவிற்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான வர்த்தகம் குறைவடையும் என எதிர்பார்க்க வேண்டாம் என உறுதியளித்ததாக குளோப் அன்ட் மெயில் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பிரயாணத்தின் போது கனேடியப் பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் Chrystia Freeland, பாதுகாப்பு அமைச்சர் Harjit Sajjan, நிதி அமைச்சர் Bill Morneau, பொதுப்பாதுகாப்பு அமைச்சர் Ralph Goodale மற்றும் போக்குவரத்து அமைச்சர் Marc Garneau ஆகியோர் சென்றனர்.

ஜஸ்ரின் ரூடோ இந்த அமெரிக்கப் பிரயாணத்தின்போது அமெரிக்க அதிபர்களுடன் சேர்ந்து ஒரு கனேடிய அமெரிக்கப் பெண் தொழில் அதிபர்களுடனும் ஒரு மாநாட்டை நடத்தினார். கனேடிய அமெரிக்கத்தலைவர்கள் இருவரும் தாங்கள் நடத்திய கனேடிய அமெரிக்க பெண் தொழில் அதிபர் மாநாட்டின் இறுதியில் பெண்களது சுய தொழில் வளர்ச்சிக்கும், அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கும், இரண்டு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குமாக 10 பெண் தொழில் அதிபர்களைக் கொண்ட ஒரு சபையை (Council) உருவாக்கினர்.

இதில் 5 கனேடியப் பெண் தொழில் அதிபர்களும் 5 அமெரிக்கப் பெண் தொழில் அதிபர்களும் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். கனேடியப் பெண் தொழில் அதிபர்களாக Annette Verschuren (CEO NRStor Inc.), Dawn Farrell (Trans Aita Corp.), Linda Hasenfratz (Linamar Corp.), Tina Lee (T&T Supermarket Inc.), மற்றும் Monique Leroux(Chair - Investment Quebec) இருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)



# கல்விச்சபை உறுப்பினர் ஜூனிற்றா நாதன் மார்க்கம் - தோர்ன்கில் தொகுதியின் லிபரல் கட்சி வேட்பாளராக விழைகிறார்

ஜோர்க் பகுதி கல்விச்சபை உறுப்பினர், ஜூனிற்றா நாதன், மார்க்கம் - தோர்ன்கில் தொகுதியில் லிபரல் வேட்பாளராகப் போட்டியிட உள்ளார். ஜூனிற்றா ஒரு சமூகசேவையாளர், ஆர்வலர் மற்றும் நீண்டகாலமாக மார்க்கத்தில் வாழ்ந்துவருபவர். அவருடைய கல்வி, சமூக வேலைத் திறன், கல்விச் சபை உறுப்பினராகப் பெற்ற பட்டறிவு ஆகியன, ஜூனிற்றாவை மார்க்கம்-தோர்ன்கில் தொகுதி மக்களின் வலுவான பிரதிநிதி ஆக்குகின்றது.



கடந்த சில தினங்களில் ஜூனிற்றாவின் வேட்புமனுவை ஆதரித்து 1000க்கு மேற்பட்ட தொகுதி மக்கள் லிபரல் கட்சி உறுப்பினராக ஆகியிருக்கிறார்கள். “கடந்த சில தினங்களாக எனக்குக் கிடைத்த ஆதரவு என்னைப் பிரமிக்க வைக்கிறது” என ஜூனிற்றா தெரிவித்தார்.

“கல்விச் சபை உறுப்பினராகவும், நீண்டகால மார்க்க வாசியாகவும், எமது சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் நன்கறிவேன். எமது ஒருங்கிணைந்த குரலாக நாடாளுமன்றத்தில் ஒலிப்பதற்கும், தொகுதி மக்களோடு இணைந்து பொருளாதார வலுவான, சமூக நிறைவான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்” என்றார். ஜூனிற்றா, மக்களால் நேர்மையான முறையில் தேர்ந்தெடுக்கும் திறந்த தேர்வு முறையை (open nomination process) வரவேற்கிறார். அதுவே லிபரல் கட்சியை வலுவான கட்சியாக ஆக்கும் என்பதே ஜூனிற்றாவின் அசைக்கமுடியாத நம்பிக்கை. “மார்க்கம்-தோர்ன்கில் மக்களுக்கு அவர்களை யார் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பதை தெரிவுசெய்யும் உரிமை கிடைக்கவேண்டும்” என ஜூனிற்றா மேலும் தெரிவித்தார்.

ஜோர்க் பகுதி 7, 8 ஆம் வட்டாரக் கல்விச் சபை உறுப்பினராக, ஜூனிற்றா பெற்றோர், மாணவர்களை உள்வாங்கி, பாடசாலைகளில் அவர்களின் பங்களிப்பை கூட்டியிருக்கிறார். பல்லின மக்களின் பண்பாட்டு விழுமியங்களை பாடசாலை மட்டத்திலும், கல்விச்சபை மட்டத்திலும் வெளிக்கொணருவதில் முக்கிய பங்காற்றியிருக்கிறார்.

ஜூனிற்றா நாதன் 2014 ஆம் ஆண்டு நடந்த ஜோர்க் பகுதிக் கல்விச் சபைத் தேர்தலில் மார்க்கம் நகரத்தில் தெரிவான அனைத்து உறுப்பினரையும் விட மிக அதிகமாக வாக்குகளைப் பெற்று வென்றிருந்தார். அத்தோடு, Queen Elizabeth II Diamond Jubilee Medal வென்றவரும் ஆவார்.

கனேடிய மனநல அமைப்பின் இயக்குனராகப் பணியாற்றியவர். அவர் தொடர்ந்தும், சமூக ஈடுபாட்டை, குறிப்பாக இளம் பெண்களின் சமூக வேலைத் திட்டங்களை ஊக்குவிப்பவர்.

ஜூனிற்றா அவர்கள், மார்க்கம்-தோர்ன்கில் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக ஒட்டாவாவில், தொகுதி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கிறார்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




அம்மா
நகை அடைவு மாடம்

AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்
2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com
1.5% முதல் 2%
$1000ற்கு மாதம் $20 மட்டுமே (Month)
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
அம்மாவுக்கு நிகரான சேவை அம்மா நகை அடைவுமாடமே
உங்கள் பழைய நகைகளை நியாயமான விலையில் வாங்கலாம்/விற்கலாம்
அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000*
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்படுகின்றது

## - நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா நேர்காணல்

### நேர்காணல் எஸ்.வி.ஆர். கஜன்

கேள்வி - இன்று அரசியலிலும், அரச நிர்வாகத்திலும் பெண்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு உள்ளது?

பதில் - அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பதற்கு அப்பால் அரச நிர்வாகங்களில் பெண்களின் பங்களிப்பு என்பது அதிகமாகவே இருக்கிறது. குறிப்பாக அரச நிர்வாகங்களில் பெண்கள் ஐந்து வீதத்திற்கும் அதிகமாகவே இருக்கின்றார்கள். இதனையும் மீறி அரச நிர்வாகங்களில் பெண்கள் அதியுயர் பதவிகளிலும் இருக்கின்றார்கள்.

இதனை விடவும் பல்கலைகழகங்களிலும் உயர்தரத்தில் சித்தியடையும் மாணவிகளும் அதிகமாகவே இருக்கின்றார்கள். ஆனால், இரண்டாவதாக நீங்கள் குறிப்பிட்ட அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதாது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது தான். ஏனென்றால், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களில் 13 பேர் மட்டுமே பெண்களாக இருக்கின்றார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்த வரையிலும் நான் ஒருவர் தான் பெண்ணாக இருக்கிறேன். மாகாண சபையை பொறுத்தளவில் வடக்கில் இது போன்றே உள்ளது. பிரதேச சபைகளிலும், நகர சபைகளிலும் பெண்களின் பிரதி நிதித்துவம் குறைவு என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

கேள்வி - பெண்கள் தலைமைத்துவத்தை ஏற்கத் தயக்கம் காட்டுகின்றார்களா? அல்லது ஆணாதிக்கத்தின் விளைவாக இந்த நிலைமையா?

பதில் - பெரும்பாலும் பெண்கள் பல தலைமைத்துவத்தை ஏற்று நடத்துகின்றார்கள். குடும்ப மட்டத்திலும் சரி ஏனைய சமூக மட்டங்களாக இருந்தாலும் சரி பெண்கள் தலைமைத்துவத்தை ஏற்று நடத்துகின்றார்கள். இதனைவிட ஆயுதப் போராட்ட காலங்களில் பெண்கள் தலை மைத்துவத்தை ஏற்றுப் போரையும் வழிநடத்திச் சென்றதை நாங்கள் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். ஆனால், இதன்பின் பெண்களில் தலைமைத்துவம் தொடர்பில் ஒரு தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படாததன் காரணமாகவே அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகக் காணப்படுவதாக நான் கருது கிறேன். ஆனால் இரண்டாவதாகக் கேட்ட ஆணாதிக்கம் தொடர்பான கேள்வி தொடர்பில், எங்களுடைய சமூகத்தில் சகல தரப்பிலும் குடும்பம், அரசியல் போன்ற அனைத்து மட்டங்களிலும் இந்த ஆணாதிக்கம் இருக்கத்தான் செய்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இதனைத் தொடர்ந்தும் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. குறிப்பாகப் பெண்கள் முதலிடமென்று சொல்லுவார்கள். இது மேடையில் மட்டுமே இருக்கின்றது. இதை விடுத்து விட்டுக் கொடுப்புகள், தயார்ப்படுத்தல்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாகப் பெண்கள் ஆணாதிக்க நிலையிலிருந்து விடுபட்டுப் பெண்கள் தாங்களாகவே முன்வந்து பட்டறிவுள்ளவர்களாக, கல்வியில் மேம்பட்டவர்களாகத் தங்களின் சுய ஆளுமையில் விருத்தியை மேற்கொள்ளும் போதுதான் இவ்வாறான ஆதிக்க நிலையிலிருந்து பெண்கள் விடுதலை பெற்றுக்கொள்ள முடியும் என நான் கருதுகின்றேன்.



கேள்வி - வடக்கு, கிழக்குப் பகுதிகளிலே போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகமானோர் இருக்கின்றார்கள். பலர் கணவரை இழந்தவர்களாக இருப்பது அறிந்த விடயம் இவர்களது வாழ்வாதாரத் திற்கான சிறப்பு செயற்றிட்டம் ஏதும் உள்ளதா?

பதில் - போரினால் பாதிக்கப்பட்ட பெண்களில், ஒன்று போரின் போது கணவரை இழந்த பெண்கள், இன்னொன்று கணவரைத் தொலைத்த பெண்கள் கணவரை ஒப்படைத்தும் இதுவரை கணவர் விடுதலையாகாத பெண்கள், அடுத்ததாக நீண்ட காலமாக சிறையிலடைக்கப்பட்ட ஆண்கள் விடுதலையாகாது தவித்துக் கொண்டிருக்கும் பெண்கள். இன்னும் தங்களது பிள்ளைகள் சிறை வைக்கப்பட்டிருப்பதனால் இரட்டைச் சுமைகளைச் சுமந்து தமது வாழ்வைக் கொண்டு நடத்துகின்ற பெண்கள். இவ்வாறு பலவகையான பெண்கள் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள். இவ்வாறான பெண்களுக்கான சிறப்பு வேலைத் திட்டங்கள் என்று செயற்படுகையில் கணவரை இழந்து வாழ்கின்ற பெண், கணவரை பிரிந்து வாழ்கின்ற பெண், மாற்று வலுவுள்ளோர் என்ற வரிசைப்படுத்தலில் வாழ்வாதாரம் வழங்கப்படுவது உண்மைதான். ஆனாலும் சிறப்பு செயற்றிட்டம் என்று இவர்களுக்கு இதுவரை எந்தத் திட்டமும் மேற்கொள்ளப்படாதிருப்பது ஒரு குறைபாடாகவே நான் கூறுவேன். இதற்காக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள மூலப்பொருட்களைக் கொண்டு தொழிற்சாலைகளை அமைத்து நிரந்தரமான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

கேள்வி - மகளிர் அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரு பொதுவான வேலைத் திட்டத்தை மேற்கொள்ள முடியுமா?

பதில் - மகளிர் அமைப்பு என்ற வகையிலே பலமான பதிவு செய்யப்பட்ட பல மகளிர் அமைப்புகள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 'யுவசக்தி' என்ற அமைப்பு இயங்கி வருகின்றது. இந்த அமைப்பில் சுமார் நான்காயிரம் பெண்கள் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். பெண்கள் கிராம மட்டத்திலிருந்து குழுக்களாகவும் பின்பு கொத்தணியாக சம்மேளனமாகவும் இந்த நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகின்றார்கள். இதனை விட 'சங்கமி' என்ற அமைப்பும் இயக்கி வருகின்றது. இது இன, மத, மொழிகளைக் கடந்து அனைவரையும் ஒன்றிணைந்த அமைப்பாகக் காணப்படுகின்றது. இவ்வாறான அமைப்புக்களுக்கூடாகச் செயற்படும் போதுதான் தொடர் மேற்பார்வை மேற்கொள்ள முடியும் என்பது என்னுடைய கருத்து.

சில உதவித்திட்டங்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டாலும் உற்பத்திப் பொருளுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியாமை என்பது ஒரு குறைபாடாகக் காணப்படுகின்றது. எனவே இவ்வாறான பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் ஊடாக இயங்கும் போதுதான் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

கேள்வி - சமீபத்திலே கனடா சென்றிருந்தீர்கள் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் உணர்வலைகள் பற்றிக் கூறுங்கள்?

பதில் - கடந்த தை மாதம் கனேடியத் தமிழ் பேரவையினுடைய அழைப்பிலே நான் கனடா சென்றிருந்தேன். வடகிழக்கு கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளையும் மேம்படுத்துவது தொடர்பில் கருத்தரங்கொன்று அங்கு நடைபெற்றிருந்தது. இது மிகவும் பிரயோசனமாக மூன்று நாள் கருத்தரங்காக நடைபெற்றிருந்தது. இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் மாதங்களில் வட, கிழக்கிலே கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. இதற்கு அப்பால் புலம்பெயர் நண்பர்கள், உறவுகள் எனப் பலரை தனிப்பட்ட ரீதியாகவும், அமைப்புக்கள் ரீதியாகவும் சந்தித்தேன். அவர்களது

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# என்ன ஆகும் அதிமுக எதிர்காலம்?

## தமிழ்நாடு அரசியல்

-சிவதாணு -

நிறுவனர் எம். ஜி. ஆர். நூற்றாண்டை கொண்டாட வேண்டிய வருடத்தில், கட்சியை இந்தியாவின் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக வளர்த்தெடுத்த ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு வரும் முதல் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டிய மாதத்தில், தமிழகத்தை ஆளும் அதிமுக கட்சியின் எதிர்காலமே கேள்விக்குறியாகி உள்ளது. தொண்டர்களால் உருவாக்கப்பட்ட கட்டுக் கோப்பான இயக்கம் என்று வர்ணிக்கப் பட்டது, இன்று அதிகார வெறிபிடித்த நிர்வாகிகளால் சிதைக்கப்பட்டிருக்கிறது. எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் நிகழ்ந்தது போல், ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் தற்போதும் அதிமுக மூன்று அணியாக உடைந்திருக்கிறது. என்ன ஆகும் அதிமுக எதிர்காலம்?

### மூன்று அணி

ஜெயலலிதாவால் முதல்வர் பதவியில் நீடிக்க முடியாத நெருக்கடி ஏற்பட்ட இரண்டு முறையும், தனக்குப் பதிலாக அவர் தேர்வு செய்தது ஓ. பன்னீர் செல்வத்தை தான். இதனாலேயே ஜெயலலிதா மறைவுக்குப் பின்னரும் ஓ.பன்னீர்செல்வம் தமிழக முதல் வரானார். இப்போது இவரது தலைமையில் ஒரு அணி அதிமுகவினர் திரண்டிருக்கி றார்கள். தொண்டர்கள் ஆதரவு தனக்கே அதிகமாக இருக்கிறது என்று ஓபிஎஸ் சொல்கிறார். இன்னொரு பக்கம், கடந்த இரண்டு மாத ஆட்சியைப் பார்த்து, மக்களும் பெருமளவு ஓபிஎஸ்ஸுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்பது இந்த அணியின் பலம்.

ஜெயலலிதாவால் உடன்பிறவாத் தோழி என அழைக்கப்பட்ட சசிகலா தலைமையில் இன்னொரு அணியினர். சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை உறுதி செய்யப்பட்டு சசிகலா சிறையில் இருந்தாலும், அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அணியில் தான் இருக்கிறார்கள். எனவே, ஆட்சி அதிகாரம் தற்போது இவர்கள் வசமே இருக்கிறது. இதுவே தற்போதைக்கு இவர்கள் பலமும் கூட. இந்த அணியின் இன்னொரு பலம், ஜெயலலிதா சேர்த்து வைத்திருக்கும் பணம். (தமிழகத்தில் தேர்தல்களை பணபலமே தீர்மானிக்கிறது என்ற யதார்த்தத்துடன் பார்க்கும்போது இது கூடுதல் பலமாக தெரியும்)

மூன்றாவது அணியினர் ஜெயலலிதா அண்ணன் மகள் தீபா தலைமையில் திரண் டிருக்கும் உதிரிகள். ஜெயலலிதா உயி ரோடு இருந்தது வரைக்கும் தனது உறவி னர்கள் யாரையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளவில்லை. குறிப்பாக, பலமுறை அவரை சந்திக்க முயற்சித்த அண்ணன் மகள் தீபாவை சந்திக்கவேயில்லை. இந் நிலையில், ஜெயலலிதா மரணத்துக்குப் பின்னர் சட்டப்படி அவரது சொத்துக்களு க்கு வாரிசான தீபா, தானே உண்மையான அரசியல் வாரிசு எனக்கூறிக் களத்தில் குதித்துள்ளார். ஆட்சியிலும் கட்சியிலும் பதவிகள் கிடைக்காமல் இருந்த உதரிகள் தீபா தலைமையில் திரண்டிருக்கி றார்கள். சென்னை தி.நகரில் இருக்கும் தீபா வீட்டின் முன்னால் தினமும் தொண்டர்கள் கூட்டம் அலை மோதுகிறது. அவர்கள் மேல் நம்பிக்கை வைத்து, 'எம். ஜி. ஆர். அம்மா தீபா பேரவை' என்ற அமைப்பைத் தொடங்கி, "நான்தான் அதிமுக பொதுச் செயலாளர், இரட்டை இலை சின்னத்தை மீட்டெடுப்பேன்" என்று நம்பிக்கை தெரிவி த்திருக்கிறார், தீபா?

## இந்த மூவரில் முடிசூடப் போவது யார்?

### சசிகலாவின் சறுக்கல்

"1987ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். மறைந்த போது இடைக்கால முதல்வராக நெடுஞ் செழியன் பதவியேற்றார். அப்போது 96 எம்.எல்.ஏக்கள் ஜானகி பக்கமும் 28 எம்.எல்.ஏக்கள் ஜெயலலிதா பக்கமும் நின்றார்கள். கட்சி உடைந்தது. ஆனால், ஜெயலலிதா இறந்தபோது அதுபோல் எந்தக் குழப்பமும் இல்லாமல் சூழல் அவ்வளவு அமைதியாக இருந்தது. பலரு க்கும் அது ஆச்சரியம். ஆனால், அது கானல் நீர்தான் என்பதும், அதிமுகவினர் 'நீரு பூத்த நெருப்பாய்' இத்தனை நாட்க ளும் உள்ளுக்குள்ளே கனன்று கொண்டு தான் இருந்திருக்கிறார்கள் என்பதும், டிசம்பர் 7ஆம் தேதி வெடித்து வெளியே வந்துவிட்டது" எனக்கூறும் தமிழகத்தைச் சேர்ந்த மூத்தப் பத்திரிகையாளர் ஆர். மணி, "ஆட்சியிலும் அதிமுக கட்சியிலும் இன்று ஏற்பட்டிருக்கும் குழப்பங்கள் எல்லா வற்றுக்கும் காரணம் சசிகலாவின் தவறான கணிப்புதான்" என்கிறார்.

"சசிகலாவின் அவசர அவசரமாக முதல்வ ராக ஆசைப்பட்டது அவருக்கே பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. மன்மோகன் சிங்கை பிர தமராக்கி சோனியா காந்தி பின்னாலிருந்து ஆட்சி செய்தது போல், ஒபிஎஸ்ஸை முதல்வராகத் தொடரவிட்டு, பின்னாலிருந்து சசிகலா செயல்பட்டிருக்க வேண்டும். தன் காலில் விழுந்து வணங்கும் ஒருவர் முதல் வராக இருக்கும் சூழ்நிலையில், அவர் ஏன் இவ்வளவு அவசரப்பட்டார் என்று தெரிய வில்லை.

இன்னொரு மிகப்பெரிய தவறு அவரது நாற்காலி வெறி. சசிகலா எதிராக மிகப் பெரும் மக்கள் எதிர்ப்பு இருந்த சூழ்நிலை யில், அதைப்பற்றிக் கவலைப்படாமல், தன் சொல்லுக்கு ஆடும் சட்டமன்ற உறுப்பினர் களை வைத்து, ஆட்சியைக் கைப்பற்றிவிட முயன்றார் சசிகலா. எப்படி எம்.ஜி.ஆர். சுலபமாக ஒரே நாளில் ஆட்சி அதிகாரத் தைக் கைப்பற்றவில்லையோ, அதுபோல் ஜெயலலிதாவும் ஒரே நாளில் அதிகாரத் துக்கு வந்துவிடவில்லை. எம். ஜி. ஆர். இருக்கும்போதே கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் பணியாற்றினார் ஜெயலலிதா. கட்சியிலும் ஆட்சியிலும் சில பதவிகளை பெற்று அனுபவரீதியாகத் தன்னை தயார் படுத்திக் கொண்டார். அது எல்லாம் ஜெயலலிதா கூடவே இருந்த சசிகலாவுக்கு தெரியாமல் இருக்காது. அதிலிருந்து அவர் பாடம் கற்றிருக்க வேண்டும். ஜெயலலிதா போல் கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் நலத் திட்டங்களை செய்து, மக்கள் மத்தியில் இருந்த வெறுப்பை மாற்றி, ஒரு மக்கள் ஆதரவை உருவாக்கி இருக்க வேண்டும்.

இதனை சொல்வதற்குச் சரியான ஆலோ சகர் இல்லையா அல்லது முதல்வர் ஆகி விட்டால் சொத்துக் குவிப்பு வழக்கிலி ருந்து விடுபட்டு விடலாம் என்று சசிகலா தப்புக் கணக்கு போட்டுவிட்டாரா தெரிய வில்லை. ஆனால், அவரது அவசரப்பட்ட அரசியல் காய் நகர்த்தல்தான் இவ்வளவு சீக்கிரமாக அவருக்குத் தண்டனையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை என்பதுடன் 10 ஆண்டுகள் தேர்தலிலும் நிற்க முடியாத நிலையில் இருக்கிறார் சசி- கலா. இந்நிலையில் கட்சியையும் ஆட்சி யையும் தன் கட்டுப்பாட்டில் வைக்கத் தினகரனை நியமித்திருக்கிறார். ஆனால், தினகரன் மட்டுமல்ல, சசிகலா இடத்தை நிரப்ப அவரது குடும்பத்திலிருந்து வேறு ஒருவரும் அரசியலுக்குள் வர முடியாத



சூழ்நிலையே இன்றுள்ளது. சசிகலாவோடு இளவரசி, சுதாகரன் இருவருக்கும்கூட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நடராஜன், தினகரன் இருவரும் ஏற்கெனவே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறார் கள். மேலும் பல வழக்குகள் தற்போது இறுதிக்கட்டத்தில் இருக்கின்றன" என்கிறார் பத்திரிகையாளர் ஆர். மணி.

### ஓ. பன்னீர்செல்வம் மீண்டு வருவாரா?

நம்முடன் பேசிய தமிழகத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரும், 'எம். ஜி. ஆர். வாழ்க்கை வரலாற்றை' எழுதியுள்ளவரு மான துரை கருணா, "இந்திய அரசியலை பொறுத்தவரை எந்தவொரு கட்சியும் ஒரு வலிமையான ஆளுமையின் ஈர்ப்பின் மூலமாகவே பிரபலமடைந்து வந்திருக்கி றது. தமிழ்நாட்டிலும் இதுதான் நிலை. காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகால வெற்றி என்பது காமராஜர் கையில் இருந்தது. அதன்பிறகு அண்ணாவின் ஈர்ப்பின் காரண மாக திமுக ஆட்சிக்கு வரமுடிந்தது. அவருடைய மறைவுக்குப் பிறகு நாவலர்

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)

MORTGAGE PROBLEM?... Too Much Debt?... privacy guaranteed...
$50,000...$100,000...$500,000...$750,000... $1.75 Million... funds for
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
- Refinance & pay off loans, credit cards, 2nd mortgage...
- Consolidate 1st and 2nd mortgages...
- Purchase properties - Residential & Commercial...
- Construction Financing...
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages






# வாக்குறுதிகளில் முற்றாக நம்பிக்கை இழந்துள்ள தமிழ் மக்கள்!

- ஆதித்தன் -

காணாமலாக்கப்பட்டவர்களுக்காகவும், காணிகள் விடுவிப்பிற்காகவும் தமிழர் பிரதேசங்களில் பரவலாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜெனிவா மாநாட்டில் பல கேள்விகளுக்கு- சிக்கல்களுக்கு இலங்கை அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டிய நிலை உள்ளதால் சில இந்தப் போராட்டங்கள் அரசாங்கத்திற்குத் தலையிடி கொடுப்பதாகவே அமைந்துள்ளன. எனவே, சிலவற்றிற்குத் தீர்வுகளைக் காணவேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக காணி விடுவிப்புப் போராட்டங்களை சமாளிக்கும் விதமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி- பரவிப்பாஞ்சான் மக்களின் காணிகள் அவர்களின் தொடர்ச்சியான போராட்டத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த விடுவிப்பு முழுமையானதல்ல என அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள கிராமமே பரவிப்பாஞ்சான். இதில் படையினர் முகாம் இட்டுள்ளனர். போர் முடிவிற்கு வந்தவுடன் இப்பகுதிகளில் படைமுகாம்கள் அமைக்கப்பட்டன. முன்னர், விடுதலைப் புலிகளின் முக்கியமான அரசியல்துறை அலுவலங்கள் பரவிப்பாஞ்சானிலேயே அமைந்திருந்தன. விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகம், சமாதானச் செயலகம் உள்ளிட்ட முக்கிய அலுவலங்கள் அப்பகுதிகளில் அமைந்திருந்தன.

பொதுமக்களின் காணிகளில் புதிய கட்டடங்களை அமைத்தும், உரிமையாளர்கள் இல்லாத அவர்களது வீடுகளிலும் விடுதலைப்புலிகள் தங்கள் அலுவலகங்களை அமைத்திருந்தனர். அக்காலங்களிலும் தங்கள் வீடுகளைத் திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்ட மக்கள் விடுதலைப் புலிகளை தொடர்பு கொண்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மக்கள் விடுதலைப்புலிகளுக்கு தங்கள் வீடுகளை வழங்கியிருந்ததாக படைத்தரப்பு கூறிக் கொண்டு அவற்றை ஆக்கிரமித்திருந்தன. போர் முடிவுற்று எட்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இக்காணிகளை படையினர் உரிமையாளர்களிடம் ஒப்படைத்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் விடாப்பிடியாக அவற்றில் நிலை கொண்டிருந்தனர். நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னரும் இதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பரவிப்பாஞ்சான் மக்கள் பல தடவை தங்களது காணிகள் விடுவிப்பிற்காக போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். வாக்குறுதிகள் வழங்கப்பட்டு, நீண்ட இழுத்தடிப்பின் பின்னர் சில காணிகள் விடுவிக்கப்பட்டன. மிகுதியாக உள்ள காணிகளும் விடுவிக்கப்படும் என்று கூறப்பட்ட போதும், மீண்டும் போராட்டம் நடத்தியே அக்காணிகளைப் பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. எனினும் குறித்த பகுதியில் இன்னமும் முழுமையாக காணிகள் விடுவிக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஜெனீவா அழுத்தங்களிலிருந்து தற்காத்துக் கொள்ளவே இக்காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இதேவேளை, கேப்பாப்பிலவில் நீண்ட நாட்களாக மக்கள் நில மீட்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். விமானப்படையினரின் வசமுள்ள அக்காணிகளில் சிலவற்றை விடுவிப்பதாகப் படைத்தரப்பினர் தற்போது தெரிவித்துள்ளனர். மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் எனவும், ஏனைய காணிகள் அரசாங்கத்திற்கு சொந்தமானதென்றும் அதிலிருந்து படையினர் வெளியேற மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் வாக்குறுதிகளில் நம்பிக்கையின்றி கேப்பாப்பிலவு - பிலவுக் குடியிருப்பு மக்கள் தங்களின் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர். இதேவேளை, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெறும் போராட்டத்திற்கு மாணவர்கள் அமைப்புக்கள் மற்றும், சிவில் அமைப்புக்களும் அதரவு தெரிவித்து வருகின்றன.

வவுனியாவில் இடை நிறுத்தப்பட்ட போராட்டம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய போராட்டத்தின் போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நேரில் வந்து சில வாக்குறுதிகளை வழங்கிச் சென்றார் இதனையடுத்து அந்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஆனால், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் மீளவும் போராட்டம் தொடர்கின்றது. இந்தப் போராட்டத்திற்கு தென்னிலங்கையிலிருந்தும் பாதிக்கப்பட்டவர்கள் வந்து ஆதரவளித்து வருகின்றனர். காணிகள் விடுவிப்பு தொடர்பில் சில முடிவுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டாலும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் எந்தவித தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாத நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஜனாதிபதி



ஆணைக்குழு விசாரணை தொடக்கம், நல்லாட்சி அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்ட காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைப்பது வரை அனைத்து நடவடிக்கைகளும் இழுத்தடிப்பாகவே உள்ளன.

காணமலாக்கப்பட்டவர்கள் பலர் உயிருடன் இல்லை என்று பிரதமர் ரணில் கூறுகின்ற நிலையில் இந்தப் பிரச்சினையை அரசாங்கம் கைவிட்டு விடுமோ என்கிற கேள்விகளும் எழுகின்றன. அவ்வாறெனில் காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது குறித்து நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்கான பொறிமுறை குறித்துத் தற்போது குழப்பமான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சில சமயங்களில் தெரிவிக்கும் கருத்திற்கும் ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்திற்கும் இடையிலேயே முரண்பாடுகள் உள்ளன.

கலப்பு நீதிமன்றம் குறித்தும், வெளிநாட்டு நீதிபதிகளின் கண்காணிப்பு தொடர்பிலும் ஒரு சாதகத் தன்மையுடன் அமைச்சர் மங்கள பல தடவை கருத்து வெளியிட்டிருக்கின்றார். ஆனால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூட வெளிநாட்டு நீதிபதிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். காணி விடுவிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்குப் பொறுப்புக் கூறல், அரசியல் கைதிகளை விடுதலை செய்வது ஆகிய மூன்று பிரச்சினைகளுக்கு நல்லாட்சி அரசாங்கம் துரிதமாக ஒரு நடவடிக்கையினை மேற்கொள்ளும் என ஆட்சிமாற்றத்திற்கு ஆதரவளித்த தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். அதற்கான நம்பிக்கையினை தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களுக்கு ஊட்டினர். ஆட்சிமாற்றத்தின் பின்னர் ஓரளவிற்கு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் தமிழ் மக்கள் திருப்தியடையக் கூடியதாக அவை அமையவில்லை. இதனால் தற்போதைய அரசாங்கத்தின் மீது மட்டுமல்லாமல் நம்பிக்கையூட்டிய தமிழ் அரசியல்வாதிகள் மீதும் மக்கள் வெறுப்படையும் நிலை எற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டையாக எதிர்தரப்பிலுள்ள மகிந்த தலைமையிலான அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குக் கடந்த இரு வருடங்களில் காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆட்சிக்கு வந்த சூட்டுடன், இனவாதிகள் மீண்டும் தலையெடுக்கும் சந்தர்ப்பத்திற்கு முன்னர் அதனை மேற்கொள்வது எளிதாகவே இருந்திருக்கும். தற்போது, இந்த ஆட்சியை கவிழ்ப்போம் எனக் கூறி பேரணிகளை அவர்கள் நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்கின்ற அச்சம் ஆளும் தரப்பிற்கு ஏற்பட்டுள்ளது. இன்னும் காலம் செல்லச் செல்ல அடுத்த தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக எந்தவொரு நடவடிக்கையினையும் தமிழ் மக்களுக்காக மேற்கொள்ள முடியாத நிலையே ஏற்படும்.

அமெரிக்காவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றமும் தமிழர் பிரச்சினைக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ள நிலையில் தற்போது ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 34ஆவது அமர்வில் எவ்வித அழுத்தங்கள் இலங்கைக்கு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை கோரும் கால அவகாசம் வழங்கப்படுமா? அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்கான நிபந்தனைகள் எவையும் விதிக்கப்படுமா? என்கின்ற கேள்விகள் எழுகின்றன.

மார்ச் மாதம் 24ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இத்தொடரில் இலங்கை குறித்து இம்முறை முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதோடு, இலங்கை மீது புதிய தீர்மானமொன்றை கொண்டுவரவுள்ளதாகப் பிரித்தானியா தெரிவித்துள்ளது. ஆகவே, இதனை தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். அவ்வாறு எவையும் நடைபெறாவிட்டால் தமிழ் மக்களின் தற்போதைய போராட்டங்கள் தீவிரமாகும் நிலையே ஏற்படும்.

27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | செல்வி ரஞ்சன் |
| | தாரணி இந்திரராஜ் |

பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




**3+1 Bedrooms, 1 W Room**
Close Proximity To Schools Park, Shopping Centre, Transit & Amenities




**3 Bedrooms, 3 W Room**
Beautiful Gleaming Hardwood Flooring With Upgraded Trim.




**3 Bedrooms, 2 W Room**
Large Rec Room With Wall To Wall Built In Bookcase/Wall Unit And Fireplace




**2 Bedrooms, 1 W Room**
Living Room With Gas Fireplace And W/O To Fenced Yard




**3+1 Bedrooms, 4 W Room**
Finished Basement With A Rec Room




**3 Bedrooms, 4 W Room**
Walk Out To Beautiful Stamped Concrete Patio




**4 Bedrooms, 4 W Room**
Best Town Homes With Lots Of Potential Of Rental Or End Users




**4 Bedrooms, 4 W Room**
Finished Baseement And No Wasted Sq Footage




**3+1 Bedrooms, 2 W Room**
Finished Basement Features Kitchen, Rec Room




**3+1 Bedrooms, 4 W Room**
Family Room Including Gas Fireplace, Living Room




**3+1 Bedrooms, 3 W Room**
Finished Cozy Bsmt Home Has Updated




**4+3 Bedrooms, 4 W Room**
Finished Basement With Separate Walk Out Entrance




**4+1 Bedrooms, 4 W Room**
Sep. Side Entrance To Fin Bsmt In Desirable North Ajax




**4 Bedrooms, 5 W Room**
Individually Architect Designed And Custom Built




**5+1 Bedrooms, 7 W Room**
Unparalleled European Craftsmanship And Is Located In The Exclusive Steele

KZG 647-200-5833



Sell your home
**faster**
and more
**money**

RE/MAX Platinum Club Award

## ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike, you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால் தீர்ப்பு வேறு மாதிரி வந்திருக்கலாம்!

## பேராசிரியர் க. அன்பழகன்

**- சிவதாணு -**

திராவிட இயக்கத்தினர் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றி 50 ஆண்டுகள் நிறைவடைகிறது. 1967 மார்ச் 6 அன்றுதான் முதன்முதலாக திமுக ஆட்சிப் பொறுப்பேற்றது. சி.என். அண்ணாத்துரை தமிழகத்தின் முதலமைச்சரானார். அன்று முதல் இன்றுவரை, இந்த 50 ஆண்டுகளும் திராவிட கட்சிகளே தமிழகத்தை ஆண்டு வருகின்றன. இந்நிலையில், திராவிட இயக்கத்தின் ஆரம்ப கால செயற்பாட்டாளர்களில் இன்றும் இருப்பவர்களில் மூத்தவரும், அண்ணாவின் அன்பு தம்பிகளில் ஒருவரும், திமுக தொடங்கப்பட்டது முதல் இன்றுவரை அதன் முக்கிய தலைவர்களில் ஒருவருமான பேராசிரியர் க. அன்பழகனைச் சந்தித்தோம்.

தமிழக அரசியலின் இன்றைய பல திருப்பங்களுக்கு பிதாமகன் பேராசிரியர் க. அன்பழகன்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிமுக ஆட்சியில் சொத்துக் குவிப்பு வழக்கு சரியான திசையில் செல்லாது என்று அதனை கர்நாடக மாநிலத்துக்கு மாற்ற நீதிமன்றம் சென்று போராடியவர். இவரது நீண்ட நெடிய 13 வருட காலச் சட்டப் போராட்டம் இந்திய அரசியலையே இன்று திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

இனி பேராசிரியர்...

சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்பை எப்படிப் பார்க்கிறீர்கள்?

ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டவர்கள் செய்த மாபெரும் ஊழல் குற்றத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய தண்டனைதான் கிடைத்துள்ளது. அரசு ஊழியராக இருந்து கொண்டு, மக்கள் சேவை செய்யாமல், அதிகார துஷ்பிரயோகம் செய்து, சொத்துக்களைக் குவித்த நம்பர்-1 குற்றவாளி எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஜெயலலிதா இன்று உயிரோடு இருந்திருந்தால், சட்டப்படி அவரும் தண்டனையை அனுபவித்திருப்பார்.



வேறு மாநிலத்தில் நடந்த நிலையிலேயே இத்தனை வருடங்கள் ஒரு வழக்கை இழுத்தடிக்க முடியும் என சாதனை செய்தவர்கள் ஜெயலலிதா தரப்பினர். தமிழகத்தில் இந்த ஊழல் வழக்கு நடந்திருந்தால் நிச்சயமாக நீதி மறுக்கப்படும் என்றுதான் கர்நாடக மாநிலம் பெங்களூருக்கு வழக்கை மாற்றக் கோரினேன். தற்போது நீதி நிலை நிறுத்தப்பட்டிருந்தாலும் இது காலம் தாழ்த்தப்பட்ட தீர்ப்பு. 20 வருடங்களுக்கு மேலாக இழுத்தடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்பு. சிறப்பு நீதிமன்ற நீதியரசர் மைக்கேல் டி. குன்ஹா தீர்ப்பின் அடிப்படையில் முடிவெடுத்திருக்க வேண்டிய இந்த வழக்கில், உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி மட்டும் தவறாகக் கணக்கிட்டு தீர்ப்பை மாற்றாமல் இருந்திருந்தால், இன்று தமிழகத்தின் போக்கே மாறியிருக்கும். ஜெயலலிதா மீண்டும் வெற்றிப் பெற்று முதல்வராக வந்திருக்க முடியாது. சசிகலா பொதுச் செயலாளர் ஆகியிருக்க மாட்டார், முதல்வர் ஆக வேண்டும் என்று கனவில்கூட நினைத்திருக்க மாட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் கடத்தப்பட்டு மக்களுக்கு அறிமுகமில்லாத எடப்பாடி பழனிச்சாமி எல்லாம் முதல்வர் ஆகியிருக்கமாட்டார். ஆனால், ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால் இப்படியொரு தீர்ப்பு வந்திருக்குமா என்பது கேள்விக்குறி தான். தீர்ப்பு வேறு மாதிரி வந்திரு க்கலாம்.

சசிகலா உள்ளிட்டவர்களை தமிழ்நாட்டுச் சிறைக்கு மாற்றும்படி கேட்கப் போவதாக செய்திகள் வருகின்றன. அதை நீங்கள் எதிர்ப்பீர்களா?

நிச்சயமாக. என்னுடைய நிலைப்பாடு சசிகலா பெங்களூர் சிறையிலேயே-தான் இருக்க வேண்டும். அவர், இங்கு மாற்றப்படக் கூடாது. குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையிலும் சசிகலா தமிழக அரசியல் நிகழ்வுகளில் தலையிட்டுக் கொண்டிருக்கிறார். “சிறைச்சாலையில் இருந்தும் தமிழக ஆட்சி அதிகாரத்தை நான் நடத்துவேன்” என்று வெளிப்படையாகவே சொல்கிறார். இந்த நிலையில் தமிழக சிறைக்கு மாற்றப்பட்டால் தலையீடு இன்னும் அதிகமாகும். தமிழகச் சிறையே தமிழக தலைமை செயலகம்போல் மாறிவி டும். சிறைத்துறை ஏ.டி.ஜி.பி. சபாநாயகர் போல் மாறி விடுவார். அவரது ஆதரவாளர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் தினந்தோறும் சசிகலாவை சிறையில் சந்திப்பதே தொடர் வேலையாக இருக்கும்.

திமுக கடுமையாக எதிர்த்தும் அதிமுக தங்களது பெரும்பான்மையை நிரூபித்துள்ளதே?

கூவத்தூர் கும்மாளம் குறித்து நாடே அறியும். அதன்படி பார்த்தால் இது உண்மையான பெரும்பான்மை அல்ல. கூவத்தூரில் சட்டமன்ற உறுப்பினர்களை அடைத்து வைத்திருந்ததே சட்டவிரோதமானது. அது அவர்கள் சார்ந்த தொகுதி மக்களை அடைத்து வைத்ததற்கு சமம். மக்கள் இதையெல்லாம் பார்த்துக் கொந்தளித்துப் போயிருக்கிறார்கள். அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கடுமையான வெறுப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்.

ஆனால், சட்டசபையில் நிகழ்ந்த அமளிகளால், ஸ்டாலினுக்கு மக்கள் மத்தியில் உருவாகிவந்த ஒரு நற்பெயர் குறைந்திருப்பதாகவும் சிலர் சொல்கிறார்களே?

அது தவறான கணிப்பு. செயல் தலைவரின் செல்வாக்கு, அவருடைய உரிமைகள், எந்த விதத்திலும் பொதுமக்களால் வெறுக்கப்படாது. திமுக சட்டசபையில் நடந்து கொண்டதை, நியாயத்துக்காகப் போராடியதை மக்கள் ஆதரிக்கத்தான் செய்கிறார்கள். அதிமுக அரசு மீது மக்கள் மிகக் கடுமையான அதிருப்தியில் உள்ளார்கள் என்பதுதான் இன்றைய யதார்த்தம். ஜெயலலிதாவுக்கே தீர்ப்புக்குப் பிறகு ஆதரவு குறைந்துவிட்டது என்னும் நிலையில் இந்த ஆட்சிக்கு மக்கள் ஆதரவு இருக்கும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? இப்போது, மக்கள் திமுக பக்கம் நிற்கிறார்கள்.

சட்டசபையில் பெரும்பான்மை நிரூபிக்கும் நாளன்று ஓ.பி.எஸ். அணி அமைதி காத்தது, ஏன்?

உங்களுக்கு மட்டுமல்ல பொதுமக்கள் அனைவரது மனதிலும் இந்தக் கேள்வி எழுந்திருக்கிறது. ஓ.பி.எஸ்.ஸுக்கு மக்களிடத்தில் செல்வாக்கு இல்லை என்பதாலேயே அவர் அமைதி காத்தார். ஆனால். திமுக அப்படியல்ல. அது மக்களுக்கான கட்சி. எப்போதும் மக்கள் குரலாக ஓங்கி ஒலிக்கும்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் என்னை சாதிரீதியாக இழிவு-படுத்திவிட்டது திமுக என்று சொல்லியிருக்கிறாரே சபாநாயகர்?

இதில், சாதி பிரச்சினை அல்ல அவரது சதிதான் பிரச்சினை.

தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்களின் சகாப்தம் முடிந்துவிட்டது என்று பாஜகவினர் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். திராவிட இயக்கத்தின் மூத்தத் தலைவரான

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


Make a call, make a difference.



If you've witnessed or have concerns that an adult with a developmental disability is being abused or neglected, you can help.

Find out how at: **ontario.ca/ReportON**

**1-800-575-2222**
**reportONdisability@ontario.ca**
**TTY: 416-916-0549 or Toll Free: 1-844-309-1025**

Paid for by the Government of Ontario

ReportON | Ontario

# நாமும் நமது இல்லமும் - 482

## ஆதனவியாபாரம் ஜனவரி - பெப்ரவரி 2017

**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



இதுவரை, இந்த வருடத்தின் (2017) முதல் இரண்டு மாதங்களும் (ஜனவரி, பெப்ரவரி) ஆதனவியாபாரத்தில் முக்கியமானதாகக் காணப்பட்டுள்ளது. இன்னும் பலர் ஒரு வீட்டிற்காகப் போட்டி போடுகின்றார்கள் (Multiple Offers). பொதுவாக இக்குளிர் மாதங்கள் ஆதன வியாபாரத்தில் மந்தமான மாதங்கள். ஆனர் இன்றைய நிலை இவ்வாறு இருப்பதால், நிச்சயமாக முதல் ஆறு மாதங்களும் ஆதன வியாபாரம், அபாரமாக இருக்கும் என்பதனை எதிர்வு கூறலாம். இளவேனிற்காலத்தில் பலர் தமது ஆதனங்களை சந்தைக்குக் கொண்டுவருவது இயல்பு. இதனால் எதிர்வரும் நான்கு மாதங்களில் அதிகமான ஆதனங்களை சந்தையில் எதிர்பார்க்கலாம். வியாபாரமும் அதிகமாக இருக்கும்.

இந்த வருடத்திலும் 300,000 இற்கும் மேற்பட்ட புதியவர்கள் கனடாவிற்கு வருவார்கள் என்பது தெரிந்த விடயமே. இதில் 100,000 மக்கள் ரொறொன்ரோ பெரும்பாகத்தையும் அதனை சுற்றியுள்ள பகுதியிலும் (Greater Golden Shoe Area) இல் குடியேறுவார்கள். இதில் குறிப்பிட்ட மக்கள் ஆதனம் கொள்வனவு செய்வதற்கேற்ப தமது பணத்தை கொண்டு வருவார்கள். மீதி மக்களில் அனேகர் 6, 7 வருடங்களில் தமது முதல் இல்லத்தை வாங்குவார்கள். இது வழமையான கணக்கு. எனினும் அரசாங்கங்களின் இறுக்கமான சட்டங்களினால் 2017 இல் நிர்மாணம் செய்யப்பட இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை குறைவானதாகவே காணப்படும். இதனால் அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். இந்த நிலைமை ஏற்கனவே ஏற்பட்டுள்ளது. அண்மையில் அடுக்குமாடி விலை அதிகரிப்பு ஏற்பட்டதனைக் காணலாம்.

நிலத்துடன் அமைந்துள்ள வீடு வாங்குபவர்களுக்கு எதிர்காலத்தில் நிலத்துடனான தொடர் வீடுகளே (attached house) அவர்களின் தெரிவாக இருக்கப் போகின்றது. ரொறொன்ரோ பகுதியில் தனி வீடுகளின் விலை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 25% இற்கு மேலாக, ஏற்கனவே அதிகரித்துள்ளது. இதனால் அடுக்குமாடி மனை வாங்குபவர்களும் 2 அல்லது 3 அறையுள்ள மனைகளையே தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள். அல்லது, நீண்டதூரபயணத்தில் தொழிலுக்கு வரக்கூடிய இடத்தில், நிலத்துடன் சேர்ந்த பெரிய வீடுகளை வாங்க வேண்டியுள்ளது. இதற்குப் பலர் தம்மை தயார் செய்துள்ளார்கள்.



அமெரிக்காவில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் கனேடிய ஆதன வியாபாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. மேலும் பலர் தெற்கிலிருந்து, வடக்கிற்கு நாளுக்கு நாள் வந்த வண்ணம் உள்ளார்கள். இதன் நிலைமை குறிப்பிட்ட காலம் தொடரலாம்? இவர்கள் குடியிருக்க ஆதனம் தேவையே?

அமெரிக்காவில் அண்மையில் ஏற்பட்ட வட்டி வீத அதிகரிப்பு, கனேடிய வட்டிவீத அதிகரிப்பை நிச்சயமாக எதிர்வரும் காலங்களில் ஏற்படுத்தும். இதனால் எதிர்காலத்தில் முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களுக்கு இறுக்கத்தை ஏற்படுத்தும். இந்நிலை அடுத்த வருடம் (2018) அல்லது அதற்கு அடுத்த வருடத்தில் (2019) ஏற்படலாம்.

அரசுகளின் புதிய சட்டங்கள் ஆதன வியாபாரத்திற்குக் கடிவாளம் போடாமல் இருந்தால், 2017 ஆம் ஆண்டும் ஒரு சாதனை ஆண்டாகவே மிளிரும்.



# சத்குரு - கேள்வி - பதில்



சத்குரு வாசுதேவ்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

கேள்வி: "ஆன்மா என்றால் என்ன? உயிரோடு இருத்தலுக்கும், மரணத்துக்கும் இடைப்பட்ட வாழ்வு ஒன்று உண்டா?"

சத்குரு: உங்கள் அனுபவத்தில் இல்லாத ஒன்றைப் பற்றி மனதில் யாரோ சொல்வதை வைத்துக் கற்பனைகளை வளர்த்துக் கொள்வதால் என்ன சாதிக்கப் போகிறீர்கள்? ஆன்மா என்பது பற்றி மொத்த சமூகமே கூடி நின்று ஏதோ சொன்னாலும், அது உங்கள் அனுபவத்தில் வராதவரை, அதற்கு என்ன முக்கியத்துவம் தரமுடியும்? உங்களுக்குக் கிடைக்கக் கூடிய அனுபவங்களைப் பற்றி முற்கூட்டியே வேறொருவர் சொல்வதை வைத்து மனதைத் தயார் செய்து வைப்பது, மனதை ஒருவிதச் சிறையில் அடைத்தது போலாகிவிடும் அல்லவா? ஆன்மா இருக்கிறதா இல்லையா என்பது பற்றி நான் விவாதிக்கவில்லை. ஆனால், உங்கள் நேரடி அனுபவத்தில் இல்லாததைப் பற்றிப் பேசுவது என்பது பொய்களை விதைப்பது போலாகும். அவற்றை நீங்கள் நம்புவது பொய்யான வாழ்க்கைக்கு உங்களை நீங்களே தள்ளுவது போலாகும் என்கிறேன்.

கேள்வி: தமிழ் மக்களுடனான உங்களுடைய அனுபவத்தையும் அவர்களைப் பற்றிய உங்களுடைய கருத்தையும் சொல்ல முடியுமா?

சத்குரு: தமிழ் மக்கள்

அழுக்குப் பாதை, அனலாய் வெயில்,
இட்லி சாம்பார் இங்கே கிடைக்கும்.

ஊரிலும் கோயிலிலும் உற்சாக மக்கள்
வேர்வையில் நனைவர் இழுத்தும் தள்ளியும்.



சுவைத்துச் சாப்பிட வகைபல சட்டினிபோல்
வெயில்காலம் வெவ்வேறு நிறங்களில்.

வேர்வையும் மூச்சும் வெளியேற்றும் வாசம்,
விரும்பும்விதமாய் இருக்காதெனினும்
இதயத்தின் இனிய நறுமணம் இழுக்கும்
இங்கே.
மகிழ்ச்சியில் துள்ளும் இம்மாநிற
மனிதர்கள்,
மனதைத் தொடும் வசீகரம் இல்லைதான்
ஆனால் என்ன! தவிப்பாய் தெய்வீக
ராமனும்
நாடியது இவர்கள் தயவைத்தான்.

பார்க்க அப்பாவிகள் ஆனால் பரவச
மனிதர்கள்
கொள்ளை கொண்டார்கள் என் இதயத்தை
மொத்தமாய், மொத்தமாய்

அவர்களின் தளரா நம்பிக்கையும் ஆன்ம
தாகமும்
என் குருவின் கனவை நிஜமாக்க வைத்தது,
இங்கே

அன்பும் அருளும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

கடவுளுக்கு உண்மையில் எத்தனை முகங்கள்?'

'கடவுள் என்பவர் உங்களைவிட பிரமாண்டமானவராக இருக்க வேண்டும் என்பதற்காக, உங்கள் கடவுளுக்கு பதினாறு கைகள் இருப்பதாக நீங்கள் தான் உருவகப்படுத்தினீர்கள். கடவுளுக்கு நான்கு முகங்கள், ஆறுமுகங்கள் என்று கொடுத்தீர்கள்.

உண்மையைச் சொல்லுங்கள்... உங்களுக்கு எத்தனை முகங்கள்? வீட்டில் ஒரு முகம், அலுவலகத்தில் ஒரு முகம், நண்பர்களிடத்தில் ஒரு முகம், பகைவர் களிடத்தில் ஒரு முகம், தெருவுக்குத் தெரு மாற்றுவதற்கு என்று எத்தனை முகங்களைச் சுமந்து கொண்டு இருக்கிறீர்கள்?

முருகனைவிட உங்களுக்கு அல்லவா அதிக முகங்கள்?

முகங்களைக் கணக்கெடுத்துக் கடவுளைத் தீர்மானிப்பது என்றால், உங்கள் அரசியல்வாதிகளுக்கு எதிரில் எந்தக் கடவுளாலும் போட்டி போட முடியாதே!

நம் முன்னோர்கள் கடவுள்களுக்குத் தோற்றங்கள் கொடுத்ததற்கு வேறு பல புத்திசாலித்தனமான காரணங்கள் இருக்கின்றன. அவற்றைத் தெரிந்து கொள்ளாமல், கடவுளைத் தெரிந்து கொண்டு விட்டதாக நினைப்பது உங்கள் மன அகங்காரத்துக்கு தீனி போடும் சமாசாரம். அவ்வளவே!'


## 4 day Inner Engineering Program

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – March 23 - 26, 2017*

*TIMINGS:* Thursday March 23 : 6:30pm – 9:45pm
Friday March 24 : 6:30pm – 9:45pm
Saturday March 25 : 8:30am – 7:00pm
**Sunday March 26 :** 7:30am – 7:00pm

*VENUE -* ***TORONTO***
Noor Cultural Centre
123 Wynford Dr., North York (Toronto), ON M3C 1K1

***MISSISSAUGA***
Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org /Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*







# கனேடிய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி



கனேடியப் பிரதமரும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையேயான பெப்பிரவரி 23 ஆம் திகதிய தொலைபேசிக் கலந்துரையாடலில் இருவரும் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பாதுகாப்பு, கனேடிய மரவியாபாரம் (Softwood Lumber), நடைபெற உள்ள G7 மற்றும் G20 மாநாடுகள் பற்றியும் உரையாடினார்கள். அவர்கள் தமது பெப்பிரவரி 13இல் நடைபெற்ற சந்திப்பில் உருவாக்கப்பட்ட பெண்கள் சுய தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமான சபையின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும் இந்தத் தொலைபேசி உரையாடலின் போது கலந்துரையாடினார்கள்.

# 112 அடி உயர ஆதியோகி சிவன் சிலை திறப்பு விழா

“பாரம்பரிய யோகா கலையை, அதன் ஆத்மார்த்தமான சாராம்சத்துடன் காப்பாற்ற வேண்டியது அவசியம்,” எனப், பிரதமர் மோடி, கோவை ஈஷா யோக மைய விழா வில் பேசினார். கோவை அருகே பூண்டி வெள்ளியங்கிரியில், “ஈஷா யோகா மையம்” சார்பில், 112 அடி உயர பிரம் மாண்ட ஆதியோகி சிவன் சிலை திறப்பு விழா நடைபெற்றது. பிரதமர் மோடி, “மகா யோகா யக்ஞம்” நிகழ்ச்சியில், பங்கேற்று, சிலை பிரதிஷ்டையை ஆரம்பித்து வைத்-தார். தொடர்ந்து, ஜக்கி வாசுதேவ் எழுதிய, “ஆதி யோகி - யோகத்தின் மூலம்” என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, “எல்லோருக்கும் வணக்கம்” எனத் தமிழில் கூறி, தொடர்ந்து, ஆங்கிலத்தில் உரையாற்றினார். மோடி பேசியதாவது: மகா சிவராத்திரி தினத்தில் கோவையில், இந் நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் பெருமை கொள்கிறேன். பல விழாக்கள் உள்ளன. எனினும் சிவனு-டன் நேரடித் தொடர்பு கொண்ட இந்த மகாசிவராத்திரி விழா மகத்துவம் வாய்ந்தது. காரணம், மகா தேவன் ஒருவர் மட்டுமே என்பதே. பல மந்திரங்கள் உள்ளன. ஆனால், வலிமை வாய்ந்தது, சிவனுடன் தொடர்புடைய, மகா மிருதஞ்சயமந்திரம்.

ஈசனின் சிறப்பம்சத்துக்கு இதுவே சான்று. தெய்வீக வழிபாடு மூலம் ஒற்றுமையை உணர்த்துவதே, மகா சிவராத்திரி விழா. ஜாதி, மதம், நிறம் உள்ளிட்ட அனைத்தையும் மறந்து அனைவரும் ஒன்று, என்பதை உணர்த்தும் விழா இது.

மகா சிவராத்திரி விழா, இரவு முழுவதும் தொடரும். இயற்கையை பாதுகாத்து வாழ வேண்டும் என்பதை, மனிதர்களுக்கு உணர்த்தும் விழாவாகும். எனது பூர்வீக மாநிலமான குஜராத், சோமநாதரின் பூமி. மக்கள் பணியில் அர்பணிப்புடன் ஈடுபட்டுள் ளதால், என்னைக் காசி விஸ்வநாதரின் பூமி அழைத்து சென்றது.

சோமநாதர் பூமியிலிருந்து விஸ்வநாதர் பூமிக்கும், தற்போது கோவைக்கும் என்னை அழைத்து வந்துள்ளது. இதிலிருந்து ஒன்று புரிகிறது. சிவன் அனைத்து இடத்திலும் இருக்கிறார் என்பதை இது உணர்த்துகிறது. இத்தகைய பூமியிலிருந்து வந்த காரணத்தால், மகாசிவராத்திரி விழாவில் பற்கேற்பது அளவற்ற மகிழ்ச்சி அளிக்கிறது. பக்தர்கள் உலகின் பல்வேறு மூலையிலிருந்து வந்தாலும், அவர்களின் வழிபாடு முறை வேறுபட்டிருந்தாலும், எண்ணம் ஆன்மிகத்தை உணர்வதே. ஒவ்வொரு மனித இருதயத்திலும், இந்த ஆன்மிகத்தை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. 112 அடி கொண்ட இந்தப் பிரம்மாண்ட சிலை முன் நிற்கும் போது, அனைவரும்



யோகத்தின் மகத்துவத்தை உணரவேண்டும் என்பதை, அது பிரதிபலிப்பது போல் உள்ளது, சிவனுடைய மகத்துவத்தை நம்மை உணரச் செய்கிறது.

இன்று யோகா பல துாரம் கடந்து வந்துள்ளது. பல முறைகள், பல பயிற்சிகள் என வேறுபட்டுள்ளது. இதுதான் யோகத்தின் மகிமை. பல செயல்முறைகள் இருந்தாலும், பிரசித்திபெற்ற கலையாக யோகா கடை-பிடிக்கப்பட்டு வருகிறது. ஜீவனில் இருந்து சிவனுக்கு அழைத்துச் செல்லும் கலையே

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)


INCOME PROTECTION INSURANCE

வருமான பாதுகாப்பு காப்புறுதி

- நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்போம்.
- We can protect you and your family!
- நீங்கள் சுகவீனமுற்றதனாலோ அல்லது காயமடை-ந்ததனாலோ வேலை செய்ய முடியாவிட்டால் இந்தக் காப்புறுதி உங்கள் வருமானத்தை ஈடு செய்யும்.
- If you are unable to work due to injury or illness replace your income with disability insurance
- இந்தக் காப்புறுதி ஆயுள்காப்புறுதியைப் போலவே மிகவும் முக்கியமானது.
- It's just as important as Life Insurance

- 100% return of premium those who are under 40 years old(some conditions apply)
- We can cover up to $10,000 per month.
- We are specializing in coverage for truck drivers, Real Estate agents, Mortgage professionals, self-employed and construction workers.
- Also we can cover your fixed business expenses if you are unable to work.
- Included travel insurance for the family. 5 Million Per person / 60 days per trip. Unlimited trips per year
- Extended Medical $100,000



Nimal Subramaniam
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UCI LaCapitale iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# அறிவியல் தமிழ் ஆளுமை

## அஞ்சலி - மணவை முஸ்தபா

*15.06.1935 – 06.02.2017*

**தளவாய் சுந்தரம்**

**மணவை முஸ்தபாவின் இளம் வயதில் நடந்த ஒரு சம்பவம்...**

அன்றுதான் முஸ்தபாவுக்கு தமிழக அரசு கல்லூரி ஆசிரியர் பணி கிடைத்திருந்தது. பணிக்கான ஆணையை கையில் வாங்கிய கையோடு தனது குருநாதரும் தமிழறிஞரு மான தொ.பொ. மீனாட்சி சுந்தரம் அவர் களிடம் ஆசி பெறுவதற்காக அண்ணாம லைப் பல்கலைக் கழகம் போனார், முஸ் தபா. அங்கே அப்போது, 'பயிற்றுமொழி ஆங்கிலமா? தமிழா?' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றுக் கொண்டி ருந்தது. தொ.பொ.மீ.க் காக காத்திருந்த நேரத்தில், என்ன பேசுகிறார்கள் எனக் கேட்போமே என அங்கே போய் உட்-கார்ந்தார்.

மேடையில், 'தமிழ் படித்தால் வேலை கிடை க்காது; தமிழைப் பயிற்று மொழி ஆக்கு வது எதிர்கால சந்ததியினரை குழி தோண் டிப் புதைக்கிற முயற்சி' என்கிற ரீதியில் பேசிக்கொண்டிருந்தார் ஒரு பேராசிரியர். அதைக் கேட்ட இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடலே எரிந்து விடும்போல் இருந்தது. நிதானமிழந்து சட்டென எழுந்து நின்றார். பேசிக் கொண்டிருந்த பேராசிரியர் இவரது வேகத்தைப் பார்த்து பேச்சையே நிறுத்திவிட்டார். எழுந்து நின்ற முஸ்தபா நேரே மேடைக்குச் சென்றார். 'எத்தகைய அரிய அறிவியல், தொழில்நுட்பச் செய்திக ளையும் தமிழால் தரமுடியும். எப்படி என்று கேட்பவர்களுக்கு

வாய்ச் சொல்லால் விளக்கம் தராமல் செயல்மூலம் நிறுவுவதையே வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகக் கொண்டு, எனக்கு கிடைத்துள்ள இந்தக் கல்லூரி ஆசிரியர் பணியை இப்போதே விட்டுவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு மேடையிலேயே பணி க்கான ஆணையை கிழித்துப் போட்டார்.

'அறிவியல் சார்ந்த செய்திகளை தமிழில் கொண்டு வருவதுதான் இனி என் கடமை' என்று முடிவு செய்து, அன்று பணியைத் தொடங்கியவர், பெப்ரவரி 6ஆம் தேதி, தனது 81ஆவது வயதில் காலமாவது வரை க்கும் அறிவியல் தமிழுக்காகவே இடை விடாமல் இயங்கினார். முதல் நாள் இருந்த வேகத்தையும் கோபத்தையும் கடைசி வரை

குறையாமல் பார்த்துக் கொண்டார். அறிவி யல், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்குத் தக்க வாறு தமிழ்மொழி முன்னேற வேண்டும். அப்போதுதான் தமிழ் வாழும் என்கிற எதிர் கால நோக்குடன் பணியாற்றிய மணவை முஸ்தபா, ஐம்பதுக்கும் மேற்பட்ட புத்தகங் கள் எழுதியுள்ளார். அதில் எட்டு புத்தகங் கள் அறிவியல், தொழில்நுட்பம்,

மருத்துவம், கணினி போன்ற துறை சார்ந்த கலைச் சொல் அகராதிகள். 'கணினிக்கு தமிழால் ஈடுகொடுக்க முடிந்தால்தான் தமிழ் மொழி எதிர்காலத்தில் வாழும் இல் லையென்றால் தமிழ் மறைந்துபோகும்' என உணர்ந்த மணவை முஸ்தபா, கணினிக் களஞ்சியப் பேரகராதியை உருவாக்கினார். தமிழில் கணினி சார்ந்த கலைச் சொற் களை உருவாக்குவதில் துறை சார் வல்லு நர்களுடன் இணைந்து பணியாற்றி முக்கிய பங்கு வகித்தார்.

'யுனெஸ்கோ கூரியர்' பத்திரிகை முதலில் உலக அளவில் ஆறு மொழிகளில் மட்டும் தான் வெளியானது. ஆரம்ப காலத்தில் சென்னையில் உள்ள கன்னிமாரா நூலகத் திற்கு அதன் ஆங்கில பதிப்பு வரும். அப் போது அங்கே யுனெஸ்கோ கூரியரின் தீவிர வாசகர்களாக இருந்தவர்களில் ஒரு வர் சி.என். அண்ணாத்துரை. 'யுனெஸ்கோ கூரியர்' படிப்பதற்காக மட்டுமே கன்னிமாரா நூலகத்துக்கு அண்ணாத்துரை சென்ற தின ங்களும் உண்டு. அந்தப் பத்திரிகையால் கவரப்பட்ட அண்ணா, அப்போது யுனெ ஸ்கோ பேரமைப்பின் துணை இயக்குந ராக இருந்த ஆதிசேஷையாவிடம், யுனெ ஸ்கோ கூரியர் தமிழில் வெளியாக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார். அதன் விளைவு 1967 இல் முதல் தமிழில் வெளி வரத் தொடங்கியது 'யுனெஸ்கோ கூரியர்'.

அதன் ஆசிரியராகவும் வெளியீட்டாளரா கவும் யாரை நியமிக்கலாம் என்ற விவாதம் வந்தபோது, அன்று அனைவரின் தேர்வா கவும் இருந்த ஒரே ஆளுமை, மணவை முஸ்தபாதான். அன்றிலிருந்து 'யுனெஸ்கோ கூரியர்' தமிழ்ப் பதிப்பு நின்று போனது வரை அந்தப் பொறுப்புகளில் இருந்தார்.

தமிழுக்கு மணவை முஸ்தபாவின் இன் னொரு முக்கியமான பங்களிப்பு தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெறக் குரல் கொடுத்ததுடன், ஜல்லிக்கட்டுக்காக போரா டிய மாணவர்கள் போல், கடைசிவரை

அதில் உறுதியாக இருந்தது. 'யுனெஸ்கோ கூரியர்' பத்திரிகையில் பணியாற்றியதால்



உலகம் முழுக்க முக்கிய பல்கலைக் கழக ங்கள், கருத்தரங்கு களுக்கு போகும் வாய் ப்பு இவருக்கு கிடைத்தது. ஆனால், முதல் பயணமே அவருக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்தது. தமிழ் மிகவும் பழமையான ஆறு மொழிகளில் ஒன்று என்பதால் உல கம் முழுக்க முக்கிய பல்கலைக் கழகங்களில் அதற்குத் தனியாக ஒரு துறை இருக்கும் என்று நினைத்துக் கொண்டு விமானம் ஏறினார் முஸ்தபா. ஆனால், பல பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதத் துறையின் ஒரு பகுதியா-கதான் தமிழ் இருப்பதைப் பார்த்தார்.

இந்த அனுபவத்துடன், 1981இல் மதுரை யில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் முதன்முதலாக தமிழுக்கு செம்மொழி அங் கீகாரம் பெறவேண்டிய அவசியம், அதன் தகுதிகள், செம்மொழி அங்கீகாரம் பெறு வதால் தமிழுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி விரிவாகப் பேசினார். அதைக்கேட்ட அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். "இதனை ஒரு கோரிக்கையாக எழுதித் தாருங்கள். கட்டாயம் செய்ய வேண்டிய பணி இது" என்றார்.

மணவை முஸ்தபா அறிக்கையை எம்.ஜி.ஆர். தமிழ் வளர்ச்சித் துறை செய லாளருக்கு அனுப்பினார். ஒன்றும் நடக்க வில்லை. நாட்கள் சென்றன. 1989 இல் கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், அன்றைய கல்வியமைச்சர் அன்பழகனை அனுப்பி, 'தமிழுக்கு என்ன என்ன செய்ய வேண்டும்' என்று மணவை முஸ்தபாவிடம் கேட்டுவரச் சொன்னார். அன்பழகனிடம் முதல் கோரிக்கையாக, தமிழுக்கு செம் மொழி அங்கீகாரம் பெறும் திட்டத்தை சொன்னார் மணவை முஸ்தபா. அதற்கான முயற்சிகளை கலைஞர் அரசு எடுத்தது. ஆனால், அது செயல்பாட்டுக்கு வரும் போது ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. ஆனாலும், மணவை முஸ்தபா தளர வில்லை. 1995இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அன்றைய முதல் வர் ஜெயலலிதாவுக்கு செம்மொழி அங்கீ காரம் பற்றிக் கடிதம் எழுதினார். சில கோப்புகள் நகர்ந்தன. மீண்டும் பெரிய இடைவெளி. 1996இல் மீண்டும் தி.மு.க. அரசு அமைத்தபோது மீண்டும் மணவை முஸ்தபா அதே கோரிக்கையுடன் போய் நின்றார். இவரது நீண்ட நெடிய தளராத போராட்டத்தின் விளைவுதான் தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெற்றது.

எதிரெதிர் கருத்து நிலைப்பாடு கொண்ட தமிழ் அறிஞர்கள் தெ.பொ. மீனாட்சி சுந்த ரம், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசி கர், தேவநேயப் பாவாணர் இவர்கள் மூன்று பேருடனும் மாணவப் பருவத்திலேயே நெருக்கமாக இருந்தவர் மணவை முஸ்தபா. மூன்று பேருக்கும் செல்லப் பிள்ளை என் பதைப் பயன்படுத்தி மூவருக்கும் இடையே ஒரு ஒருங்கிணைவை ஏற்படுத்தி, அதன் மூலம் தமிழ் மொழிக்கு பல நல்ல விஷயங்கள் கிடைக்க வழி செய்தார்.

நவீன அறிவியல், தொழில்நுட்ப கண்டு பிடிப்புகளுக்கு ஏற்ப தமிழ் மொழியை வளர்த்து நம்மிடம் ஒப்படைத்துச் சென்றிரு க்கிறார் மணவை முஸ்தபா. அந்த தீப த்தை சுடர்விடச் செய்து, எதிர்கால தலை முறையிடம் ஒப்படைப்பதுதான், நாம் அவரு க்கு செலுத்தும் சரியான அஞ்சலி.






உலகத் தொல்காப்பிய மன்றம் - கனடாக் கிளை

தொல்காப்பிய மன்றம் நடத்தும் கருத்தரங்கம்

காலம்: பங்குனி (மார்ச்) 11, 2017 மு.ப. 9.30 மணி

உரைஞர்: **முனைவர் திருமதி, செல்வநாயகி ஸ்ரீதாஸ்** அவர்கள்

விரிவுரையாளர், நிருவாகி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா வளாகம்

பேசுபொருள்: **"திருமணம் பற்றிய தொல்காப்பியர் கோட்பாடுகளும் அவற்றிற்கான பின்புலமும்"**

உரைஞர்: **திரு. த. சிவபாலு** B.Ed.Hons, M.A. அவர்கள்

பேசுபொருள்: **"திருமண முறைகள்: தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றுவரை"** - ஒரு பார்வை

இடம்: 1240 Ellesmere Road, Scarborough, ON M1P-2X4 (Ellesmere& Brimley) அண்ணாமலை வளாகம்

# மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கனடாவில் பிடித்துக் கொடுக்கும் நிறுவனங்கள்

## கனடிய தகவல் தொடர் 263



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

கனடாவில் பின்வரும் எச்சரிக்கைப் பதாகை யினை பலரும் பல இடங்களில், வீதிகளில், அதிவேக தெருக்களில் கண்டிப்பீர்கள்.

Report Impaired Driving Call 911, MADD Canada - மதுபோதையில் வாகனம் செலுத் துபவர்களை கண்டால் உடனடியாக 911க்கு அழைத்து முறைப்பாடு செய்யு ங்கள் என தமிழில் பொருட்படுத்தலாம். இதேமாதிரி அனேகமாகக் கடற்கரைகளில் இப்படி ஒரு பதாகை இருக்கும்.

Report Impaired Boating Call 911, MADD Canada - மதுபோதையில் கடலில் வள்ளம் ஓட்டுபவர்களைக் கண்டால் உடனடியாக 911க்கு அழைத்து அறிவியுங்கள்.

கோடை காலங்களில் கடலில், நீரோடை-களில் மதுபோதையில் உல்லாசமாக வள்ளம் ஓட்டுபவர்களையும் அங்கு விட்டு வைக்கவில்லை. 'Mad' என்றால் என்ன? தமிழில் 'விசர்' அல்லது 'அதி உச்ச கோபம்' என அர்த்தப்படுத்தலாம். கனடா முழுவதும் மதுபோதையில் வாகனம் செலுத் துவதற்கெதிராக விழிப்புணர்வைச் செய்யும் 'MADD' என்றால் என்ன? இதனை விரிவா க்கம் செய்து பின்வருமாறு தெளிவுபடுத் தலாம்.

'Mothers against drink & drivers' - மது போதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிரான தாய்மார்கள்.

இது பெயருக்கு மட்டுமே 'தாய்மார்கள்' என குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பின்னணியில் தந்தைமார்கள், சகோதர, சகோதரிகள், பிள் ளைகள் என்ற பாரிய வட்டத்துடன் கனடா முழுவதும் விஸ்தரிக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும். ஆங்கிலத்தில் இதனை 'Grass Root Organization' என குறிப்பிடப்படும்.

அதாவது புல் தரை போலக் கனடா முழு வதும் பரவியுள்ள ஒரு இலாபகரமற்ற சமூக சேவை நிறுவனம். (Non profit charity or-ganization) இதன் தலைமையகம் கனடா வில் பின்வரும் முகவரியில் இயங்குகின்றது.

Madd Canada National Office
2010, Winston Park Drive, #500
Oakville, Ontario L6H 6P5
Phone - 1-800-665-6233

ரொறொன்ரோ உட்படக் கனடாவின் பல நகரங்களிற்கும் இதன் கிளை நிறுவனங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கனடா முழுவதும் பரவலாக்கப்பட்ட மது போதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிரான நிறுவனம் இது. இவர்களின் நிறுவனத்தின் ஊழியர் கள், நிறுவன அங்கத்துவர்கள், அவர்களு டன் சேர்ந்து செயல்படும் தொண்டர்கள் குழு எனப் பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொண்டது இந்நிறுவனம். மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கனடாவில் கண்காணித்து, பிடித்து கைவிலங்கிட வைப் பது பொலிசார் மட்டு மல்ல. இந்நிறுவனத் தின் அங்கத்தவர்கள், தொண்டர்கள் குழு என்பனவும் கையும் மெய்யுமாக காட்டி கொடுப்பதற்கு உள்ளனர்.

மதுபான நிலையங்கள், உணவகங்கள், இரவுக்கேளிக்கை விடுதிகளில் மது அருந்தி விட்டு எவராவது வாகனத்தினை செலுத்திச் செல்வதனை அவதானித்தால் இவர்கள் இலக்கத் தகடுகளைக் குறிப்பிட்டு வாகனம் எந்த வீதியில் போகின்றது என்ற தகவலை பொலிசாருக்கு அறிவிப்பர் (Phone, text message). மின்னொளி பிரகாசத்துடன் பொலிஸ்வாகனம் துரத்தி வந்து மதுபோதை யில் வாகனம் செலுத்திச் செல்லுபவரின் வாகனத்தினை இடை நிறுத்தும்.

மே 03, 1980 இல் அமெரிக்காவில் கலி போர்ணியா நகரின் ஒரு துயர சம்பவம் நடந்தது. 13 வயதுச் சிறுமி ஒருத்தி தனது வீட்டிற்கு அருகே வீதியில் நடந்து வந்து கொண்டிருக்கும்போது மதுபோதையின் உச் சத்தில் அதிவேகமாக வாகனம் செலுத்தி வந்த 46 வயது நபர் ஒருவர் அந்தச் சிறுமி யினை அவரின் தாயக்கு முன்னால் மோதி பலியாக்கி விட்டு அந்த இடத்திலிருந்து தப்பி ஓடி விட்டார். பின்னர் பொலிசாரினால் பிடிக்கப்பட்டார்.

இந்தக் கொடிய சம்பவத்தினை நேரடியாக பார்த்த திருமதி. காண்டேஸ் லையிற்னர் (Mrs. Candace Lightner) என்ற அந்த தாய் இதேநிலைமை இனிமேலும் தொடரக் கூடாது என்ற நோக்கத்தில் அமெரிக்காவில் செப்ரெம்பர் 05, 1980இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே இதுவாகும். அவர் இதனை ஆரம்பித்து அமெரிக்கா முழுவதும் விஸ்த ரித்தபோது, அமெரிக்காவின் மாநில, மத்திய அரசுகள் கைகொடுத்து உதவியது.

தொடர்ந்து 1989இல் இந்நிறுவனம் கனடா-விலும் ஆரம்பிக்கப்பட்டு, பரவலாக விஸ்த ரிக்கப்பட்டது. இன்றைய புள்ளி விபர தகவல்களின்படி இப்படியான நிறுவனங்கள் விழிப்புணர்வோடு செயல்பட்டு வந்தாலும் நாள் ஒன்றுக்கு கனடாவில் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களினால் தினமும் குறைந்தது நான்கு மரணமும், சுமார் 190 பேர் உடல்காயங்களுக்கும் உள்ளாகின்ற னர். முக்கியமாக இந்நிறுவனம் பின்வரும் பிரதானமான இரு நோக்கங்களை இலக் காகக் கொண்டு செயல்படுகின்றது.

1. மதுபோதையில் வாகனம் செலுத்து வதனை நிறுத்துவது.
2. மதுபோதையில் வாகனம் செலுத்தி அப்பாவித்தனமாகப் பலியானவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பல வழி களிலும் உதவுவது.

மேலே குறிப்பிடப்பட்ட இரு அடிப்படை நோக்கங்களை வைத்துப் பரவலாக பின் வரும் பணிகளை இந்த அமைப்பு இதுவரை பல சந்தர்ப்பங்களில் நிறைவேற் றியதுடன், தொடர்ந்தும் நிறைவேற்றி வருகின்றது.

1. உச்ச மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை பிடித்து, சட்டத்தின் முன்பு நிறுத்தி தண்டனை வாங்கி கொடுப்பதில் அந்தந்த நகர சபை பொலிஸ் பிரிவு மற்றும் மாகாண பொலிஸ் பிரிவோடு சேர்த்து இயங் குதல்.
2. மத்திய, மாகாண, நகரசபை அரசு களுடன் சேர்ந்து, மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் தொடர்பான சட்ட வரைபு களை உருவாக்குவதில் கை கொடுக்கி ன்றது.
3. கனேடிய புள்ளிவிபரத் திணைக் களத்துடன் சேர்ந்து நாடு முழுவதும் மது போதையில் வாகனம் செலுத்திப் பிடி படுப வர்கள், உயிர்ப் பலியினை உருவாக்கு பவர்கள், உடல் காயத்தினை ஏற்படுத் துபவர்கள் தொடர்பான புள்ளி விபரங்களை தயாரித்து அதனைப் பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தி விழிப்புணர்வுகளை உரு வாக்குதல்.
4. பாடசாலைகள், பல்கலைக்கழக மட்டங் களில் உள்ள மாணவர்களுக்கு மதுபோ-தையில் வாகனம் செலுத்தினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி கருத்தரங்குகள் நடத்தி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
5. ஏராளமான துண்டு பிரசுரங்கள் கட்டு ரைகள், புத்தக கையேடுகள் என விநியோ கம் செய்வதுடன் ஊடகங்களினூ டாகவும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல்.
6. மதுபோதை சாரதிகளினால் பாதிக்கப்பட்ட அப்பாவிகள், மற்றும் பலியானோரின் குடும் பங்களுக்குத் தேவையான சட்ட உதவிகள், நீதிமன்றத்தில் நியாயம் பெறுதல் போன்ற வழிவகைகளை அவர்களுக்கு செய்து கொடுப்பதுடன் தேவையான நிவாரணங் களை பெற்றுக்கொடுத்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு வகையான பணிகளை மிகப் பரந்துபட்ட அடிப்படையில் அரச ஆதரவுகள், காவல்துறைகளின் ஒத்தா சைகளுடன் அமெரிக்காவிலும், கனடாவி லும் இவ்அமைப்பு மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றது.

மதுபோதையில் கனடாவில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக இதேமாதிரி யான பாணியில் மேலும் சில நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவையாவன:

1. Arrive Alive, Drive Sober, Arrivealive.org ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்ட இதே சொற் தொடரின் பெயரில் அந்த நிறுவனம் 1989இலிருந்து செயல்பட்டு வருகின்றது. 'உயிரோடு வந்து சேர்' நிறுவனம்! என அந்த நிறுவனத்தின் மேலே குறிப்பிடப்பட்ட ஆங்கில சொற்றொடரினை தமிழ் மொழியில் குறிப்பிடலாம். இதன் அலுவலகம் பின்வரும் முகவரியில் உள்ளது.

1387, Bayview Ave., Suite106
Toronto, ON M4G 3A5
Phone - 416-485-4411
இணையதளம் - www.arrivealive.org

2. 'மதுபோதையில் வாகனம் செலுத்துபவர் களுக்கு எதிரான மாணவர் அமைப்பு'
'Students against drinking & driving' - Sadd, Alberta.
மேற்குறிப்பிட்ட பெயரில் ஒரு மாணவர் அமைப்பு மதுபோதையில் வாகனம் செலுத் துபவர்களுக்கு எதிராகக் கனடாவில் அல்பேட்டா மாகாணத்தில் பின்வரும் முகவரியிலிருந்து இயங்கி வருகின்றது.

Sadd Albert
P.O. Box 7220, Station Central
Calgary, Alberta T2P 3M1
Phone - 403-313-7233

3. இதேமாதிரி ஒன்ராரியோ மாகாணத்திலும் பின்வரும் பெயர், முகவரியில் மதுபோதை யில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக மாணவர் அமைப்பு ஒன்று செயல்பட்டு வருகின்றது.

Ontario Students Against Impaired Driving - OSAID
1015, Lakeshore Blvd East, Unit 2 B, Box #3, Toronto, ON M4M 1B4

4. 'மதுபோதையில் வாகனம் செத்துபவர் களுக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பு'
Teens Against Drinking & Driving, TADD - Manitoba
கனடாவில் மனிற்றோபா மாகாணத்தில் பின் வரும் முகவரியிலிருந்து இந்நிறுவனம் இயங்குகின்றது.

TADD Manitoba
191, Provencher Blvd
Winnipeg, MB R2H OG4
Phone - 1-800-262-8836
Web - taddmanitoba.com

எனவே இறுதியாக, மது அருந்துவது அவர வர் சுதந்திரம். ஆனால் மதுபோதையில் வாகனமோட்டுவது சுதந்திரமல்ல. மதுபோ-தையில் வாகனம் செலுத்துபவர் களை பின்தொடர்பவர்கள் பொலிஸ் மட்டுமல்ல என்பதை அறிந்திருங்கள்.

யோகா சோதிடம்

● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

### (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

சென்ற தடவையில் பேரண்டத்தின் விரிவு பற்றிச் சிந்தித்தோம். இன்று அதன் தொடர்ச்சியைப் பார்ப்போம்.

பேரண்டத்தின் விரிவு என்பது, வெளியின தும் நேரத்தினதும் அதிகரிப்பாகவே பார்க் கப்படுகின்றது. அதாவது வெளிநேரம் என்ற நாற்பரிமாணம் விரிவடைகின்றது. ஒருமத்தினுள் நிகழ்ந்த வலிமையான ஏதோ ஒன்றின் காரணமாக, வெளிநேரம் என்ற பரிமாணம் தோன்றி விரிவடைந்து கொண்டு இருக்கின்றது. அந்த வலிமை யான ஒன்றினால் ஏற்பட்ட ஒலியானது பேரண்டம் முழுவதும் இன்றும் உள்ளது. எனவே பிக்பாங்கின் போது ஒருமம் வெடித் துச் சிதறியது என்பது ஏற்புடையதான ஒன்றில்லை எனலாம். மேற்கூறிய மாற்ற ங்கள் ஒருமத்தின் உள்ளேதான் நடந்தி ருக்கின்றன. இரைச்சலும் வானவேடிக்கை யும் ஒருமத்திலே ஏற்படப் பேரண்டம் தோன்றியது. இந்த இரைச்சலும் வான-வேடிக்கையும் என்ன என்பதனைப் பின்ன ராகப் பார்ப்போம்.

அடுத்து எங்களுக்கு இந்த ஒருமம் எங்கிருந்து வந்தது? என்ற கேள்வி ஒன்று எழுகின்றது. இதற்கான பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில், ஒருமத்தின் இயல்புகள் எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஒருமத்தின் இயல்பினைப் பார்த்தால் எங்களுக்கு ஒன்றுமே தெரி யாது. ஏனெனில், ஒருமத்தில் வெளிநேரப் பரிமாணம் முடிவிலியான வளைவினைக் கொண்டிருக்கும். முடிவிலியான வளைவில் அவ்விடத்தில் காலமும் இல்லை, இடமும் இல்லை. எனவே, பேரண்டத் தோற்றத்திற் கான ஒருமம் எங்கிருந்து வந்தது? என்ற கேள்விக்கு இடமே இல்லை. இடம் என்ற ஒன்று இல்லாத நிலையில் இன்ன இடத் தில் இருந்துதான் ஒருமம் வந்தது என எவ்விதம் கூறலாம்? அதேபோலத்தான் ஒரு மமான நிலையில் நேரம் என்பதே இல்லை என்பதால் எவ்வளவு காலமாக ஒருமம் இருந்தது என்பதும் அர்த்தமில்லாக் கேள் வியாகின்றது. ஆக, பிக்பாங் என்ற வெளி ப்போடுதான் பேரண்டமாக ஒருமம் பரிணா மம் அடையத் தொடங்கியது எனலாம். இதுகூட முட்டையில் இருந்து கோழி வந்ததா? இல்லை கோழியில் இருந்து முட்டை வந்ததா? என்பது போன்றதுதான். ஒருமத்தில் இருந்து பிக்பாங்கா? அல்லது பிக்பாங்கில் இருந்து ஒருமமா?

ஒருமமான நிலையில் இன்று நாம் பேரண் டத்துள் காணுகின்ற விஞ்ஞான விதிகள், இயல்புகள் எல்லாமே உடைந்து போய், இல்லாதனவாக ஆகுகின்றன. ஒருமத்தில் வெளிநேரப் பரிமாணமே கிழிந்துபோய், ஓட்டை போல இருக்கும் என்கிறார்கள். வெளிநேரப் பரிமாணம் வளைந்தோ, நெளி ந்தோ, அல்லது கிடையாகவோ ஏதோ ஒரு வடிவில் உள்ளதாகவே எங்களது பேரண்டம்



காணப்படுகிறது.

அப்பரிமாணம் ஓட்டையாக இருக்கும் இடத்தில் வெளிநேரப் பரிமாணம் இல்லாது இருப்பதால், எங்களது பேரண்டத்தின் பகுதி அவ்விடத்தில் இல்லை. அதாவது கிழிந்து போன அப்புள்ளி இருக்கும் இடம், எங்களது பேரண்டத்துடன் முற்றிலும் தொடர்பில்லாத ஒரு நிலையில் இருக்கும். அதனால் ஒருமத்தில் நடக்கும் எதனையுமே எங்க-ளால் அறிந்து கொள்ளமுடியாது, துப்பர வாகவே புரிந்து கொள்ளவும் முடியாது. அப்படியான ஒருமத்தில் பிக்பாங்கின் போது, என்ன நிகழ்ந்திருக்கும் என்ப தனைக் கூற முடியாது. எனவே, வலிமை யான 'ஏதோ ஒன்று' நிகழ்ந்திருக்கின்றது என்றே இப்போதைக்கு எங்களால் கூற முடியும். அந்த ஏதோ ஒன்றின் காரணமாக ஒருமமும் எங்களுக்கு வெளிப்பாடாயிற்று. அத்துடன் அந்தப் பேரொலியையும் கேட் கக் கூடியதாக இருக்கின்றது. எனவே பிக்பாங் என்பதனை வெடிப்பு என்பதற்குப் பதிலாக பெரும் வெளிப்பு எனக் கூறுவது தான் மிகப் பொருத்தமாக இருக்கும்.

எங்களால் புரிந்து கொள்ளமுடியாத அந்த ஏதோ ஒன்றினால் ஒருமத்தில், காலமும் இடமும் தோன்றின. அதாவது வெளிநேரப் பரிமாணம் தோன்றியது. இந்நிலையில் நேரமும் அதிகரிக்கத் தொடங்கியது, அதனால் அதனுடன் இணைந்த இடமும் பெருக்கத் தொடங்கியது. இந்நிலையில், வேறுவழியின்றி ஒருமம் விரிவடையத் தொடங்கியது. வெளிநேரப் பரிமாணம் தோன்றியதும் அதனை ஒருமம் எனக் கூற முடியாது. வெளிநேரப் பரிமாணத்தின் இய ற்பியல் அமைவுகளால், ஒருமம் பேரண்ட மாக மாறி, இன்னமும் விரிவடைந்து கொண்டு இருக்கின்றது. ஆக, பிக்பாங் என்பதனைப் பெருவெளிப்பு எனப் பொருள் கொள்ளலே பெருமளவில் ஒத்துக்கொள்ளக் கூடியது என்பது தெரிகின்றது.

1880களின் இறுதியில் சிக்காக்கோவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையை இன்னமும் உலகம் மறக்கவில்லை. அற் புதமான ஆன்மீகக் கருத்துக்களை 'அமெரிக்காவின் சகோதர சகோதரிகளே" என்ற விழிப்புக் கூற்றுடன் ஆரம்பித்த சுவாமிகள், பேரண்ட இரகசியங்களையும் கூறினார். அவரது கூற்றின் சாரத்தைப் பாருங்கள், ஆச்சரியமாக இருக்கும். உலக விஞ்ஞானிகளே பேரண்டம் நிலையானது, எப்பொழுதும் மாறாதது எனக் கூறிக் கொண்டுதிரிந்த அக்காலத்தில், விவேகா-னந்தர், பிக்பாங் பற்றிய கருத்தினைச் சூசகமாகக் கூறியிருந்தார்.

சுவாமி விவேகானந்தர், எங்களது பேரண்ட த்தை ஆகாயமாகப் பார்த்தார். இந்த ஆகாயத்தில் இருந்துதான் சகலமும் வந்தன எனக் கூறியவர், மேலும் விரிந்து கிடக்கும் ஆகாயம், எப்பொழுதும் விரி-வடைந்து கொண்டு செல்கிறது எனவும் குறிப்பிட்டிருந்தார். அல்லாமலும் இந்த விரிவானது ஒரு பூச்சிய நிலையில் இரு ந்து ஆரம்பித்தது என்றும் கூறியிருந்தார். அதாவது, ஆகாயம் (பேரண்டம்) பூச்சிய த்தை ஒத்ததான மிகச் சிறிய ஒன்றாக இருந்தது. பின்னர் அதிலிருந்து விரிந்து கொண்டு செல்கின்றது எனக் கூறியிரு ந்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. பேரண்டத்தின் இந்த விரிவானது எப்பொ ழுதும் அப்படி நிகழ்ந்து கொண்டே இருக்கப் போவதில்லை. ஒரு நிலைக்கு அப்பால், பேரண்டம், தான் விரிவடைவதை நிறுத்தி, மீண்டும் சுருங்கிக் கொண்டு வந்து, தனது பழைய நிலையான

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஃயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூச்சியத்தை ஒத்த நிலைக்கு வந்து விடும். இந்தப் பேரண்டம் இப்படியாக, விரிந்து, பின்னர் சுருங்கி ஒடுங்கி ஒன்றாவது தனி யான ஒரு நிகழ்வு அல்ல.

பேரண்டமெனப்படும் ஆகாயத்தின் விரித லும், சுருங்கலும் தொடர்ந்து மாறிமாறி நடந்து கொண்டே இருக்கிற நிகழ்வு எனக் குறிப்பிட்டிருந்தார். ஒரு விரிதலுக்கும் சுருங்கலுக்கும் இடையிலான காலத்தை ஒரு 'கல்பம்' எனக் குறிப்பிட்ட சுவாமிகள், பேரண்டம் பல கல்பங்களைக் கண்டது, இன்னமும் காணும் என்றார். இப்படியான பல கல்பக் காலங்களில் ஒரு கல்பக் காலத்தில் இப்போது இருக்கும் ஆகாயம் (பேரண்டம்) உள்ளது, அதில் நாங்களும் இருக்கின்றோம் என்றார்.

பிரபஞ்சத்தின் ஆரம்பம் பற்றிய சுவாரசி யங்கள் இன்னமும் உண்டு. அவற்றிற் சிலவற்றை அடுத்த தடவையில் கூறுகி-ன்றேன்.

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தம்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# முதுமையில் மறதி

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

முதுமை மறதி என்பது 60 வயதின்பின் நமது மூளையின் செல்கள் அழிவதாலும், அவ்வாறு அழிந்த செல்களுக்கு மாற்றாகப் புதிய செல்கள் உருவாவதில்லை என்பதாலும், மூளையின் செயல்பாட்டிற்குத் தேவையான வேதிப்பொருட்கள் சுரப்பதில்லை என்பதாலும் ஏற்படுகிறது.

முதுமையில் மறதிக்கு பலவித காரணங்கள் உள்ளன. 70 சதவீதம் வெளியில் தெரிவதில்லை. மீதி 30 சதவீதம் வெளியில் தெரியும். இந்த 'மறதிநோய்' என்பது முதுமைக்குரிய குணங்களில் ஒன்று. உலக அளவில் 60 வயதைக் கடந்தவர்களில் நூற்றில் 5 பேரையும் 80 வயதைக் கடந்தவர்களில் 5 பேர்க ளில் ஒருவரையும் இந்த நோய் பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. பெண்களைவிட ஆண்களுக்கே இதன் தாக்கம் அதிகம். அதிலும் பக்கவாதம் தாக்கிய ஆண்களை மிக விரைவில் இது தாக்குகிறது. பரம்பரையில் யாருக்காவது இந்த நோய் வந்திருந்தால் வாரிசுகளுக்கும் வரும் வாய்ப்பு அதிகம். இது தவிர விளையாட்டிலும், விபத்திலும், தலைப்பகுதி அடிபட்டவர்கள் உடனே தலையை ஸ்கான் (Scan) செய்து கவனிக்கத் தவறினால் பின்னாளில் அல்சைமர் (Alzheimer) நோய் வரக்கூடும். நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், மது அருந்துவது, புகைப் பழக்கம் போன்றவற்றால் இரத்த குழாய்களில் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கும், தைராய்டு (Thyroid) பிரச்சினை உள்ளவர்களுக்கும் இந்த அல்சை மர் நோயானது (Alzheimer) அதிகம் தாக்குகிறது.

வயது ஏற ஏற மூளையின் செல்கள் சுருங்கி மூளையின் உட்பகுதியில் புரதப் பொருட்கள் படிகின்றன. இதனால் பூச்சி அரித்த இலைகள் உதிர்வதைப்போல மூளையின் செல்கள் சிறிதுசிறிதாக மடிந்து விடுகின்றன. இதன் விளைவால் ஞாபகசக்தி குறைகின்றது. இந்த நோயின் காரணம் இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.

### முதுமை மறதி வெளியில் தெரியும் காரணங்கள்

### இரத்த ஓட்டக்குறைவு

மூளைக்குப் போதிய இரத்தம் செல்லாது தடை ஏற்படும்போது பக்கவாதம் ஏற்பட்டுச் சில மாதங்கள் கழிந்து அவர்களுக்கு ஞாபக சக்தி குறைய வாய்ப்புண்டு. இது பெரும்பாலும் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதய வால்வு கோளாறுகள், புகைப்பழக்கம் போன்றவற்றை உடையவர்களுக்கும் வருவதுண்டு. ஒரே நேரத்தில் ஒருவருக்கு அல்சைமர் நோயால் ஏற்படுகின்ற மறதியும், இரத்த ஓட்டக் குறைவால் ஏற்படுகின்ற மறதியும் சேர்ந்தும் இருக்கலாம்.

### மூளையில் கட்டி

மூளையில் ஏற்படுகின்ற சாதாரண கட்டி அல்லது புற்றுநோய்க் கட்டியும் மறதியை ஏற்படுத்தலாம். இந்தவகை ஞாபக மறதி சிறிது சிறிதாக அதிகரிக்கும்.

### அதிக மது அருந்துதல்

நீண்டகாலமாக மது அருந்துபவர்களுக்கு ஞாபக மறதி ஏற்படுவது இயல்பு. இவர்கள் மதுவைத் தவிர்த்து நரம்புகளுக்கு வலுவூட்டும் உணவுகளைச் சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி மீண்டும் வரும். தைரொய்ட் சுரப்பு குறைவது ஞாபக மறதிக்கு முதல் காரணம் என்கின்றனர். ஆண்களைவிட பெண்களுக்கு இந்தக் காரணத்தால்தான் அதிக அளவில் மறதி ஏற்படுகிறது என்கிறது புள்ளிவிபரம். இரத்தப் பரிசோதனைமூலம் இது உறுதி செய்யப்பட்டு தகுந்த சிகிச்சை மேற்கொண்டால் மறதிக்குணம் ஏற்படாது.

### விற்றமின் குறைபாடு

விற்றமின் B1, B12 குறைந்தால் ஞாபக மறதி ஏற்படலாம். இவர்கள் இதற்குரிய மாத்திரைகள் அல்லது ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்டுவந்தால் இந்தப் பிரச்சினை சரியாகிவிடும்.

### உறுப்புகள் செயலிழப்பு

கல்லீரல், நுரையீரல், சிறுநீரகம் என்பன செயலிழந்தாலும் ஞாபகமறதி ஏற்படும். இதனைச் சீர்செய்ய முதலில் உடலிருந்து மலச்சிக்கலையும் அஜீரணக்கோளாறுகளுக்கும் தீர்வு காண வேண்டும். அத்துடன் உணவில் வல்லாரை கீரையை வாரம் இரண்டு முறை சேர்த்து வந்தால் ஞாபகமறதி கூடும்.

### மறதி நோய்க்கு மாமருந்து யோகா

#### சர்வாங்காசனம்

இந்த ஆசனத்தை தினமும் 5 முதல் 10 நிமிடம் தினமும் பயிற்சி செய்பவர்களுக்கு தைரொய்ட் சுரப்பி தூண்டப்பட்டு மூளையின் நினைவாற்றலை அதிகரிக்கச் செய்கிறது. சிறுநீரகங்களிலுள்ள கழிவுப்பொருட்கள் முறையாக வெளியேற்றப்படுகிறது. நுரையீரலுக்குப் போதிய இரத்தம் சென்றடைவதால் சுவாசஉறுப்புகள் சீரடைந்து போதிய அளவு ஒக்சிசன் உள்வாங்கப்படுகிறது. இதனால் மூளைக்குச் செல்லும் பிராணசக்தி அதிகமாகி ஞாபகசக்தியை மேம்படச் செய்கின்றது.

### கபாலபாதி மூச்சுப் பயிற்சி செய்முறை
cleansing breath

தரையில் நேராக உட்கார்ந்திருந்து கொண்டு இரண்டு நாசித்துவாரங்கள் வழியாக காற்றினை வேகமாக உதறுவது, இதனுடைய வழிமுறைகளை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் தெரிந்து கொண்டு முறைப்படி பழக வேண்டும். இந்த மூச்சுப் பயிற்சியானது மண்டையோட்டின் உட்பகுதியிலுள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதுடன் மூளையின் நரம்புகளை செம்மைப்படுத்தி செல்களின் இயக்கங்களைச் சீராக்குகின்றது. இந்த முறையில் மூளையின் இயக்கம் மறு சீரமைக்கப்பட்டு ஞாபகசக்தி மேலோங்குகின்றது.

### தியானம் (Meditation)

தினமும் 5 முதல் 10 நிமிடங்களாவது தியாப் பயிற்சி செய்துவருபவர்களுக்கு மனம் அமைதியடைந்து மூளையில் தெளிவு உண்டாகும்.



எதிர்மறை எண்ணங்கள் நீங்கி மூளையில் ஏற்படும் அழுத்தங்கள் குறைந்து ஆனந்தமும் நிம்மதியும் கிடைக்கும். இதனால் சிந்தனைத்திறன் அதிகரித்து ஞாபக மறதியை இல்லாமல் செய்யும்.

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)



C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm

# பெண்ணின் பெருமையே பெருமை




புதுமைப் பெண்ணைக் காண்போம் என்று
புரட்சிப் புலவன் பாரதி பாடலுக்கமைய
வீட்டுக்குள் சிறைபட்டுக் கிடந்த பெண்இனம்
விலங்குடைத்து விடுதலை பெற்றது இன்று

தூங்கிக் கிடந்த பெண்இனம் துயில் விட்டெழுந்து
துச்சமென அச்சத்தை தூக்கிஎறிந்துவிட்டு
வியக்கும் விதத்திலே அறிவியல் அனைத்தையும் கற்று
விவேகம் கொண்டு எழுந்ததுபெண்இனம்

பிள்ளைகளைப் பெறும் இயந்திரமாக இன்று
பின்தங்கி வாழும் நிலையிலும் இல்லை
அடுக்களையில் அடுப்பூதும் பெண்ணாக இருந்து
அகப்பை பிடிக்கும் நிலையிலும் இல்லை

கற்றறிந்த அறிவினைக் கொண்டு பலபெண்கள்
கலக்குகிறார்கள் உலகினில் இன்று
எழுதுகோல் கையில் ஏந்தி வகைவகையாய்
எழுதுகிறார்கள் கவிதைக்கட்டுரைகள்

ஆக்கபூர்வமாக அரசியல் அறிவைப் பெற்று நாட்டை
ஆளவும் துணிந்துவிட்டார்கள் பெண்கள்
சட்டக்கல்லூரி சென்று சட்டப்படிப்புப் படித்து
சட்டசபை ஏறி வாதாடவும் துணிந்துவிட்டாள்

அகப்பை ஏந்திய கையால் இன்று அவர்கள்
ஆயுதம் ஏந்திப் போராடவும் துணிந்துவிட்டாள்
பெண் இனத்தைப் பேடிகள் என்று எண்ணியோரைப்
பேதலிக்க வைத்து விட்டார்கள் பெண்கள்



கவிநாதம் பரந்தாமன்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# அரசியலில்.....

06ஆம் பக்கத்தொடர்ச்சி

உணர்வுகள் என்ற வகையிலே குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் கல்வியையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவது தொடர்பில் என்ன செய்ய வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையிலே அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அவர்கள் மத்தியில் ஒரு அதிருப்தியும் இருக்கிறது. என்னவென்றால் இந்த ஏழு வருடங்களாக அவர்களால் வழங்கப்பட்ட உதவிகளுக்கு இங்கு ஒரு நிலையான வருமானம் ஈட்டப்படக்கூடிய அமைப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை. அதற்கான கணக்குகள் சரியான முறையில் காட்டப்படவில்லை என்ற ஆதாரங்களையும் அவர்கள் என்னிடம் வெளிப்படுத்தியிருந்தார்கள். எனவே, நான் கனடாவில் சில வானொலிகளிலும் தெரிவித்திருக்கின்றேன். அதனை மீண்டும் கனடா வாழ் உறவுகளுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். தங்களால் வழங்குகின்ற உதவிகளை நம்பிக்கைக்குரிய பதிவு செய்யப்பட்ட அமைப்புகளுக்கூடாக வழங்கும் போது இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

கேள்வி - கனடாவில் வாழும் எங்கள் பெண்களின் ஆளுமை குறித்து என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில் - ஆம், இதுவும் ஒரு நல்ல கேள்வியாகத்தான் நான் கருதுகின்றேன். பல



கருத்தரங்குகளில் நான் அங்கு கலந்து கொண்டிருந்தேன். பல பெண்கள் இந்த நிகழ்வுகளிலே கலந்து கொண்டிருந்தார்கள். பல இளம் பெண்கள் நல்ல கல்வி அறிவு நிறைந்தவர்களாக இருப்பதை நான் கண்டுகொண்டேன். பல அறிஞர்கள், புத்திஜீவிகள் கலந்து கொண்டிருந்த நிகழ்வுகளிலே இந்தப் பெண்கள் தங்களின் கருத்துக்களை தற்துணிவாக வெளிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருந்தமையை நான் கண்டேன். தங்களின் செயற்றிட்டங்களை அவர்கள் கனதியான முறையில் வெளிப்படுத்தி முன்வைத்திருந்தமையை நான் அந்தப் பெண்களிடம் கண்டேன். இதுவும் எனக்கு ஒரு மனநிறைவைத்தந்தது.

# ஜெயலலிதா.....

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

நீங்கள் இதற்கு என்ன சொல்வீர்கள்?

தமிழகத்தில் தங்கள் சகாப்தத்தை உருவாக்க முடியாதவர்கள் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இல்லையென்றால், திராவிடக் கொள்கைகளை மறந்து பயணிக்கும் கட்சிகளைப் பார்த்து அப்படி சொல்லியிருப்பார்கள். திமுகவைப் பார்த்து அப்படி யாரும் சொல்ல முடியாது. திராவிட இயக்கம் எந்தவிதத்திலும் மக்கள் ஆதரவை இழக்கவில்லை. திராவிட இயக்கத்தின் கொள்கையும் கோட்பாடும் காலத்தையொட்டி மேலும் மேலும் வளர்ந்திருக்கிறது. இன்னும் வளரத்தான் செய்யும். அதை வருங்காலமும் காட்டும்.

திமுக செயல் தலைவராக மு.க. ஸ்டாலின் செயல்பாடுகள் குறித்த உங்கள் மதிப்பீடு?

என்னுடைய அளவு கடந்த ஆசையினால் தான் தம்பி ஸ்டாலின் செயல் தலைவர் ஆனார். தலைவர் கலைஞருக்குப் பிறகு அவரால்தான் இந்த இயக்கத்தை வழி நடத்த முடியும் என்ற நம்பிக்கை என்னிடம் இருந்தது. கலைஞரின் திராவிடக் கருத்துகளையும் சிந்தனைகளையும் உள்வாங்கி உணர்ந்து நடந்து கொள்ளக்கூடியவர், ஸ்டாலின். இவ்வளவு பெரிய பதவியில்



இருந்தாலும் தன்னடக்கமானவர். அவரிடம் பிடித்தது அவரது அடக்கமான பண்புதான்.

ஜெயலலிதா படங்கள் அரசு அலுவலகங்களில் இடம்பெறக்கூடாது என்று ஊழல் தடுப்பு இயக்கங்கள் மற்றும் ராமதாஸ் போன்றோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது குறித்து உங்கள் கருத்து?

நாங்களும் அதை வலியுறுத்துகிறோம். உச்ச நீதிமன்றமே ஊழல் குற்றவாளி எனத் தீர்ப்பு சொல்லிவிட்ட ஒருவர் படத்தை அரசு அலுவலகங்களில் வைத்துக்கொண்டு, லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் சட்டப்படி குற்றம் என்ற வாசகத்தை எப்படி எழுத முடியும்? அது தர்மத்துக்கும் நியாயத்துக்குமே விரோதமானது. அதனால்தான், ஜெயலலிதா புகைப்படத்தை அரசு அலுவலகங்களில் வைப்பது சட்ட விரோத செயல் என்கிறோம்.

தமிழீழ கோரிக்கையை வலியுறுத்தி ஒருமுறை சட்டமன்ற உறுப்பினர் பதவியை துறந்தவர் நீங்கள். ஆட்சியையே இழந்த இயக்கம் திமுக. ஆனால், இவை எல்லாவற்றையும்விட 2009 நிகழ்வுகள் திமுகவுக்கு ஒரு அவப்பெயரை உருவாக்கித் தந்து விட்டதாக சமூகவலைதளங்களில் விமர்சனம் வைக்கப்படுகிறது. அதையெல்லாம் நீங்கள் கவனிக்கிறீர்களா?

எந்த அவப்பெயரும் இல்லை. எங்களை குற்றம் சொல்லுகிறவர்கள் ஏதாவது ஒரு காரணத்தை உருவாக்கி சொல்லிக் கொண்டேதான் இருப்பார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல அவசியமே இல்லை. தமிழுக்காகவும் தமிழர் நலனுக்காகவும் எப்போதும் களத்தில் இறங்கிப் போராடும் இயக்கம் திமுகதான். இனிமேலும் அந்தப் போராட்டம் தொடரும்.

ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் இருக்கிறது என்று இப்போது திமுகவும் வெளிப்படையாகப் பேசத் தொடங்கியுள்ளதே. என்ன காரணம்?

ரகசியமும் மர்மமும் இருப்பதால்தான் அவர் மருத்துவமனையில் இருந்தபோது யாரையும் பார்க்க அனுமதிக்கவில்லை. அவருக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகள், சிகிச்சைகள் போன்ற எல்லாவற்றையும் மறைத்தார்கள். இந்த விவகாரத்தில், ஆரம்பத்தில் இருந்து அவர்களது செயல்கள் எல்லாவற்றையும் பார்க்கும் போது, ஜெயலலிதா மரணத்தில் நிச்சயம் மர்மம் இருக்கிறது என்றே நானும் கருதுகிறேன்.

கலைஞர் எப்படியிருக்கிறார்?

தலைவர் கலைஞர் அடிக்கடி நோய்வாய்ப்பட்ட நிலையில் கடந்த ஒரு வருடமாகவே பல்வேறு மருத்துவர்களைப் பார்த்துக் கொண்டேதான் இருந்தார். அப்போதிலிருந்தே என் இதயம் கனத்துவிட்டது. இப்போது அவரது உடல்நிலை எப்படியி ருக்கிறது என்று அடிக்கடி சென்று பார்த்து விட்டுத்தான் வருகிறேன். நல்ல முன்னேற்றம் இருக்கிறது. நல்லமுறையில் தேறி விட்டார். 1942-ம் ஆண்டு முதன்முதலாக



கலைஞரைப் பார்த்தேன். அன்றிலிருந்து எங்கள் நட்புத் துவங்கியது. ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நட்பு நிலைத்திருக்கிறது. அவர் என் மீதும், நான் அவர் மீதும் கொண்ட அன்பும் பற்றும்தான், இதற்குக் காரணம். அந்தப் பற்றுடன் சொல்கிறேன், கலைஞர் மீண்டு வந்து விரைவில் பேசுவார். அவரது குரலை நீங்கள் கேட்கலாம், அவர் எழுத்துகளை மீண்டும் படிக்கலாம்.


**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

## வருடாந்த தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள் - 2017

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்தும் வருடாந்தத் தமிழ் மொழிக் கல்விசார் போட்டிகளும் கணிதம், ஆங்கிலம் (தரம் 03 - 08வரை) நடைபெறும். இப்போட்டிகள் யாவும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் வாரிசுகள் மட்டுமே பங்குபற்றும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இடம்: Atlanta Party Hall, 1240 Ellesmere Road, East Scarborough, ON, M1P 2X4
தொலைபேசி இலக்கம்: 416.297.0013
காலம்: பங்குனி 18, 2017 – சனிக்கிழமை, காலை 9:00 மணி
(Saturday, March 18 – 9:00 a.m.)

தமிழ்ப் பாடப் போட்டிகளுக்கான வயதெல்லை 06, 09, 12, 15, 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளாக நடத்தப்படும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் காலை 8:30 மணிக்கு முன்பாக கட்டணங்களைச் செலுத்தி தமது பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும்.
கட்டண விபரம்:

- குடும்ப அங்கத்துவப் பணம் $15.00
- தமிழ்ப் பாடத்திற்கான கட்டணமாக ஒவ்வொரு பாடத்திற்கும் தலா $5.00 உம் ஆகக் கூடுதலாக 3 பாடங்களுக்கு மட்டுமே அறவிடப்படும்.
- ஆங்கிலம், கணிதம் பாடத்திற்கான கட்டணம் $ 5.00 தனியாக செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி - மார்ச் 11, 2017 (Saturday, March 11, 2017)
சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டிகள் யாவும் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள

**திரு. ந. மகேந்திரன் - (416) 616-4386 திரு. வெ. இராஜகுலேந்திரன் - (416) 508-0041**
**திரு. ஏ. ஜெயராஜா - (416) 301-1733**
திரு. ந. நாகேஸ்வரன் - (416) 299-6645, மின்னஞ்சல்: nada.nages@gmail.com
திருமதி சி. நாமகள் - (416) 283-1439, மின்னஞ்சல்: namagalx5@gmail.com
திரு நா. பாலகுமார் - (416) 321-5522, மின்னஞ்சல்: balashanthini@hotmail.com

நிறுவனங்கள்:
VLAMBARAM - GTA Square, # 201, 5215 Finch Ave. East
BREAD MASTER BAKERY - Unit #B3, 31 Tapscott Road
(Malvern Mall பின்புறமாக)

# நாம் நாமாக வாழுதல்

- ஞானா உருத்திரன் -

பலருடைய வாழ்க்கை மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன சொல்வார்கள், என்ன நினைப்பார்கள் என்பதைக் கருத்தாகக் கொண்டே இருக்கிறது. ஏனென்றால் எமது சமூகத்தில் மற்றவர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மை முக்கியமாகக் காணப்படுகிறது. எமது உறவினர்கள், நண்பர்கள், சமூகம் ஆகியவற்றுடன் நாம் ஒத்து வாழவே விரும்புகிறோம். அத்துடன் எல்லோருடைய எதிர்பார்ப்பிற்கும் ஏற்ப வாழ்கிறோம். அதனால் எமக்கு உண்மையாக நாம் இருப்பதில்லை. ஆகையால் நாம் ஒரு போலியான சமூகத்தை உருவாக்குகிறோம். எமது ஆரோக்கியமும் இதனால் பாதிப்படைகிறது. எமது தனித்தன்மை வெளியில் வராமல் போகின்றது.

இப்படி எல்லோரைப்போல வாழும் முறை எமக்கு ஒப்பிடும் தன்மையைக் கொடுக்கிறது. நான் மற்றவர்களை விடச் சிறப்பானவன் அல்லது குறைவானவன் என்ற எண்ணங்களை உருவாக்குகின்றது. இவை எம்மைச் சுற்றிப் பலவிதமான எண்ணங்கள், உணர்வுகள், நம்பிக்கைகளை உருவாக்குகின்றது. இவை எம்மை பாதிக்கும். இந்த ஒப்பிடும் தன்மை, சமூகத்தில் தன்னை வெளிக்காட்டும் தன்மை, உறவுகள் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படை எண்ணம் இவை பல மனிதர்களிடம் பலவகையில் இருக்கின்றன.

ஆதலால் ஒருவிதமான போலியான உணர்வுகளோடு மனிதர்கள் தமக்கும் மற்றவர்களுக்கும் உண்மை இல்லாமல் வாழ்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனது வாழ்வும், அநுபவங்களும் தனித்தன்மை வாய்ந்தவை. மற்றவர்களின் எதிர்பார்ப்புக்களை எம்மால் ஒருபோதும் பூர்த்தி செய்யமுடியாது. அதுவும் எல்லா மனிதர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வது சாத்தியமே அற்ற விடயம். மற்றவர்களைப் பற்றிப் புறங்கூறுதல் அதாவது ஒருவர் இல்லாத விடத்தில் அவரைப்பற்றிப் பேசுவதென்பது நாம் ஒருவிடயத்தை நேரடியாகக் கூற விரும்பாததாலே உருவாகிறது. இப்படியான சக்திகள் எதிர்மறையான உணர்வுகளை உருவாக்குகிறது.

ஒவ்வொரு மனிதரும் தனித்துவமானவர்கள். அவர்களுடைய வாழ்க்கையும் வேறு வேறானவை. நான் எனர்ஜி ஹீலிங் துறையில் ஆரம்பத்தில் நுழைந்தபோது எல்லோரும் என்னை ஒரு வித்தியாசமான எண்ணத்தோடு பார்த்தார்கள். பல நண்பர்கள், உறவினர்கள் கூடப் பல விமர்சனங்களை செய்திருந்தார்கள். அப்படி ஒரு ஹீலராக செயற்படுவது கூட ஆரம்பத்தில் எனக்குக் கடினமாகவே இருந்தது. ஆனாலும் எனது ஆழ்மனதிலுள்ள அந்த உண்மையை நம்பி அதன்படி நடந்தேன். மற்றவர்களுக்கு வித்தியாசமானதாகத் தெரிந்தாலும் இது என்னுடைய வாழ்க்கையைப் பலவகையில் சிறப்பானதாக மாற்றியது. அத்தோடு பல மனிதர்களுக்கு வாழ்க்கையில் ஆரோக்கியத்தைக் கொண்டுவந்தது. நான் மற்றவர்களைப்போல் இருக்க நினைத்திருந்தால் என்னால் இந்தத் தொழிலை செய்ய முடியாது. பல மனிதர்களின் வாழ்வு வளம்பெற என்னால் உதவியிருக்க முடியாது.

ஆகவே மனிதர்கள் அனைவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். எமது உண்மையான வெற்றியான ஆரோக்கிய வாழ்க்கைக்கு அடிப்படையானதே எமது தனித்தன்மையை ஏற்றுக்கொண்டு வாழ்வதாகும். மற்றவர்கள் உங்களை ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ அது அவர்களுடைய பிரச்சினை, உங்களுடையதல்ல. உங்களைப்பற்றி அவர்களுக்குத் தெரிந்த அளவிற்கான ஒரு கணிப்பு மட்டுமே.




வாழ்க்கையில் வெற்றி என்பது நாம் மற்றவர்களை விட அதிக பணத்துடன் வாழ்வதோ அல்லது நல்ல வேலையில் இருப்பதோ அல்ல. எமக்கு சிறுவயதில் இருந்தே இப்படிப்பட்ட அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இவை ஒரு செல்வ வளமுள்ள வாழ்க்கையை உருவாக்கக்கூடும். ஆனால் ஆரோக்கியமான வாழ்க்கை அனைத்தையும் பற்றியது. நாம் எமக்கு உண்மையாக நடந்தாலே அது கிடைக்கும். நாம் எம்மிடம் ஏதாவது வித்தியாசமான தன்மைகள் அல்லது வித்தியாசமான அறிவு போன்றவை இருந்தால் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். எம்மால்தான் எமது தனித்தன்மையை உலகிற்கு வெளிக்கொணர முடியும்.

நாம் கூட்டமான மனிதர்களானாலும் ஒவ்வொருவருடைய தனித்தன்மைகளையும் மதித்து, ஏற்று நடப்போமானால் இந்த உலகமே அன்பு நிறைந்ததாக மாறிவிடும். இங்கு போலிகளுக்கு இடமிருக்காது. என்னிடம் ஹீலிங் செய்யவரும் சிலர் வெளியில் என்னைப்பற்றி என்னிடம் சேவையைப் பெற்றுக் கொள்வதுபற்றிச் சொல்லவே மாட்டார்கள். ஏனென்றால் மற்றவர்கள்

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)



# என்ன...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

நெடுஞ்செழியனா கருணாநிதியா என்று வந்தபோது, பேச்சாற்றல், எழுத்தாற்றல், கட்சித் தொண்டர்களின் ஆதரவு, மக்களின் செல்வாக்கு என்ற அடிப்படையில் கருணாநிதி முன்னிலைக்கு வந்தார்.

1972இல் திமுக பிளவுபட்டு அதிமுகவை எம்ஜிஆர் தொடங்கினார். திமுக அமைப்பு ரீதியான பலத்துடன் இருந்த நிலையிலும் எம்ஜிஆர் என்ற ஈர்ப்பு அதிமுகவை வெற்றி பெற வைத்தது. கட்சி தொடங்கிய 6 மாத காலத்தில், மத்தியில் ஆட்சியில் இருந்த இந்திரா காங்கிரஸ், மாநில ஆட்சிக் கட்சியான திமுக, மக்கள் செல்வாக்கு மிக்க காமராஜர் ஆகிய மூன்று பெரும் சக்திகளை தோற்கடித்து, இந்தியாவையே திரும்பிப் பார்க்கச் செய்தார், எம்.ஜி.ஆர்.. தொடர்ந்து 1977, 1980, 1984 ஆகிய மூன்று சட்டசபைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று வரலாறு படைத்தார்.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு அவருடைய வாரிசு ஜானகியா ஜெயலலிதாவா என்ற கேள்வி எழுந்தது. மூத்த தலைவர்களும் முக்கிய நிர்வாகிகளும் ஜானகி பக்கம் இருந்தார்கள். ஆனால், ஜெயலலிதா என்ற ஈர்ப்பு சக்திதான் வெற்றிபெற்றது. அவர் தலைமையில் 28 ஆண்டுகள் நகர்ந்த கட்சி, அவர் மறைவுக்குப் பின்னர் இப்போதும் மீண்டும் கடும் சோதனையைச் சந்திக்கிறது.

இப்போது கட்சி நிர்வாகிகளும் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் அதிகமாக சசிகலா பக்கமே நிற்கிறார்கள்.



இதனால் ஆட்சி, கட்சி இரண்டின் தலைமையும் அவர் கையில் இருக்கிறது. ஆனால், நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சசிகலா, தண்டனை முடிந்து, மேலும் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்கமுடியாத நிலையில் இருக்கிறார். ஆக, பத்தாண்டுகளுக்குப் பிறகு 74 வயதில் சசிகலாவால் அரசியலுக்கு வரமுடியுமா என்பது கேள்விக்குறிதான். அதனால், இந்த ஆட்சி முடிவுக்கு வரும்போது கட்சியும் சசிகலாவின் கைகையவிட்டு நழுவும். அப்போது தற்போது சசிகலா பக்கம் இருக்கும் நிர்வாகிகளும் ஓ. பன்னீர்செல்வம் பக்கம் செல்வது நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்பது என் நம்பிக்கை.

ஏனெனில், அதிமுகவில் கொஞ்சமாவது மக்களை ஈர்க்கும் சக்தி என்றால் அது இன்றைய தேதியில் ஓபிஎஸ் மட்டும்தான். எடப்பாடி பழனிச்சாமி தேர்வு நிலைக்காது. வரும் நாட்களில் அவருக்கு கடுமையான எதிர்ப்பும் அதிருப்தியும் கட்சியில் எழுவதற்கு வாய்ப்பிருக்கிறது. தொண்டர்களின் பலமும் பொதுமக்களின் ஆதரவும் யாருக்கு இருக்கிறதோ அவரிடம்தான் கட்சி இருக்கும் என்பதுதான் அதிமுகவின் கடந்த கால வரலாறு. அது ஓ. பன்னீர் செல்வத்துக்கு இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, அதிமுகவின் எதிர்காலம் பன்னீர்செல்வத்தின் தலைமையில்தான் நீடிக்கும்" என்கிறார் துரை கருணா.

ஆனால், இதை மறுக்கும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த எஸ்.ஆர். சேகர், "அதிமுகவுக்கு எதிர்காலமே இல்லை" என்று அதிர்ச்சியளிக்கிறார். இதுதான் தனது அபிப்ராயமும் என்று கூறும் ஆர். மணி, "ஜெயலலிதா அனைத்துப் பிரிவினருக்குமான தலைவராக இருந்தார். அதனால் தான் இத்தனை ஆண்டுகள் கட்சியானது கட்டுக்கோப்பாக இருந்தது. அவருக்குப் பின் சொல்லிக்கொள்வது போல இப்போது யாரும் அப்படி இல்லை. எனவே, அதிமுக கட்சி விரைவில் சிதையும்" என்கிறார் உறுதியுடன்.

அதிமுக நிலைக்குமா சிதையுமா? காலம் தான் பதில் சொல்லும்.

# 112 அடி...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

யோகா. அறிவு, மனம், உடல் இவற்றை ஒருங்கிணைப்பது யோகா.

மனிதர் மட்டுமின்றி, விலங்கு, பறவைகள் என சுற்றுப்புறத்திலுள்ள ஜீவ ராசிகளுக்கு ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதை உணர்த்துகிறது யோகா. "நான்" என்பதிலிருந்து, "நாம்" என்ற நிலைக்கு மாற்றுவதே இந்த யோகாவின் மகத்துவம். ஒற்றுமை தான் இந்தியாவின் பலம். சிவனும், பார்வதியும் ஒற்றுமைக்கு சிறந்த உதாரணம். சிவனின் கழுத்தில் பாம்பு உள்ளது. விநாயகரின் வாகனம் எலி. பாம்பும், எலியும் பரஸ்பர எதிரிகள். இருப்பினும் அவை ஒற்றுமையுடன் வாழ்கின்றன.

முருகனிடம் பாம்பும், மயிலும் உள்ளது. இவை இரண்டும் பரஸ்பர எதிரிகள். எனினும் இவையும் ஒற்றுமையுடன் வாழ்கின்றன. சிவனின் குடும்பமே ஒற்றுமைக்கு உதாரணம் என்பதை, இது எடுத்துக் காட்டுகிறது. இதிலிருந்து, உலகில் ஒற்றுமை எவ்வளவு முக்கியத்து வம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எங்கெல்லாம் கடவுள் வழிபாடு உள்ளதோ அங்கு, விலங்கு, பறவை, மரம் ஏதேனும் ஒன்று இருக்கும். இயற்கை கடவுளுக்கு இணையானது. இயற்கையை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை நம் முன்னோரிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதை நாம் சிறுவயதில் இருந்து கடைபிடித்து வருகிறோம். இதனால்தான் கனிவு, சகோதரத்துவம் உள்ளிட்ட நற்பண்புகள் இயற்கையாகவே நம்மிடம் உள்ளன.

நமது கலாசார வளர்ச்சியில் பெண்கள் அதிக பங்களிப்பு கொண்டுள்ளனர். பெண் என்றால் தெய்வீகம். மனிதன் நல்ல செயல் செய்தால் அவன் தெய்வீகநிலை அடைவான். இயற்கையாகவே பெண்களுக்கு தெய்வீக குணம் அவர்களுடன் ஒருசேர உள்ளது. ஆண்களே நல்ல செயல்களைச் செய்து மட்டுமே அந்தத் தெய்வீக நிலையை அடையமுடியும்.

மாறிவரும், 21ம் நூற்றாண்டில் மனிதனின் வாழ்க்கை முறை மாறியுள்ளது. மன அழுத்தம் தொடர்பான வியாதிகள் அதிகரித்துள்ளன. மன அழுத்தத்தில் இருந்து விடுபட மது உள்ளிட்ட தீய பழக்கங்களை நாடுகின்றனர். யோகா பயிற்சியை மேற்கொள்ளும்போது மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதுடன், மன அமைதியும் ஏற்படும்.




பாரம்பரிய யோகா கலையை அதன் ஆத்மார்த்தமான சாராம்சத்துடன் காப்பாற்ற வேண்டியது முக்கியம். உடல் நலத்துக்கு யோகா ஒரு பாஸ்போர்ட்டாக செயல்படுகிறது. வியாதியற்ற உடல்நலமே மிக முக்கியம். செயல், சிந்தனை, அனைத்திலும் மனிதர்கள் நல்ல முறையில் செயல்பட யோகா உதவுகிறது.

உடற்பயிற்சி செய்வதில் பல முறைகள் உள்ளன. உடற்பயிற்சி செய்பவர்கள் அனைவரும் யோகிகள் எனக் கூற முடியாது. யோகா மகத்துவத்தை இன்றைய இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் நோக்கில், வெற்றிகரமாக, சர்வ தேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு, பிரதமர் மோடி பேசினார்.

## உடுக்கை இசைத்த மோடி

ஈஷா யோகா மையத்துக்கு பிரதமர் மோடி வந்தார். அவருக்கு, ஆதியோகி உருவம் பொறித்த, ஊதா நிற சால்வையை, ஜக்கி வாசுதேவ் அணிவித்து வரவேற்றார். தியான லிங்கத்தில், 15 நிமிடங்கள் பஞ்சபூத ஆராதனை செய்தார். இதையடுத்து, லிங்க பைரவி தேவியை தரிசனம் செய்தபின், 112 அடி ஆதியோகி சிலையை, பிரதமர் திறந்து வைத்தார். சிவனின் இசைக் கருவியான உடுக்கையை ஆர்வமுடன் இசைத்தார்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# இடதுகைப் பாவனையாளர்கள்





சிந்தனைப்பூக்கள்
**எஸ். பத்மநாதன்**

## Left Handers

ஒவ்வொரு ஒகஸ்ட் 13ஆம் திகதி 'சர்வதேச இடதுகைப் பாவனையாளர்தினம்' (International Left Handers Day) கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனைப்பற்றி பலருக்குத் தெரியாமல் இருக்கக் கூடும். இலண்டனில் 1990 இல் இடதுகைப் பாவனையாளர்கள் தமக்கென சங்கம் ஒன்றை உருவாக்கினர். 1992இல் இக் குழுவினரின் வேண்டுகோளின்படி உல கெங்கிலும் இவ்வகையான இடது கைப்பாவனையாளர்களும் பல கொண்டாட்டத்தினை கொண்டாட ஆரம்பித்தனர். உலகெங்கிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முற்பட்ட இவர்கள் இடதுகை விளையாட்டுக்கள், போட்டிகள், விருந்துகள் என்பனவற்றினையும் கொண்டாடி வருகின்றனர். Lefty Zoness என்ற அமைப்பினூடாக படைப்பாற்றலை வெளிப்படுத்த முனைகின்றனர்.

உலக சனத்தொகையில் வலதுகை பாவனையாளர்கள் ஏறக்குறைய 90 வீதமான வர்களாவர். ஏனைய 10 வீதமான வர்கள் இடதுகைப் பாவனையாளர்களாவர். இடது கைப் பாவனையாளர்கள் குறைந்த அளவினர் என்றாலும் எல்லா துறைகளிலும் பிரகாசிக்கின்றனர். வலது கைப்பாவனையாளர்கள் போன்று இவர்களும் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர். சிலர் இன்னும் வேகமாக செயல்படுபவர்களாகவும் இருப்பர். வெகுசிலர் இரண்டு கைகளையும் பாவிக்கக் கூடியவர்களாவர். இதனை Mixed Handiness' எனலாம். அத்துடன் 'Ambidexterity' எனவும் அழைக்கலாம்.



இடதுகைப்பழக்கம் என்பது பற்றி பல்வேறு ஆய்வுகள் உள. குழந்தை கருவில் உள்ள போதே இத்தன்மை உருவாகி விடுகிறது என ஆய்வுகள் உள. 2013இல் நடைபெற்ற ஆய்வுகளில் 39 வீதமான பிள்ளைகள் (6-14 மாதங்கள்) 97 வீதமான பிள்ளைகள் (18-24 மாதங்கள்) தங்களது இடது கைப்பழக்கத்தினை ஆரம்பித்து விடுவர் என கண்டறியப்பட்டுள்ளது. விரல் சூப்புவது முதல் சகல தேவைகளுக்கும் இடதுகையையே பாவிக்கத் தொடங்குவர். வலது கையை விட எடுத்ததற்கெல்லாம் இடது கையே செயல்படும். இதற்குக் காரணம் மூளையின் மாறுபாடான செயற்பாடாகும்.

பொதுவாக எமது மூளை இரண்டு பிரிவுகளாக (Chamber) உள்ளது. ஒவ்வொரு பக்கத்திற்கும் அதற்கென்று சில விசேட செயல்பாடுகள் உள. வலது பக்க மூளை சில பண்புகளைக் கொண்டிருக்கும். படைப்பாற்றல் (Creativity), உணர்ச்சி (Feeling), காட்சியுணர்வு (Perception) இசை (Music), பகற்கனவு (Daydreaming) போன்றவற்றை யுடையது. இடதுபக்க மூளை தர்க்கம், ஆய்வு, கணிதம், மொழி, சிந்தனை, பாடல் வரிகள் போன்றவற்றை இயக்கும் சக்தியுள்ளது. இரண்டும் இணைந்தே எமது முழுமை தீர்மானிக்கப் படுகிறது. இதில் எது கூடியது எது குறைந்தது என்று எதுவுமில்லை. இரண்டு பக்க மூளையும் சிறப்பாகச் செயல்படுபவர் நிறைந்த அறிவாளியாக இருப்பார். இடது பக்கமூளை ஒரு Digital சக்தி கொண்ட தெனவும் கூறுவர். இடது பக்கமூளை வாசிப்பு, எழுத்து, கணிதம்,

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)


91 Brantood Rd



Coming soon.....

151 Village Green



Coming soon.....

Gnani & Judy
REAL ESTATE

HOMELIFE
HIGHER STANDARDS



OFFICE: 416.321.6969
HOMELIFE GTA REALTY INC., 5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* INDEPENDENTLY OWNED & OPERATED, REALTOR

Judy Gnanendran B.Com(Hons) 416-629-9797
Gnani Narasingham 416-937-8090



Another New Project by CONCORD....
SEASONS 2 @ Leslie/Sheppard
Coming...
March 2017
Don't miss the chance!!!
For Special/VIP price
Please Call:
416-321-6969
HomeLife/GTA Realty Inc.*Brockerage
5215 Finch Ave East #203 Toronto ON M1S 0C2
HOMELIFE
*Independently Owned and Operated

58 YEARS IN BUSINESS. FAMILY OWNED AND OPERATED

# DONWAY DEALS

WWW.DONWAYFORD.COM

DONWAY Ford




2017 FORD FUSION SE




2017 FORD ESCAPE SE




2017 FORD F-150 4x4 CREW 157




2017 FORD ESCAPE SE 4WD




2017 FORD ESCAPE SE




2017 FORD FOCUS




2017 FORD EDGE SEL




2017 FORD EXPEDITION LIMITED




2017 FORD TRANSITCONNECT




2015 HONDA CRV EX-L AWD
29 000KM'S -1 OWNER




2016 LINCOLN MKZ
4000KM'S, 1 OWNER




2016 FORD ESCAPRE
76 000KM'S, 1 OWNER

(416) 751-2200



WE FINANCE EVERYONE
GET THE MOST FOR YOUR TRADE

1975 EGLINTON AVENUE EAST
SCARBOROUGH, ON. M1L 2N1

While every reasonable effort is made to ensure the accuracy of this information, we are not responsible for any errors or omissions contained on these pages. Please verify any information in question with Donway Ford. All our prices include all available rebates, additional fees such as administration fee, licensing, and taxes do apply.




# தமிழர் தகவல் 26ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விருது வழங்கலும்



அருந்ததி ஞா.

ரொறொன்ரோவில் இருந்து கடந்த 26ஆண்டு காலமாக மாதம் தோறும் தொடர்ந்து வெளிவரும் தமிழர் தகவல் சஞ்சிகை தனது 26 ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன், 'இளவேனில் சுவடு' ஆண்டுமலர் வெளியீட்டு விழாவையும், விருது வழங்கலையும் கடந்த 2017 பெப்ரவரி 19 இல் ரொறொன்ரோ நகர-சபை அங்கத்தவர் சபாபீடத்தில் கொண்டாடியது.

முதலாவது அமர்வு டாக்டர் அ. சண்முக வடிவேல் தலைமையில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகியது. ஒலிபரப்பாளர் சக்தி பரமலிங்கத்தின் தொடக்க உரையைத் தொடர்ந்து அமைதி வணக்கமும் செல்வி ஐஸ்வரியா சந்துருவினுடைய தமிழ் வாழ்த்தும் நடைபெற்றன. சிறீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவசிறீ ப. விஜயகுமார குருக்களின் ஆசி உரையைத் தொடர்ந்து டாக்டர் அ. சண்முகவடிவேல் தலைமை உரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து மார்க்கம் நகரசபை உறுப்பினர் திரு. லோகன் கணபதியின் வாழ்த்துரையும், திரு. அ. முத்துலிங்கத்தின் 'இளவேனில் சுவடு' வெளியீட்டுரையும் நடைபெற்றன.

அ. முத்துலிங்கம் அவர்கள் தற்போது ஆவணப்படுத்தப்படும் தகவல்கள்தான் பின்னர் சரித்திரமாகின்றன என்றார். காச நோய் வந்து 32 வயதிலேயே மரணப் படுக்கையில் இருந்த சிறினிவாச இராமா-னுஜன் கிறுக்கி, கசக்கி எறிந்த தாள்களை அவரது கல்வியறிவற்ற 20 வயது மனைவி எடுத்து மடித்து சேர்த்து வைத்திருந்தார் எனவும், அவை பின்னர் Cambridge பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்டது. அவர்களும் அவற்றை 57 வருடங்கள் பாதுகாத்து வைத்திருந்தனர். அவற்றைப் பின்னர் ஆய்வு செய்தவர்கள் தமது எட்டு வருட ஆய்வுகளுக்கு பின்னர் பல புதிய கணித கண்டுபிடிப்புகளை அதிலிருந்து பெற்றனர் என்றும் கூறிய அ. முத்துலிங்கம் அவர்கள் தகவல்களை ஆவணப் படுத்துவதன் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்தினார். இதன் பின்னர் தமிழர் தகவல் உதவி ஆசிரியர் சசிகரன் பத்மநாதன் சிறப்புப் பிரதியைத் தமிழர் தகவல் அணிசேர் எழுததாளர் எஸ். ஜெகதீசனுக்கு வழங்கியதுடன் முதலாவது அமர்வு நிறைவு பெற்றது.

இரண்டாவது அமர்வு ரொறொன்ரோ மாநகர சபை உறுப்பினர் நீதன் சான் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. இவ் அமர்விற்கு பிரதமவிருந்தினராக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான ஒன்ராரியோ மாகாண அமைச்சர் Glen Murray வந்திருந்தார். அவருடன் சிறப்பு விருந்தினராக ரொறொன்ரோ மாநகரசபை உதவி நகரமுதல்வர் Pam MccConnell வந்திருந்தார்.



தலைவர், பிரதமவிருந்தினர் மற்றும் உதவி நகர முதல்வரின் உரைகளைத் தொடர்ந்து விருது வழங்கல் நடைபெற்றது. தமிழர் தகவல் சஞ்சிகையின் முதலாவது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீட்டு விழாவில் இருந்தே வருடம் தோறும் விருதுகள் வழங்கி வருகிறது. இவ்வருடமும் எண்மருக்கு தமிழர் தகவல் விருது அளித்துக் கௌரவித்தது. இத்துடன் கடந்த 26 வருடங்களில் 239 பிரமுகர்கள் தமிழர்தகவல் விருதைப் பெற்றுள்ளனர். கனேடியத் தமிழர் சமூகத்தில் விருது வழங்குவதை 'தமிழர் தகவலே' முதன்முதலாக ஆரம்பித்து வைத்தது.

இம்முறை தமிழர் தகவலின் வாழ்நாள் சாதனையாளர் விருது பேராசிரியர் கலாநிதி அஜித் யோகநாதனுக்கு வழங்கப்பட்டது. இவர் தற்போது அமெரிக்காவில் உள்ள Emory பல்கலைக்கழகத்தில் உயிர் மருத்துவப்பொறியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் இருதய நோய் இயலில் பொறியியல் தொழில்நுட்பத்தைப் பாவித்து பல கண்டுபிடிப்புக்களை செய்து பிறவியிலேயே ஏற்படும் இருதய நோய்களுக்கு பல சிகிச்சை முறைகளை உருவாக்கி உள்ளார்.

கனடாவில் வாய்பாட்டு மற்றும் வீணை வாத்தியம் ஆகிய இரண்டிலும் முன்னணி வகிக்கும் இசைக்கலைமணி கல்யாணி சுதர்சன் அவர்கள் தமிழர் தகவலின் இசைத்துறை விருதையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றார். கடந்த மூன்று தசாப்தங்களாக நடனத்துறையின் வளர்ச்சிக்கு கனடாவிலும், ஜேர்மனியிலும் அளப்பரிய சேவையை ஆற்றிவருகிற கிருபாநிதி ரட்னேஸ்வரன் அவர்கள் தமிழர் தகவலின் நடனக்கலைக்கான விருதையும் தங்கப்பதக்கத்தையும் பெற்றார்.

பேராதனை மற்றும் யாழ். பல்கலைக்கழகங்களில் இளங்கலைமானி, முதுகலைமானி பட்டங்களைப் பெற்று ஆசிரியராகி, அதி-பராக இருந்த சிவபாலு மாஸ்டர் என அழைக்கப்படும் தங்கராசா சிவபாலு அவர்கள் கனடாவில் ஆற்றிவரும் சமய, சமூக மற்றும் கல்விப்பரப்பில் ஆற்றிவரும் சேவைகளுக்காக தமிழர்தகவலின் சிறப்பு விருதையும் தங்கப்பதக்கத்தையும் பெற்றார். கனடா மற்றும் அமெரிக்காவின் பல நகரங்களில் ஐயாயிரத்திற்கும் அதிகமான நிகழ்ச்சிகளை வழங்கிய மெகா டியுனர்ஸ் அரவிந்தன் மகேசன் தமிழர் தகவலின் கால் நூற்றா-ண்டிற்கு மேல் வாத்திய இசைக் குழுவுடன் ஆற்றிவரும் பணிக்கான விருதையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

இடது கைப்பாவனையாளர்களுகென தனியான கோல்ப் (Golf) கிளப்புகள் உள்ளன. இவர்களுக்கென விசேடமான உப கரணங்கள் தேவைப்படுகின்றன. கனடாவிலும் Nike Golf Clubs, Kids Golf Clubs, Left Hand Golf Clubs, Amazon இப்படிப் பல உள. இப்படி உலகெங்கிலும் இடது கைக்காரர்களுக்கென விசேட சலுகைகள் பல உள. இது மட்டுமின்றி ஏனைய விளையாட்டுக்களில் இணைப்பவர் களுக்கும் கருவிகள் விசேடமாக வழங்கப் படுகின்றன. எத்தனையோ பொறியியலா ளர்கள் இதற்காக புதிய உபகரணங்கள் வடிவமைக்கிறார்கள். பொதுவாக மிக சிறுபான்மையினரே இடது கைக்காரர்கள். இருந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு உரிய அந்தஸ்து உண்டு.



இடது கையால் மின்சார கிட்டார் (Electric Guitar) வாசிப்பவர்கள் அநேகம். இவர்களுக்கென தனியாக வடிவமைக்கப்பட்ட பல கருவிகள் உள. Electri 6 string Left என்ற பெயருடன் பல கொம்பனிகள் கிட்டார்களை தயாரிக்கின்றன. Lefty Southpaw Guitars நிறுவனம் பெரிய கிட்டார்களை தயாரிக்கின்றனர். இடது கைக்காரர்களுக்கென 'Anythinglefthanded.co.uk' என்ற நிறுவனம் பெரிய நூல்நிலையத்தை 40 வருடங்களாக நடத்தி வருகின்றது. அத்துடன் வர்த்தக நிலையம் பல விளையாட்டுக் கிளப் என்பவற்றையும் நடத்துகின்றது. இடது கைப்பழக்கமுள்ள சிறுவர்களுக்கென தனியான ஓய்வு நிலையங்களை நடத்து கிறது. இவர்களுக்கென தனியான செய்தித்தாள் கூட உள்ளது. தனிப்பட்ட கொள்கைகள், நண்பர்கள் இணைப்பு, வீடியோ காட்சிகள். பல பரீட்சைகள் என்பவற்றையெல்லாம் நடத்திப் புகழ் பெற்றுள்ளது. அத்துடன் பல பரிசுப் பொருட்களையும் அவர்களுக்கு அனுப்பி உதவுகிறது. எந்த கேள்விக்கும் பதில் தருகிறது. பாடசாலைகளில் உள்ள இடது கைப்பழக்க பிள்ளைகளையும் நேரே சென்று உற்சாகப்படுத்துகிறது.

'Left' என்ற சொல்லுக்கு வித்தியாசமான கருத்துக்களை அகராதிகளில் குறிப்பிடுவதால் பலர் வேதனைப்படுவர். பலவீனம், பிரச்சினை, ஊனம், சகிக்கமுடியாமை இப்படியெல்லாம் புறிப்பிடப்பட்டுள்ளது. இலத்தீனில் உள்ள Left என்பது ஏதோ பாவம் செய்தவர் போல் உள்ளது. எப்படித் தான் பார்த்தாலும் இடது கைப்பாவனை யாளர்களை எல்லோரும் விநோதமாகவே பார்ப்பார்கள்.

பெண்களைவிட ஆண்களே இரு மடங்கு இடது கைப்பாவனையாளர்களாவர். அதே வேளையில் வேதனையான செய்தி வலது கைக்காரர்களை விட சராசரியாக 9 வருடங்கள் இடது கைக்காரர் குறைவாக வாழ்கிறார்கள் என்பதாகும். இன்னொரு விநோதமான செய்தி இடதுகைப் பாவனை யாளர்களுக்கு தனியான கலண்டர்களும் உள. இதில் திகதிகள் வாசிப்பதற்கு இலகுவாக அமைக்கப் பட்டிருக்கும். இன்னொரு செய்தி இடது கைப்பாவனையாளர்கள் கட்டிடக்கலை, கணிதம் போன்ற வற்றில் சிறந்துள்ளனர். 'I may be left handed but I am always right' என்ற வாக்கியம் பல இடங்களில் பாவிக்கப்படுகிறது. ரீசேட்ஸ், குவளைகளில் இவ்வாறு எழுதி தங்களை ஆற்றிக் கொள்கிறார்கள். இடது கைப்பாவனையாளர்களுக்கு ஸ்கொலர்சிப் (Scholarships) வழங்கும் நிறுவனங்களும் உள.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இடது கைகளைப் பாவிப்பதாக மனம் வருந்துவர். ஆனால் இதனை யாராலும் மாற்ற முடியாது. வலது பக்க மூளை இடது பக்கத்தினை கட்டுப்படுத்த ஆரம்பித்தால் இதனை மாற்றவே முடியாது. அவர்களுக்கு உலகில் பிறந்து பிரசித்தி பெற்ற இடது கைப்பாவனையாளர் பற்றிக் கூறலாம். மகா அலெக்சாந்தர், யூலியஸ் சீசர், நெப்போலியன், பிறின்ஸ் வில்லியம் என்போர் பற்றிக் கூறலாம். இடது கை எழுத்தாளர்கள் H.G Wells, Lewis Carroll, Bet Bowen போன்றோர் உளர். இடது கை சங்கீத மேதைகள் Phil Collins, Albert King, Ringo starr போன்ற பலர் உள. இடது கை ஓவியர்கள் மைக்கேல் ஏஞ்சலோ, Leonardo Da Vinci போன்றவர்கள் உளர். இடது கைப்பாவனை நடிகர்கள் Tim Allen, Chuck Connors, Matt Milon போன்ற நூற்றுக்கணக்கானவர்கள் உளர். இப்படியே உதைபந்தாட்டம், கிரிக்கெட், ஒலிம்பிக் விளையாட்டுக்கள், கோல்ப், சைக்கிள் ஓடுதல், ஹொக்கி, பிலியட்ஸ், பட்மின்ரன், மல்யுத்தம், வாகனம் செலுத்துதல், கூடைப்பந்தாட்டம், ரெனிஸ், பேஸ் போல் போன்ற எல்லா விளையாட்டுக்களிலும் இவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

உலகின் மிகச்சிறந்த பணக்காரரான பில் கேட்ஸ் இடது கைக்காரரே, மகாத்மா காந்தி, சார்லி சப்ளின், ஐன்ஸ்ரீன், ஒப்ரா (Oprau), மார்லின் மன்றோ, நெல்சன் மண்டெலா இவர்கள் எல்லோருமே இடது கைக்காரர்கள் என்பதில் வியப்பே மேலிடுகிறது.

# மழைக்காலத் தவளைக்கும் வெளிக்காட்டக் குரலுண்டு! தெரிந்து கொள்ளவேண்டிய ரஷிய வரலாற்றுச் சுருக்கம்



சுந்தரம் இந்திரராஜா

## You should know the summary of Russian History

ரூரிக் சுரசமை என்பவர் 862 ஆம் ஆண்டில் ரஷியப் பகுதியில் தன் இராஜ்யத்தை அமைத்தார் எனத் தெரிகி றது. இதுவே முதல் ரஷிய அரச வம்சம் எனப்படுகிறது. நாட்டின் பல பகுதிகளையும் பிரிவினரையும் 10, 11ஆம் நூற்றாண்டுகளில் ஒருங்கிணைத்து ஒரே அரசாக அமைக்கப்பட்டது.

1552 இலிருந்து 1556 வரை ஆண்ட இளவரசனான நான்காம் ஐவன் (Ivan-IV) மிகப் பயங்கரமானவன் (Ivan - The Terrible) எனும் அடைமொழியால் அடையாளப்படுத் தப்படுபவன். போரிட்டு அயல் முஸ்லிம் ராஜ்யங்களையும் அஸ்ட்ராகான் நாட்டுப் பகுதியையும் கைப்பற்றி ஆண்டான். இதன் மூலம், வோல்கா நதியின் கீழ்ப் பகுதிகளிலும் ரஷிய சாம்ராஜ்யம் நிலை பெற்றது. 1547இல் ஐவன் தன்னை ரஷ்யப்பேரரசர் _ (சார் Tsar) என்று அழைத்துக் கொண்டான். மன்னர்கள் வழி வழியாகப் பெருந் தன்மைக்கு எடுத்துக் காட்டானவர்கள் எனும் நடைமுறைக்கு எதிராக இவன் மிகப் பயங்கரமான ஆட்சியை மார்ச் 28, 1584 இல் இறக்கும்வரை நடத்தி வந்தான். 1547 முதல் 1721 வரை ரஷிய இராஜ்ஜியத்தை மன்னர்கள் (சார்கள் Tsars of Russia) ஆண்டு வந்தார்கள். வரலாற்று ரீதியாக ரஷியாவை ஆண்ட மன்னர்கள் பெரும்பான்மையாக ஒவ்வொருவரும் தனக்கென புதிய அரண்மனை ஒன்றையா வது அமைத்ததை அறிகிறோம். முதல் சார் மைக்கேல் ரோமனோவ் Tsar Michael Romanov அல்லது மைக்கேல்-I உடன் ஆரம்பமானது ரோமனோவ் வம்சத்தின் ஆட்சி Founder of Romanov Dynasty. 26 ஜூலை 1613 முதல் - 12 ஜூலை 1645 வரை 304 ஆண்டுகள் நீடித்தது.

304 ஆண்டுகள் ரோமனோவ் வம்ச ஆட்சி (1613 _ 1917) மைக்கேல் ரோமனோவ் Michael Romanov வம்சாவளியினரை, முதலில் சார்கள் (Tsars of Russia) என அழைக்கப்பட்டும் பின்னர் அவர்களை சக்கரவர்த்திகள் (Emperors of Russia) என அழைக்கப்பட்டும் வந்தனர். மைக்கேல் ரோமனோவ் இன் ஒரு பேரன் பீட்டர்-I ரஷிய இராஜ்ஜியத்தை அரசாண்டான். 1721ல் பீட்டர்-I இன் கீழ் ரஷியா ஒரு பேரரசானதுடன் அறியப்பட்ட உலக வல்லரசானது. 1682 இலிருந்து 1725 வரை அரசாண்ட பீட்டர்-I பெரும் வடக்குப் போரில் சுவீடனைத் தோற்கடித்தான். மேலும் மேற்கு கரேலியா இங்கிரியா குழப்பகாலத்தின் போது ரஷியாவால் இழக்கப்பட்ட இரு பிரதேசங்கள் பால்டிக் Baltic Sea கடற்கரையில் பீட்டர் புதிய தலைநகரான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை நிறுவினார். இது பிற்காலத்தில் ரஷியாவின் ஐரோப்பாவுக்கான நுழைவாயில் என அழைக்கப்பட்டது பீட்டரின் பாரிய மறு சீரமைப்புக்கள் ரஷியாவில் குறிப்பிடத்தக்க மேற்கு ஐரோப்பிய கலாசாரத் தாக்கங் களை ஏற்படுத்தின.

மேற்கத்திய பாணியை ஒத்து மறுசீரமைக் கப்பட்ட ரஷிய பேரரசை 1721இல் நிறுவி னார். 1682ல் அவரது சகோதரர் ஐவன்-V உடன் கூட்டாக ஆண்ட இவன் 1696 இல் ஐவன்-V இறந்த பின், பீட்டர்-I உத்தியோக பூர்வமாக ரஷ்யா ஒரு பெரிய சுதந்திர நாடு என அறிவித்தார். தனது முயற்சியால் விரிவான சீர்திருத்தங்கள் மேற்கொண்ட தால் மகா பீட்டர் Peter the Great என அழைக்கப்பட்டார். சதுர்பான நிலப் பகுதி யாக இருந்த பகுதியை கால் வாய்களை அமைத்து சதுர்ப்பு நிலத்தை நல்ல நிலங் களாக மாற்றிப் பற்பல கட்டிடங்களை மிகுந்த சிரத்தையோடு திட்டமிட்டு வடிவ மைக்கப்பட்டு விரைவாக சக்கரவர்த்திக்கால தலை நகரமாகவே உருவாக்கப்பட்டிருக் கிறது. மகா பீட்டரின் பெயரைச் சேர்த்து செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என அழைக்கப் பட்டு வருகிறது. இன்று ரஷ்ய நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகவும், உலகின் அழகிய நகரங்களில் ஒன்றாகவும் திகழும் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், சக்கரவர்த்தி மகாபீட்டர் கண்ட மகத்தான ஒரு கனவின் எழிலார்ந்த புறவடிவம். மாஸ்கோவை விடவும் இந்நக ருக்கே கூடிய முதன்மை தர எண்ணிய மகா பீட்டர் அங்குள்ள கட்டுமானப் பொருட்களையும் பணியாளர் களையும் இங்கே வருவித்து அழகான பல கட்டிட அமைப்புக்களை அசுர வேகத்தில் உருவாக்க முனைந்ததில் பிறந்ததே ரஷ்ய நாட்டுக் கலாசாரத் தலைநகரமாகப் போற்றப்படுகிறது இந்நகரம்.

1721-1917 ரஷிய இராஜ்ஜியத்தை ஆண்ட சக்கரவர்த்திகள் Emperors of Russia, 1721_1917 ரஷ்ய-ஜப்பானிய போரில் (1904-1905) 80,000 ரஷிய படையினர் போரில் தங்களது உயிர்களை இழந்துள்ளனர் என மதிப்பிடப் பட்டுள்ளது. செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கில் 22 ஜனவரி 1905ல் தொழிலாளர் கள் உரிமை கோரி நடத்திய ஊர்வலத்தின் போது சுமார் 200 பேர் கொல்லப்பட்டனர், 800 காயமுற்ற னர். சரித்திரத்தில் இதனை இரத்தம் தோய்ந்த ஞாயிறு Bloody Sunday/Red Sunday எனக் குறிப்பிடப்பட்டு ள்ளது.

ரஷ்யாவில் பல ஆண்டுகளாக சார் மன்னர் கள், சக்கரவர்த்திகள் சர்வாதிகார ஆட்சி யினை மேற்கொண்டு வந்தார்கள். வளங்க ளைச் சூறையாடி ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். மக்களையோ வறுமையில் தள்ளினார்கள். அவர்களின் உரிமைக ளைக் காலில் போட்டு மிதித்தார் கள். அவர்கள் மக்களின் நாடித்துடிப்பை அறியாமல் தான்தோன்றித்தனமாக ஆட்சி நடத்தினார்கள். அதனால் மக்கள் மத்தியில் பஞ்சம், பசி, பட்டினி என்பன தலை விரித்தாடின. இந்நிலைமை மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தினை உண்டு பண்ணியது. அதனால் சார் மன்னர்களின் வரம்பு மீறிய அதிகாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடனும், பாட்டாளி வர்க்கத்தினர் தமது சுய உரிமை களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் 1917 ஆம் ஆண்டு, நவம்பர், 07 ஆம் திகதி லெனினுடைய தலைமையில் ரஷ்யாவில் வெடித்த புரட்சிதான், சோசலிசப் புரட்சியாகும். ரஷ்யப்புரட்சியின் விளைவாக ஜூலை 17, 1918 சக்கரவர்த்தி நிக்கோலஸ் II, அவரது மனைவி, மற்றும் ஐந்து பிள்ளைகளுடன் சிறை பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட் டனர். 304 ஆண்டுகள் ரோமனோவ் வம்சம் செய்து வந்த ரஷ்யவம்ச ஆட்சி முடிவுக்கு வந்து ரஷிய சோஷலிசக் குடியரசு ஆரம் பமானது. ரஷியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் லெனின் முதல் ஆட்சியின் தலைவராக அமர்த்தப்பட்டார். சுரண்டப்பட்ட தொழிலாளர் இதயமெங்கும் ரத்தமாய் கலந்தார் லெனின். மழைக்காலத் தவ ளைக்கும் வெளிக்காட்டக் குரலுண்டு!.



ஜூலை 17, 1918 சார் நிக்கோலஸ்II, மனைவி, ஐந்து பிள்ளைகளுடன் சிறை பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். The Tsar Nicholas II &Tsarina with their five children - Assassinated: July 17, 1918

உலகம் நன்றாய் இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் உபதேசித்துக் கொண்டி ருந்தபோது, இந்த உலகை உருவாக்கிய உழைப்பவர் நன்றாயிருக்க வேண்டும் என்று நடைமுறைப்படுத்தினார் லெனின்.

| இல. | சக்கரவர்த்தி | தொடர்பு | ஆண்டகாலம் |
|---|---|---|---|
| 1 | Peter I (Peter the Great) மகா பீட்டர் | Son of Alexis I | 2 June 1682 - 08 February 1725 (St. Petersburg is founded). |
| 2 | Catherine I | Wife of Peter I | 08 February 1725 - 17 May 1727 |
| 3 | Peter II | Grandson of Peter I | 18 May 1727 - 30 January 1730 |
| 4 | Anna | Daughter of Ivan V | 13 February 1730 - 28 October 1740 |
| 5 | Ivan VI (Murdered) | Great-grandson of Ivan V | 28 October 1740 - 6 December 1741 |
| 6 | Elizabeth | Daughter of Peter I and Catherine I | 06 December 1741-05 January 1762 |
| 7 | Peter III (Murdered) | Grandson of Peter I | 09 January 1762 - 09 July 1762 |
| 8 | Catherine II (Catherine the Great) மகா கதரின் | Wife of Peter III | 09 July 1762 - 17 November 1796 |
| 9 | Paul I (Murdered) | Son of Peter III and Catherine II | 17 November 1796 - 23 March 1801 |
| 10 | Alexander I | Son of Paul I | 23 March 1801 - 01 December 1825 |
| 11 | Constantine Pavlovich | Brother of Alexander I | 26 December 1825 - 2 March 1855 |
| 12 | Nicholas I | Brother of Alexander I | 26 December 1825 - 2 March 1855 |
| 13 | Alexander II (Murdered) | Son of Nicholas I | 02 March 1855 - 13 March 1881 |
| 14 | Alexander III | Son of Alexander II | 13 March 1881 - 01 November 1894 |
| 15 | Nicholas II (Murdered) | Son of Alexander III | 01 November 1894 - 15 March 1917 |

முதல் உலகப்போர் (28 ஜூலை 1914 _11 நவம்பர் 1918) WW1 என்பது உலகம் தழுவிய அளவில் இடம்பெற்ற ஒரு போர். எனினும் இது பெரும்பாலும் ஐரோப்பாவி லேயே நடைபெற்றது. இப்போரில் நேச நாடுகள் என்று அழைக்கப்பட்ட பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் மைய நாடுகள் என்று அழைக்கப்பட்ட ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளும் எதிர்ப் பக்கங்களில் நின்று போரிட்டன. ரஷ்யா மட்டும் 175 மில்லியன் உயிர்களை இழந்தது என மதிப்பிடப்பட் டுள்ளது.

உலகின் பரப்பில் ஆறில் ஒரு பங்கை சோவியத் நாடு உள்ளடக்கியிருந்தது. உலகின் மிக நீளமான கடற்கரை சோவி

தொடர்ச்சி 38ஆம் பக்கம்)

# தன்னம்பிக்கை



Ranjson K.

இந்த உலகிலுள்ள பல வெற்றியாளர்களை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் அனைவரிடமும் உள்ள மிக முக்கியமான குணம் தன்னம்பிக்கை தான் என்பது தெரியவரும். ஒருவருடைய வெற்றி அவரை விளம்பரப் படுத்துகிறது. விளம்பரத்திற்காகப் பிரத்தியேகமாக விளம்பரம் செய்ய வேண்டியதில்லை.

வெற்றியைப் பரப்புவதால் அனைவருக்கும் தெரிகிறது தன்னம்பிக்கைதான் உண்மையில் நம் மனதின் படையின் தளபதியாகும். இது மற்ற அனைத்துத் திறமைகளின் சக்திகளையும் இரண்டு மற்றும் மூன்று மடங்காக ஆக்கிவிடுகிறது. தன்னம்பிக்கை வழிகாட்டித் தலைமை ஏற்கும் வரை முழுமையான மனப்படையும் காத்துக் கொண்டிருக்கும். நையாண்டியோ பரிகாசமோ எதிரிகளின் அச்சுறுத்தலோ அல்லது நண்பர்கள் கை விடுதலோ எதுவுமே லிங்கனின் சலியாத நம்பிக்கையை அசைக்க முடியவில்லை. தனது திறமையின் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கைதான் தேசத்தை அதனுடைய சரித்திரத்திலேயே மிகவும் கஸ்டமான போராட்ட நேரத்தில் அவரை வழிகாட்டி நடத்திச் செல்ல வைத்தது. மிகுதியான தன்னம்பிக்கையும் தான் எடுத்துக்கொண்ட பணியைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் தனது திறமையின் மீது திடமான நம்பிக்கையும் கொண்ட மக்களால் தான் எப்போதும் நாகரிகத்தில் அற்புதங்கள் நிகழ்த்த முடிந்தது.

தன்மீதும் வாழ்நாளில் தன் செயலின் மீதும் நம்பிக்கை கொள்ளவும் தன்னை அதில் சிரத்தையுடனும் தீவிரமாகவும் சுறுசுறுப்புடனும் ஈடுபடுத்திக் கொள்ளவும் ஒவ்வொரு இளைஞனுக்கும் கற்றுத்தரப்பட வேண்டும். வெற்றியை எதிர்நோக்க அவனுக்குக் கற்றுத்தரப்பட வேண்டும். மேலும் எப்படி ஒரு விதை மரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே தானும் சாதிக்கத்தான் பிறந்துள்ளோம் என்று நம்பிக்கை கொள்வதற்கும் அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். வாழ்க்கையில் ஒரு வெற்றி பெறும் மனிதனாக ஒருவரை உருவாக்கத் தன்னம்பிக்கை அவரது குழந்தைப் பருவத்திலேயே அவர் மனதில் விதைக்கப்பட வேண்டும். பாடசாலைப் புத்தகங்களின் பக்கங்களில் இதைப் பார்க்க முடியாது.

நான் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெறும் திறமை என்னிடமிருப்பதை நான் அறிந்திருக்கின்றேன். வெற்றி பெறுவதற்கு நான் செய்ய வேண்டியதெல்லாம் இந்த நம்பிக்கையை என்னிடம் ஏற்படுத்தி விடாமுயற்சியோடு செயலில் இறங்குவது தான். என் எண்ணங்கள் தான் இறுதியில் பௌதீக வடிவம் பெற்று இந்த உலகில் உண்மையாக மாறுகின்றது என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். எனவே யாராக மாற விரும்புகிறேனோ அந்த நபரைத் தொடர்ந்து சிந்தித்துக் கவனம் செலுத்தி அந்த நபரது மனப்படத்தை உருவாக்கி அதை நிஜமாக்கத் தினமும் முயற்சி செய்வேன்.

என்னால் முடிக்க முடியாத வேலையை ஆரம்பிக்கும் பழக்கத்தை நான் கை விடுகின்றேன். இப்போதிருந்தே நான் செய்ய விரும்புவதை முதலில் திட்டமிடுவேன் அதைப் பற்றிய தெளிவான மனப் படத்தை உருவாக்குவேன். அதன்பிறகு அவற்றைச் செயல்வடிவில் நிறைவேற்றும் வரை எனது திட்டத்தில் எதுவும் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்வேன். எனது சொந்தக் காலில் நிற்கக் கற்பேன். சுருக்கமான தெளிவான எளிய வார்த்தைகளில் என் கருத்துக்களை வெளிப்படுத்துவேன். என்திட நம்பிக்கையை வெளிப்படுத்தும் படியாக உற்சாகத்துடனும் முழுமையான வேகத்துடனும் நான் பேசுவேன். மற்றவர்களை என்னிடம் ஆர்வம் கொள்ளத் தூண்டுவேன். காரணம் நான் முதலில் அவர்களிடம் ஆர்வம் கொள்வேன். சுயநலத்தை அழித்து அதற்குப் பதிலாக சேவை மனப்பான்மையை வளர்த்துக் கொள்வேன்.

உங்கள் மனம் தான் அடைய விரும்புவதை ஒரு படமாக முதலில் மாற்றுகிறது. பிறகு அதை அடைவதற்கு உங்கள் உடலில் செயலை முடுக்கி விட்டு முன்னேறுகிறது. உங்கள் உணவில் விஷத்தைக் கலக்க நீங்கள் விரும்பாததைப்போல உங்கள் உணர்வுள்ள மனதில் பயம் தோன்றுவதை தவிர்த்திடுங்கள். காரணம் அதுவே உங்களுக்கும் உங்கள் நம்பிக்கைக்குமிடையே உள்ள ஒரே தடையாக இருக்கலாம். உங்களுக்கான ஒரு செயல் திட்டத்தை நீங்கள் உருவாக்கி மனப்பாடம் செய்யுங்கள். இன்னும் சொல்லப்போனால் மனதிற்குள் அமைதியாக வைத்துப் பூஜிக்கப்படும் எண்ணங்களை விடப் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தப்பட்ட எண்ணங்கள் அதிக வேகமாகப் பௌதீக வடிவில் உருமாறும் உண்மை உடையவை. நீங்கள் என்னவாக மாற விரும்புகிறீர்கள் என்பதை ஒரு தாளில் எழுதி உரக்கப் படித்துப் பாருங்கள்.

தோல்வியுற்றவர்களின் வரிசையில் இருக்கும் பல மக்களைத் தன் மீதே நம்பிக்கை பெறச் செய்து இழந்த தைரியத்தையும் மனோபலத்தையும் திரும்பப் பெற்றுத் தனது சாத்தியக் கூறுகளைக் காணவைத்து விட்டால் அவர்களால் அபரிமிதமாகச் செயல்பட முடியும். ஒருவரது திறமைகளைப் பெருக்கி சாதகமான நல்ல சூழ்நிலைகளை ஏற்படுத்தி அதிகமாகச் செயல்படவைப்பதற்குத் தன்னம்பிக்கையை விடச் சிறந்தது வேறொன்றுமில்லை. தன்னம்பிக்கை கொண்டவன் குறைவான திறமை வாய்ந்தவனாக இருந்தாலும் வெற்றி பெறுவான். உங்கள் மீதும் உங்கள் மனதில் செய்து முடித்துவிட முடியும் என்கிற உங்கள் செயல்பாட்டின் திறமை

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)


## Home away from Home

East end of Scarborough

Short term and Long term accommodation

- Semi & Private Rooms
- Daily house keeping services
- Freshly cooked meals ( Veg and Non-Veg , dietary & culturally sensitive food)
- Weekly Trips to malls, temples and community programs
- Laundry facilities
- Escort to activities, Doctor's appointments and meals at request*
- Telephone, Wi-Fi - internet
- TV – English & Tamil Channels
- Gentle exercise – Yoga and Meditation



Call for more information

437-997-1531

# நாம்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

தங்களை குறைபாடுள்ள மனிதர்களாகக் கருதிவிடுவார்கள் என்ற அச்சம். அவர்கள் கூட மருத்துவமனைக்கு போனால் அனைத்தையும் கூறுவார்கள். அப்படிக்கூறுவதில் மனத்திருப்தியும் அடைவார்கள். மற்றவர்களின் அனுதாபமும் கிடைக்கின்றது. மருத்துவமனை ஒருவகையில் மனிதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடம். ஆனாலும் சிலர் என்னிடம் வேலை செய்த பிறகு மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புவார்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த பயன்கள் மற்றவர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள்.

ஆக இரண்டு விதமானவர்களும் வாழ்க்கையை வேறு வேறாகப் பார்க்கின்றார்கள். எதையும் மறைக்க வேண்டும் என்று நினைத்தோமானால் எமக்கு உண்மையாக நாம் இல்லை என்றே அர்த்தம். ஒவ்வொரு மனிதரும் தமது உண்மையை மனம்விட்டுப் பேசி, கேட்பவர்களும் இது அவர்களுடைய சுயம் என்ற எண்ணத்தோடு நடந்தார்கள் எனில் ஒரு சிறந்த விரிவான உலகத்தை உருவாக்க லாம். எமக்கு உண்மையாக இருப்பது என்பது எம்மை நேசிப்பது, எமது தேவைகளை முதன்மைப்படுத்துவது, மற்றவர்கள் எம்மிடம் உதவிகோரும் போது எம்மால் முடியாதவிடத்து அதை வெளிப்படையாகக் கூறுவது என்பவற்றில் தங்கியிருக்கின்றது.

எமது கலாச்சாரத்தில் பெண்கள் தமது குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்வதிலே குறிக்கோளாக இருந்து தமது தேவைகளை பின்னுக்கு தள்ளி வைப்பார்கள். இதனால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி உடல்நலத்தையும் இழப்பார்கள். எமக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பது சுயநலம் ஆகாது. ஒவ்வொருவருடைய தேவையும் நிறைவேறுவது அவர்களுடைய நலனுக்கும் ஆரோக்கியத்திற்கும் மிக முக்கியமானது.

எமது தேவைகளை நாம் கவனிப்பது, நிறைவேற்றுவது என்பது எம்மைச் சார்ந்தவர்களின் தேவைகளை புறக் கணிப்பதாகாது. என்னிடம் சுமி என்ற பெண் சிகிச்சைக்காக வந்திருந்தார். மூன்று குழந்தைகளின் தாயான அவருக்குத் தன்னைத்தானே கவனித்துக்கொள்வதற்குக் கூட நேரமின்றித் தவித்தார். தன் முகத்தைக் கண்ணாடியில் பார்ப்பதே அரிதானதாகக் கூறினார். நான் அவருக்கு எப்படி வேலைகளை ஒழுங்குபடுத்துவது, நேரத்தை சேமிப்பது என்பன தொடர்பாக வழிகாட்டினேன். இப்பொழுது அவர் தன் முகத்தை கண்ணாடியில் பார்ப்பதற்கு மட்டுமல்ல உடல் பயிற்சிக்குக் கூடத் தேவையான நேரத்தைக் கொண்டிருக்கிறார். நேரத்தை உங்களுக்காக ஒதுக்குவது மிகமுக்கியமானது. ஏனென்றால் நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால் உங்களால் பலர் நன்மை பெறுவார்கள்.

அதுபோலவே ஒருவர் உங்களிடம் உதவிகோரும் போது உங்களால் உதவி செய்ய முடியவில்லையெனினும் முகத்திற்காக முழு விருப்பமின்றி அந்த உதவியை செய்யும் போது அதனால் இருவருக்குமே நன்மை கிடைக்காது. அவரிடம் என்னால் இதைச் செய்யமுடியாது எனக்கூறுவதன் மூலம் நீங்கள் உங்களுக்கும் அவருக்கும் நன்மை செய்கின்றீர்கள். எப்பொழுதும் நாம் விருப்பமின்றி செய்யும் வேலைக்கு எதிர்மறை சக்தியை கொடுக்கின்றோம். அந்த வேலையும் நன்றாக நடக்காது.

சில நேரங்களில் சிலர் மற்றவர்களிடத்தில் உதவி கேட்கும்போது மற்றவர்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கின்றது என்பதை உணர மாட்டார்கள். அவர்களைப் போன்றவர்களிடத்திலே காட்டும் மறுப்பு உண்மையில் அவர்கள் வளர்வதற்கு உதவிசெய்யும். நேர்மையாக நாம் எதனால் மறுப்புத் தெரிவிக்கின்றோம் என்பதைக் கூறுவது அவர்களுடைய வளர்ச்சிக்கு இன்னும் கூடுதலாக உதவும். என்னுடைய சொந்த அனுபவத்தில் நான் உண்மையாக மறுப்புச் சொல்வதோ அல்லது உண்மை நிலையை விளக்கிச்சொல்வதோ மிகச் சிறந்த பலன்களை வழங்கி இருக்கின்றது. எனக்கு உண்மையாக நான் இருக்கும் போது மற்றவர்களும் அதை உணர்வார்கள்.

எமது இந்த வாழ்க்கையில் நாம் தேடுவது ஆரோக்கியமே. இது எமக்குள்ளிருந்தே (inner being) ஆரம்பிக்க வேண்டுமே தவிர வெளி உலகிலிருந்து ஒரு போதும் கிடைக்காது.

# செஞ்சீனா...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

## கிங் பரம்பரை



ஒக்ரோபர் 1644 டோர்கன் என்ற இளவரசர் கிங் பரம்பரையே, மிங் பரம்பரையை வென்று வட சீனா முழுவதையும் ஆளும் வல்லமை கொண்டுள்ளது எனப் பிரகடனப்படுத்தினார். 1860 இல் இரண்டாம் கஞ்சாப் போரின்போது ஆங்கிலோ பிரெஞ்சுப் படைகள் அனுமதி மறுக்கப்பட்ட இந்நகரை தமது ஆதிக்கத்தில் போர் முடியும் வரை வைத்திருந்தன. 1900 இல் பொக்சர் கலகத்தின்போது டௌவாகர் சிக்சி மகாராணி இந்நகரை விட்டு வெளியேறினார். ஓராண்டுக்கு இந்நகரை உடன்படிக்கைக் காரர் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தனர்.

1912இல் இந்நகரின் கடைசி மன்னனாகிய பூயி தனது பதவியைத் துறந்தான். 24 சக்கரவர்த்திகளின் (14 மிங் பரம்பரையையும் 10 கிங் பரம்பரையையும் சேர்ந்த சக்கரவர்த்திகள்) ஆதிக்கத்திலிருந்து நகரம் சீனாவின் ஆட்சிபீட தானத்தை இழந்தது. எனினும் கிங் அரசமாளிகையும் புதிய சீனக் குடியரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி பூயியும் அவரின் குடும்பமும் மாளிகையின் உட்புறத்தில் வசிக்கவும், வெளிப்புறத்தை குடியரசு ஆட்சியினர் பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1914 வெளிப்புற மாளிகையில் ஒரு அருங்காட்சியகம் நிறுவப்பட்டது.

1923இல் பூயியின் ஆங்கில ஆசிரியர் றெஜினோல்ட் ஜோன்ஸ்ரன், அரண்மனையிலுள்ள அலிகள் விலைமதிப்புள்ள பொருட்களைத் திருடிக் கடைகளுக்கு விற்பதைத் தெரிவித்தார். எனவே மன்னர் கணக்கெடுக்கும்படி தமது அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அது ஆரம்பிப்பதற்கு முன்னரே அரும்பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருந்த மண்டபம் தீப்பற்றியது. இதனால் பல பொருட்கள் நாசமாகின. அலிகளே அம் மண்டபத்துக்குத் தீ வைத்ததாக மன்னர் தனது வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டிருந்தார். இதனால் மன்னர் தொடர்ந்தும் மாளிகையில் வசிப்பது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. எரிந்த மண்டபம் 2005 ஆம் ஆண்டு வரைக்கும் மீளக்கட்டப்படவில்லை.

1924 இல் பெங் யூசியாங் என்பவர் ஒரு சதித்திட்டத்தின் மூலமாக பெஜிங் நகரைக் கைப்பற்றினார். அவர் பூயியையும் அவரது குடும்பத்தையும் மாளிகையிலிருந்து வெளியேற்றினார். 1925 இல் இந்நகரில் ஓர் அருங்காட்சியகம் நிறுவப்பட்டு அரும்பெரும் பொருட்கள் பட்டியலிடப்பட்டு, மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன. இவை இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஜப்பானியரின் படையெடுப்பின் போது இவற்றைப் பாதுகாப்பதற்காக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கவனமாகப் பொதிகளாகக் கட்டப்பட்டு ஒதுக்குப்புறமான மேற்கு நகரகளான ஷான்சி, சிசுவான், குவாங்சி ஆகியவற்றிக்கு அனுப்பப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது இந்நகரை ஜப்பானியப் படைகள் கைப்பற்றின. 1945 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் மேற்கு நகரங்களுக்கு அனுப்பப்பட்ட அரும்பொருட்கள் நான்ஜிங்குக்கும் பெய்ஜிங்குக்கும் மீளக் கொண்டு வரப்பட்டன. 1940 இல் சீன உள்நாட்டுக் கலகத்தில் வென்ற சியாங் கைஷேக், இப் பொருட்களை தைவானுக்கு அனுப்பும்படி கட்டளையிட்டார். நான்ஜிங்கிலிருந்த சிறந்த பொருட்கள் அங்கு அனுப்பப்பட்டன. ஆனால் பெய்ஜிங்கிலிருந்து எதுவும் அனுப்பப்படவில்லை. நான்ஜிங்கிலிருந்து அனுப்பப்பட்டவை இன்று தைப்பே, தேசிய அருங்காட்சியகத்தின் முக்கிய பொருட்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## சீனமக்கள் குடியரசின் கீழ்

1949 இல் சீன மக்கள் குடியரசு ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. ரியனென்மென் சதுக்கத்தில் இந்த ஆட்சியின் 20 ஆண்டு காலமாக அனுமதி மறுக்கப்பட்ட நகரை அழித்து மக்கள் பூங்கா அமைக்க வேண்டும் அல்லது வீதிகள் அமைக்க வேண்டுமெனப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இதனால் சிம்மாசனம், சில கட்டிடங்கள், தோட்டங்கள், சிறிய வாயில்கள் போன்றவை அழிக்கப்பட்டன. 1966 இல் நடந்த கலாசாரக் கலகத்தின் போது முன்னோரை வழிபடும் மண்டபம், சில கைவினைப் பொருட்கள் யாவும் அழிக்கப்பட்டன. மேலும் இப்பொருட்களும் நகரமும் சேதமடையா வண்ணம் அப்போதைய பிரதமர் சோஎன்லாய், செங் காவலரிடமிருந்து பாதுகாப்பதற்காக ஒரு படையை அனுப்பி வைத்தார். 1966 முதல் 1971 வரை யாரும் இதற்குள் செல்வதைத் தடைசெய்து வாசல்கள் யாவும் மூடி வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இதனால்தான் இதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நகரம் எனப் பெயர் வந்தது. சோ என்லாய் இவ்வாறு செய்யாமல் விட்டிருந்தால் சீனாவின் பழம் பெருமையை உலகம் அறிந்திருக்க முடியாது. 1987 இல் இந்நரை உலகப் பாரம்பரிய இடமாகப் பிரகடனப்படுத்தியது யுனெஸ்கோ. மிங், கிங் அரச பரம்பரையின் சீனப் பாரம்பரியம், கட்டிடக் கலை ஆய்வற்றின் முக்கியத்துவத்தையும் முன்னேற்றத்தையும் இந்நகரம் உலகுக்குப் பறைசாற்றிக் கொண் டிருக்கிறது.

## இன்றைய நிலை

இந்நகரின் பாதுகாப்பும் மீளமைப்பும் மாளிகை அருங்காட்சியகத்தின் பொறுப்பிலுள்ளது. உயர்மாடிக் கட்டிடங்கள் எதுவும் கட்டுவது இதன் அருகில் தடைசெய்யப்பட்டுள்ளது. 2005 இல் இந்நகர் 1912 க்கு முன் இருந்த அதேநிலைக்குக் கொண்டு வருவதற்காக 16 ஆண்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மாளிகையின் தீயினால் சேதப்படுத்தப்பட்ட பகுதி 2005 இல் மீளமைக்கப்பட்டு, உட்புறம் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டு, அரச விருந்தினரின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்களும், வியாபாரக் கடைகளும் இப்பகுதியில் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால் நினைவுச் சினனங்கள் விற்கும் கடைகளும் படப்பிடிப்பு நிலையங்களும் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.



2005 இல் ஐபிஎம் (IBM) நிறுவனமும் மாளிகை அருங்காட்சியகமும் சேர்ந்து ஒரு முப்பரிமாண வீடியோ காட்சி ஒன்றைத் தயாரித்தன. அது இப்போது யூ ரியூப்பில் (You tube video - The Forbidden City - Beyong space and time இத்துடன் The Last Emperor of china) என்ற இரு வீடியோக்களையும் நீங்கள் பார்க்கலாம். மேலும் இதுவரைக்கும் எழுதிய கட்டுரை களில் நான் பார்த்த இடங்களாகிய ரியனென்மென் சதுக்கமும் அனுமதி மறுக்கப்பட்ட நகரமும் ஒரே நாளில் பார்த்தேன். உண்மையில் இவற்றைப்பார்க்க மூன்று நாட்களாவது தேவை. (தொடரும்)

# பக்தி



நா. க. சிவராமலிங்கம்

பக்தி என்றால் நம்பிக்கை எனலாம். நம்பு என்பதன் பகுதியடியாகப் பிறந்த சொல் நம்பிக்கை. நம்புதல் என்றால் விரும்புதல் என்று பொருள். எனவே விரும்பி நாம் கொள்கின்ற ஒன்றுதான் நம்பிக்கை. விருப்புடன் எதை நாம் நம்முடையது என்று ஏற்றுக் கொள்கின்றோமோ அதற்குப் பெயர் நம்பிக்கை. நாம் எத்தனையோ பொருட்களில் நம்பிக்கை வைக்கின்றோம். சிறப்புக் கருதி கடவுள்மீது கொள்ளும் நம்பிக்கை தான் நம்பிக்கை என்றாகின்றது. நம்பன் என்பது கடவுளின் பெயர்களில் ஒன்று.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதால் நம்பிக்கை வைக்கத்தக்க உறுதிப் பொருள் கடவுள் எனலாம். எல்லாவற்றையும் கடந்தும் எல்லாவற்றிலும் கலந்தும் நிற்பவர் கடவுள் என்பதால் அவர் மீது நம்பிக்கை வைப்பதால் நாம் ஈடேற்றம் அடையலாம். முன்னைப் பழம் பொருட்டும் முன்னைப் பழம் பொருளாகவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாகவும் விளங்கும் பேரருட் சக்தியான இறைவனிடம் இருக்கமான இடையீடில்லாத நம்பிக்கை கொள்வதனால் நாம் எல்லையில்லாப் பேரானந்தம் அடையலாம்.

உலகில் எல்லாமே சரியாகத் தான் இருக்கின்றன என்கின்ற நம்பிக்கையும் படைப்பில் ஒழுங்கீனமோ, பாரபட்சமோ, பிசகோ இல்லை என்கின்ற எண்ணமும், அதில் நாம் ஒரு பகுதி என்று தெளிந்து இந்த அமைப்பில் நமக்குரிய இடத்தில் பொருந்தி அமைந்து இருப்பது தான் பக்தி.

உண்மையில் இந்தப் பெரும் படைப்பை புரிந்து கொள்ள முயன்று அதில் வியப்பு மீதூர நாம் உணரும் ஒவ்வொரு உண்மையும் நமது நம்பிக்கைக்கு ஆதாரமாகும். இதுதான் பக்தி. இங்கு ஏதோ சரியில்லை போல சிற்சில சமயம் ஒரு மயக்கம் உண்டாகி அதைச் சரி பண்ண நாம் முற்படும் போது நம்மிடம் அவநம்பிக்கை வேர் கொள்ளத் தொடங்கிவிடும். அதாவது நம்மிடம் பக்தி குன்றிவிடுகின்றது.



சமூகச் சீர்திருத்தம் செய்யும் தலைவன் முதல் தன்பிள்ளையைத் திருத்த முயலும் தகப்பன் வரை எவரும் எந்தச் சமூகத்தினதும் கூன் நிமிர்த்தியதில்லை. இவர்களை பக்திக் குறையுடையவர்கள் என்று கூறினால் தப்பில்லை. ஏனெனில் உண்மை என்னவோ அதுதான். எந்தச் சமூகத்தையும் ஒரு தலைவன் நிமிர்த் தியதில்லை. பிள்ளையை தகப்பன் திருத்தி னான் என்பது உபசார வழக்குத் தான்.

உலகில் வந்து பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் தனக்குரிய வாழ்க்கையை தானே கண்டுபிடித்து விடுகின்றது. எந்தத்த திருத்தத்தையும் சமூகம் ஏற்றுக் கொண்டு நிலைத்து விட்டிருந்தால் புதிய துயரங்களும் புதிய சீர்திருத்தங்களும் தோன்றியிருக்குமா? விடயம் என்னவென்றால் படைப்பின் பான்மையில் யாவும் ஒரு ஒழுங்கில் வளர்ந்து தாழ்ந்து மாறிப் புதுமை பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. உலகில் வாழும் மனிதனுடைய மனப்பாங்கில் தான் துயரங்களும் குறைகளும் காணப்படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து கொள்ளும்போது தான் அந்த உள்ளம் துயரத்தை வெல்கின்றது. துயரத்தில் ஆழ்ந்து கிடக்கும் எண்ணற்ற உயிர்களின் பால் இரங்குகின்றது. துயரங்களிலிருந்து விடுதலை ஒவ்வொரு உயிருக்கும் அவ்வுயிரிலேயே இருக்கின்ற ரகசியம் விளங்குகின்றது. அப்பொழுதே அழிவற்ற ஒளிமிக்க புன்னகை பிறக்கின்றது.

ஒன்றை ஆம் என்று ஒப்புக்கொள்வது மட்டும் நம்பிக்கையல்ல. அதை உணர்ந்து ஏற்று அவ்வுணர்வில் பரவசப்பட்டு நிற்பதும் நம்பிக்கை. அதுதான் பக்தி. அந்தப் பரவசம் தான் பக்தி. அதாவது நான் என்ற தனிமையிலிருந்து விடுபட்டு உயிர் என்ற பொதுமையிற்பட்டு அதாவது பரத்தின் பாற்பட்டு நிற்பது அது பரவசம் தானே. பக்தி விட சொல்பட நம்பிக்கை. தமிழ்சொல் பக்தியினால் சித்தம் தெளியும். செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும். தலைகோபுரம் போல் நிமிர்ந்து நிலைபெறும் என்று கூறிய பாரதியார் நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்படி என்று கூறியுள்ளார்.

பக்தி உடையார் காரியத்திற் பதறார் என்பதும். அவருடைய வாக்குதான். நம்பிக்கையை வளர்த்தால் நலம் பெறலாம். பக்தியால் யானுனைப் பலகாலும் பற்றியேமாதிருப் புகழ்பாடி என்றார் அருணகிரியார். பக்தி வலையில் படுவோன் பரமான் என்றனர். அருளாளர்கள். அந்த பக்தி நவ பக்தியாகும். பாடிப்பரவும் அடியவர் துயர் தீர்ப்பவன் பரமன். கஷ்டம், துன்பம், கவலை இடையூறு இன்னல் ஏற்படும் போது தான் இறைவனை எண்ணி ஏற்றிப் போற்ற வேண்டுமென்பதல்ல. இயலுமானவரை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இறைவனை எண்ணித் துதித்து வரலாம்.

நவவித பக்தி பின்வருவனவாகும்

- சிரவணம் - இறைவனின் திருநாமத்தை, புகழை கேட்டல்
- கீர்த்தனம் - இறைவனின் பெருமையை, நாமங்களைப் பாடுதல்
- ஸ்மரணம் - இறைவனின் குணங்களை தியானித்தல்
- பாதஸேவனம் - இறைவனது திருவடிக்கு தொண்டு புரிதல்
- அர்ச்சனம் - இறைவனை நீர், மலரால் வழிபடுதல்
- வந்தனம் - இறைவழிபாடு முடிந்ததும் வீழ்ந்து வணங்குதல்
- தாஸ்யம் - இறைவனுக்கு ஆளாதல். ஆண்டான் அடிமைத் திறன் பேணுதல்
- ஸகாயம் - இறைவனை தோழனாகக் கொள்ளல்
- ஆத்மநிவேதனம் - ஆத்மாவை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தல்

பக்தி செய்வது பெரும்பாலும் சுயநலக்காப்பு உள்ளதாகவே இருந்தாலும் அது விசேடமாக பொது நலம் சார்ந்ததாக இருக்க வேண்டிய விடயமாகும். மண்ணுயிர்களை தன்னுயிர் போல கருதி பக்தி செய்வதனால் வீடு விளங்கும். நாடு செழிக்கும். உலகம் உய்தி பெறும். வான்முகில் வாழாது பெய்யவும், வளம் பல சுரக்கவும், அரசு நல்லரசாக அறங்கள் ஓங்கவும் நற்றவம் வேள்வி மல்கவும் பக்தி பயனளிக்க வேண்டும்.

# Hidden ...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒரு மனிதரை விண்வெளிக்கு அனுப்புதல் தோல்வி அடைந்தபின், அமெரிக்க அதிபர், அமெரிக்க விண்வெளி வீரரை உடனடியாக



விண்வெளிக்கு அனுப்ப வேண்டும் எனக் கட்டளையிடுகிறார். இதை நிறைவேற்ற வேண்டும் என்ற அனைவரது தீவிர ஆசையினால்தான் NASAவில் இருந்த இன வேறுபாட்டை கொஞ்சம் கொஞ்சமாக மறந்து எல்லோரும் வேலை செய்கிறார்கள்.

இப்படத்தில் பெரும்பாகம் உண்மையாக நடந்தவற்றைக் காட்டுகிறது. படத்திற்காக சில சந்தர்ப்பங்கள் நடந்த காலம் என்பன மாற்றப்பட்டுள்ளது. நாம் எல்லோரும் பார்க்கவேண்டிய சரித்திரப் படம் இது. இப் படத்தில் பிரதம கதாபாத்திரமான Katherine Goble Johnson (Taraji P. Henson) இன் உண்மையான வாழ்க்கையைப் பற்றி தற்போது கொஞ்சம் பார்க்கலாம்.

அமெரிக்கா John Glennஐ முதன்முதலாக விண்வெளிக்கு அனுப்பிய 1962ஆம் ஆண்டு Mission உட்பட, Apollo 11ஐ சந்திரனுக்கு 1969 ஆம் ஆண்டு அனுப்பியது, Apollo 13 இன் விண்வெளிப் பயணம் போன்ற பல NASA Mission களுக்கு பல்வேறு கடினமான கணக்குகளை இவரே தீர்த்து வைத்தார்.

2015 இல்தான் இவருக்கு அமெரிக்க ஜனாதிபதியால் Presidential Medal of Freedom வழங்கப்பட்டது. 2016இல் NASA வின் Research Facility ஒன்றிற்கு அவரது பெயர் வைக்கப்பட்டது. Katherine Goble Johnson தற்போது 98 வயதில் Virginia, USA இல் வாழ்கிறார்



## Personal Prayer To The Holy Spirit

Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - *R.R B.N*



Our Mother of Perpetual Help

# மழைக்காலத்...

34ஆம் பக்கத் தொடர்ச்சி.....

யத்தினுடையது. எந்த நாட்டின் எல்லையையும் விட நீண்ட எல்லைப் பரப்புடைய நாடாக சோவியத் யூனியன் விளங்கியது. அறிவியல் ஆராய்ச்சித் துறையில் சமதர்ம நாடான சோவியத் முன்னணியில் விளங்கியது. 1949இல் முதல் அணுக் கருவியை வெடிக்கச் செய்தது. தொடர்ந்து ஹைட்ரஜன் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு 1953இல் வெடிக்கச் செய்யப்பட்டது. உலகின் முதல் செயற்கைக் கோளான ஸ்புட்னிக் 1957இல் சோவியத் நாட்டால் தான் முதன் முதலில் விண்வெளியில் ஏவப்பட்டது. மனிதன் பயணித்த விண்வெளிப் பயணம் உலகில் முதன் முதலாக சோவியத் நாட்டால் தான் நடத்தப்பட்டது. பயணம் செய்த முதல் மனிதன் யூரி காகரின் ஆவார்.

சோவியத்துக்கும் அமெரிக்காவுக்குமான பனிப் போர் 1948லிருந்து 1953 வரை மிகவும் கடுமையாக இருந்தது. ஜோசப் ஸ்டாலின் 1953இல் மறைந்தார். கடுமை குறைந்தது. ஆனாலும் 1960 வரை அதன் தாக்கம் நீடித்து வந்தது.

1991ல் சனத்தொகை 293 மில்லியன். 1985-




1991 ஆண்டளவில் ஜனாதிபதியாக இருந்த மைக்கேல் கோர்பசேவ் அவர்களின் வழி காட்டுதலில் பேச்சுரிமை, எழுத்துரிமை, ஜனநாயகம் போன்ற உரிமைகள் மக்களுக்குக் கிடைத்தன. கம்யூனிசத்தின் வீழ்ச்சியின் ஆரம்பம் எனலாம். இனி மர்மம் இல்லை, ரஷ்யா இப்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவால் அடக்கப்பட்டு வாழ்வதாகக் கூறி சோவியத் ஒன்றியம் இன்று பல்வேறு சிறு நாடுகளாய் சிதறுண்டு போவதுதான் கவலைக்குரியது. ரஷ்யா வளர்ச்சி கண்ட துறைகளில் உல்லாசத்துறையும் ஒன்று. தொடரும்...

# தன்னம்பிக்கை

35ஆம் பக்கத் தொடர்ச்சி.....

யின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையைத் தகர்க்கக்கூடிய எந்த மனிதனையும் உங்கள் எதிரியாகவே கணித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் உங்கள் தன்னம்பிக்கை போய்விட்டால் உங்களது சக்தியையும் நீங்கள் இழந்து விடுவீர்கள். மாவீரன் நெப்போலியனுக்குத் தன்மீதான பிரம்மாண்டமான நம்பிக்கைதான் அவனை அரசனாக்கியது.

# 7 புதிய...

39ஆம் பக்கத் தொடர்ச்சி.....

அவை அனைத்தும் ஒரே அளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் வாழ சாத்தியம் உள்ளதா என்பது குறித்து 10 ஆண்டுகள் ஆய்வு நடத்த வேண்டும் என்றும், பூமி போன்ற அதிக கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்றும் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

டிரப்பிஸ்ட் -1 பி கோள் ஒன்றரை நாளில் தனது சுற்றுப்பாதையைக் கடப்பது தெரிய வந்துள்ளது. இதேபோல் டிரப்பிஸ்ட் - 1எச் கோள் தனது சுற்றுப்பாதையை கடக்க 20 நாட்கள் எடுத்து கொள்கிறது.

இது வெள்ளிக்கோள் சூரியனைக் கடக்க எடுத்துக் கொள்ளும் நாட்களை விட 5 மடங்கு குறைவாகும். இது எல்லாவற்றுக்கும் மேலாக டிரப்பிஸ்ட்-1 கோள் மிதமான வெப்பத்தைக் கொண்டுள்ளது.





# 7 புதிய கிரகங்களைக் கொண்ட புதிய சூரியக் குடும்பம் கண்டுபிடிப்பு

விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா கோள்கள் குறித்து அறியும் வகையில் நேரலை ஒன்றை ஒளிபரப்பியது. இதில் ஸ்பிட்செர் மூலம் பூமியை போன்றே 7 புதிய கோள்களைக் கண்டறிந்ததாக நாசா அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

பூமியிலிருந்து 40ஒளி ஆண்டுகள் தொலைவில் பூமி போன்ற புதிய கிரகங்களை நாசா கண்டறிந்துள்ளது. இந்த 7 புதிய கிரகங்களில் மூன்றில், மனிதர்கள் வாழக்கூடிய சூழல் உள்ளது என நாசா அறிவித்து உள்ளது. நீர் ஆதாரம், காற்று எனப் பூமியின் சூழல் அந்த மூன்று கோள்களில் உள்ளதாக நாசா கூறுகிறது. இந்தப் புதிய கிரகங்கள் அளவிலும் கிட்டத்தட்ட பூமியை ஒத்து உள்ளன அல்லது அதைவிட சற்று சிறிதாக உள்ளன. இதுவரை மனிதர்கள் கண்டுபிடித்த கிரகங்களிலேயே இதுதான் சிறந்த கண்டுபிடிப்பு என்றும் நாசா வர்ணித்துள்ளது. காரணம் இந்தக் கிரகங்கள் கிட்டத்தட்ட பூமி போலவே உள்ளது. இப்புதிய சூரிய மண்டலம் டிராப்பிஸ்ட் 1 என்ற நட்சத்திரத்தை 7 புதிய கிரகங்கள் சுற்றி வருகின்றன. டிராப்பிஸ்ட் 1 தான் இக்கோள்களின் சூரியன் எனவும் பொருள் கொள்ளலாம். இதுகுறித்து நாசா தகவல் வெளியிட்டபோது நாசாவுக்குப் பல்வேறு கேள்விகளை செய்தியாளர்கள் முன் வைத்தனர்.
அதில் சில கேள்விகளும், அதற்கான பதில்களும்:

கே: புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள சூரிய குடும்பத்தை சென்று சேர தற்போதுள்ள தொழில்நுட்பத்தின் படி எவ்வளவு காலம் பிடிக்கும்?

ப: தற்போதுள்ள எந்தத் தொழில்நுட்பமும், புதிய கோள் கூட்டங்களை சென்று சேரும் திறன்மிக்கவை கிடையாது. எனவேதான், விண்வெளி ஆய்வுக்கான ரெலஸ்கோப்புகளைப் பயன்படுத்தி தொலைவிலிருந்தபடியே ஆய்வுகளை நடத்தி வருகிறோம்.

கே: பூமி, செவ்வாய் கிரகங்களில் காணப்படும் ஈர்ப்பு விசையுடன் ஒப்பிட்டால், உயிர் வாழத் தகுதி வாய்ந்த இந்த 3 கோள்களின் நிலை எப்படி?

ப: ஈர்ப்பு விசை பற்றி அறிய வேண்டுமானால், அக்கோள்களின் நிறை மற்றும் ரேடியஸ் ஆகியவை குறித்து அறிய வேண்டும். இப்போது கிடைத்துள்ள தரவுகள் அடிப்படையில் பார்த்தால், இம்மூன்று கோள்களின் ஈர்ப்பு விசை, பூமியை ஒத்துப்போகிறது. இதில் கோள் எப்-க்கு மட்டும் விதி விலக்கு. ஏனெனில் இந்தக் கோள் பூமியை விட சுமார் 68 சதவீதம் ஈர்ப்பு விசை குறைந்ததாகத் தெரிகிறது.

கே: இந்த கோள்களில் உயிரினங்கள் பயிர், மரங்கள் வடிவில் இருக்கின்றன என்பதை அடுத்த 20-30 வருடங்களில், அதிகாரப்பூர்வமாக நாம் அறிந்து கொள்ள முடியுமா?




ப: இந்தக் கோள்களில் கடல், கண்டங்கள், பயிர்கள் போன்றவை உள்ளனவா என்பதைக் கண்டறிய நவீன ரெலஸ்கோப்புகள் தேவை. அடுத்த வருடம் புதிதாக ஒரு ரெலஸ்கோப்பை அறிமுகம் செய்யவுள்ளோம். அதைவிடவும் நவீன ரெலஸ்கோப்புகளால் மட்டுமே இக்கோள்களில் உள்ள விடயங்கள் பற்றித் துல்லியமாக தெரிந்துகொள்ள முடியும். பிற நட்சத்திரக் கூட்டங்களில் இருந்து வெளிவரும் வெளிச்சத்தை அடக்கி, இக்கோள்களை பார்க்கும் வகையிலான அதி நவீன ரெலஸ்கோப்புகள் அவசிய தேவையாகும். அதற்கு கால நேரம் தேவைப்படும்.

நாசாவின் சாதாரண விண்கலம் மூலம் போவதாக இருந்தால், அதிலும் மணிக்கு 28,163 கிலோமீட்டர் வேகத்தில் போவதாக இருந்தால் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள சூரிய குடும்பத்தை சென்று சேர கிட்டத்தட்ட 10.5 லட்சம் வருடங்களாகும். விரைவாகச் செல்ல ஒரே வழி ஒளியின் வேகத்தில் செல்வது மட்டுமே. அப்படிப் போவதாக இருந்தால் 40 வருடத்தில் போய்ச்சேர முடியும். இப்போதைக்கு இதை விட விரைவாகச் செல்ல வழி இல்லை.

பூமியின் நெருங்கிய உறவினர்கள், பூமியின் கஸின்ஸ் என இந்த 7 புதிய கோள்கள் அழைக்கப்படுகின்றன. இந்த 7 கோள்களில் குறைந்தது 3 இல் மனிதர்கள் வாழமுடியும். மற்ற 4 கோள்கள் அதிக நீரைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இருப்பினும்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



Math tutorial338

Answers to tutorial 337

1)20 litres is equivalent to (2/3-1/4) =5/12 of the tank. Therefore the full tank is 48 litres

2)to find the next palindrome we must make the least increases as possible.this will be accomplished, with a number having an odd number of digits,by increasing the middle digit by 1For example the next palindrome after 131 is 141 and after 191 is 202.For a number having an even number of digits we would increase each of the two internal digits by 1.For example the next palindrome after 2772 is 2882 and the next after 2992 is 3003 .to change 15951 *to the next palindrome ,we* would change the 9 to 0 and make the other changes necessary, so the next palindrome is 16061.The increase is 16061-15951=110 miles

3)f(h(x) +g(h(x) =125+25+10+2=162

4)$\cos(\frac{3\pi}{2}+x)\sin(\pi+x)$

$=2\sin x.(-\sin x) =-2\sin^2 x =\cos 2x -1$

Tutorial 338

Questions

1)An escalator move at a constant rate from one floor to the next floor Gaya walks up 29 steps while travelling on the escalator between the floors Nithila takes twice as long to travel between the floors and walk up only11 steps.When it is stoped , how many steps does the escalator have between the 2 floors?

2)Mark is counting forwards 1,2,3.4......at the same time and same speed Marian is counting backwards x,x-1,x-2,.....when Mark says 53 Marian says75.what must x be?(for gr 6&7)

3)If f(x)=3x+5 and g(x) =5-2xdetermine$f0f^{l}$ and $f^{l}0f$?

By Mr S.FXavier (Teacher) tel 6473409490






தூங்காமல் தூங்கி சுகம்பெறுவது எக்காலம்.
சிவராத்திரிக்கு பகுதிநேரமாக நித்திரை விழித்து அதுவும் ரூபன் வாங்கிக்கொடுத்த பொக்ஸ் இரவுபகலாக உலகெல்லாம் உள்ள எல்லாச்சனலும் மாறி மாறி படம் நாடகம் இலங்கையில் நடைபெற்ற சிவராத்திரி எல்லாம் நேரடி ஒலிபரப்பு பார்த்துவிட்டு உலகர் குழாம் பகல் முழுவதும் தூங்கி வழிந்து கொண்டிருந்தது.



கூலிக் கொலைகள், சிலர் இறப்பு. அதாவது கொலைக்கு காரணம் உண்டு. ஆனால் கொலைக்காக கூலிக்கு ஆட்களை அமர்த்துவது அல்லது அவர்களை ஆசை வார்த்தைகள் பேசி குண்டுத்தாக்குதல் நடத்துவது சர்வ சாதாரணமாகிவிட்டது.



அண்மையில் வடகொரிய அதிபரின் தம்பி கிம் ஜாங் நம் பெப்ரவரி 13 ம் திகதி மலேசிய விமானநிலையத்தில் அதிபயங்கர நச்சு இரசாயன பதார்த்தமான வி எக்ஸ் உடம்பில் வீசப்பட்டதால் மரணமானார்.



விமானநிலையத்தில் ஒரு குழுவினர் அங்குள்ள பெண்ணிடம் தொலைக்காட்சி வினோத நிகழ்ச்சியில் இந்தப்பவுடரை குறிப்பிட்ட நபரின் மேல் வீசவேண்டும் எனக்கூறி 90 அமெரிக்க டொலர் கொடுத்து இவரைக் கொலை செய்துள்ளனர். பெண் கைது செய்யப்பட்டுள்ளார். எய்தவன் எங்கே? அம்பு எங்கே?

உலகண்ணை! அமெரிக்கா எண்டாலே உலகநாடுகள் பயப்பிடினம் என்று ஐபொட் அகிலாண்டேஸ்வரி உலக அரசியல் அளக்கத் தொடங்க... ஆட்டிலறி... அன்னம்மா தொடங்கினா படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில் எண்டு. நான் 4ஆம் வகுப்பிலை படிச்சனான் அமெரிக்காவுக்கு எல்லாரும் சற்று பயம்தான். மனித உரிமையை பேணுவது, பாரபட்சம் காட்டப்படுவதில்லை, நிறபேதம் காட்டுவதில்லை... எண்டு வெளியுலகத்திற்கு பிலிம் காட்டினம்.

ஆனால் ட்றம்ப் பதவியேற்றதும் ஒபாமா அரசில் வெள்ளை மாளிகையில் பணி புரிந்த வங்கதேசத்து இஸ்லாமியப் பெண்ணான (தலைக்கு முக்காடு போட்ட) ருமானா அகமதுவை பதவியில் இருந்து விலக்கியுள்ளார்.



ஒபாமா அரசில் வெள்ளை மாளிகையில் ருமானா ஹிஜாப் அணிந்தே பணிபுரிந்து வந்தார். ம்ம்...இது எங்கை போய் முடியப்போகுதோ என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே...திடீரென திடுக்கிட்டெழுந்த செக்கண்ட்புளோர் செல்லம்மா சர்வதேச மகளிர் தினத்துக்கு சசிகலாவை விடுதலை செய்யிறமாதிரி கனவு கண்டனான் எனச் சொல்ல..




செல்லம்மா பகல்லை ட்றீம்...(கனவு) கண்டா பலிக்காதெண்டு ஒரு புக்கிலை வாசிச்சனான் என்று சொல்ல ஆட்டிலறி அன்னம்மா தெளிவாகச்சொன்னா. பகல் கனவு பலிக்காது...பேசாமல் விட்ட இடத்திலை கனவை தொடர்ந்து பார்...



பன்னீர்செல்வம் இப்பவும் சமாதிக்கு பக்கத்திலை..தியானம் இருக்கிறாரோ என்று.



போர்ச்சூழலில் விமான குண்டுவீச்சுக்கள், செல் வீச்சுக்கள், துப்பாக்கிச் சத்தங்களிடையே எழுச்சி கானங்கள், புரட்சி கீதங்கள் ஈழத்து வனங்களில் கானம் பொழிந்தவர் சாந்தன். கடந்த வாரம் அவரது மறைவு தமிழ் உணர்வாளர்களை கலங்க வைத்துள்ளது.
அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

ஞாபகம் இருக்கிறதா? மார்ச் 1..15...



1. சுவிற்சலாந்தில் பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினின் கல்லறையிலிருந்து அவரது உடல் திருடப்பட்டது.

1 மார்ச் எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு தினம் 1981 (மன்மத லீலையை வென்றார் உண்டோ..)

2. விவியன் நமசிவாயம் பிறந்தநாள். இலங்கை வானொலி ஒலிபரப்பாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (1921-1988) விவேகச்சக்கரம், விண்வெளி வினோதம் விவசாய நேயர் விருப்பம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தியவர்.

2. நா.சிவலிங்கம் நினைவுதினம் (2010) றிச்மன்ட் ஹில் இந்து ஆலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளர்ச்சியில் இறுதிவரை பங்குகொண்டவர்.

3. அலெக்சாண்டர் கிரகாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர். பிறந்ததினம் (1847-1922) (அவரது தாயாரும் மனைவியும் செவிப்புலனற்றவர்கள் அதுவும் இவரின் ஆய்வுக்கு காரணம் எனக் கூறுகிறார்கள் பிறந்தது பிரிட்டன் வாழ்ந்தது கனடா.



3. சிரித்திரன் ஆசிரியர் யாழ். கரவெட்டி சிவஞான சுந்தரம் நினைவுதினம். (சுந்தர்) வீரகேசரியின் மித்திரன் பத்திரிகைகளில் இவரது கேலிச்சித்திரங்கள் பிரபலமானவை..

7. ஆசுகவி ஈழத்து எழுத்தாளர் கல்லடி வேலுப்பிள்ளை நினைவுதினம் (1860-1944)




8. அனைத்துலக மகளிர் தினம். (ஐக்கியநாடுகள்) (1945 இல் கனடாவில் கொண்டாடப்பட்டது)

10. மாசி மகம்




10. 1876 இல் அலெக்சான்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

11. நேரம் நல்ல நேரம் (நேரம் மாற்ற தவறாதீர்கள்)




11. 1902ல் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரிவரை 21 மைல்நீள புகையிரதப்பாதை போடப்பட்டது. 1905ல் மதவாச்சிவரை நீடிக்கப்பட்டது.

11. உலக சிறுநீரக நாள்

# தண்ணளியிற் சிறந்துயர்ந்த தாய்க்குலத்தை வாழ்த்துவமே!

உலகினையே தாங்குகின்ற இறையருளின் வல்லமையால்
உதரத்தில் உருவாகும் உயிரினையே ஈன்றெடுக்கும்
வலிசுமக்கும் தூயபணிக் குயிரினையே அர்ப்பணிக்கும்
மகத்துவத்தோ டினம் வளர்க்கும் தாய்க்குலத்தை வாழ்த்துவமே

இல்வாழ்வுக்கு குறுதுணையாய் நன்மனமாய் இணையவரும்
தலைவனுள்ளம் இன்சொல்லால் கவர்ந்திழுத்துக் கவிக்கலைத்து
இல்லறத்தின் மாண்புணர்ந்து அனைத்தன்போடுறவாடி
நல்லறத்தைப் பேணுமுயர் தாயக்குலத்தை வாழ்த்துவமே

கரம்பிடித்து வாழ்வளிக்க வந்தவந்தத் தலைவனையே
கண்கண்ட தெய்வமாக அனுதினமும் தொழுது கொண்டு
பரம்பொருளின் அருட்கிரந்து நன்மக்கட் பேறு பெற்று
பெருந்தனமாய் வளர்த்தெடுக்கும் தாய்க்குலத்தை வாழ்த்துவமே

தற்காத்துத் தற்கொண்டான் பேணுகின்ற வுயர்பண்பில்
தன்னிகரில் லாததூய பத்தினியாய் அகம்மலர
சொற்காத்துச் சோர்விலாது கொண்டவனின் நலன்பேணும்
நற்பணியில் நிறைவடையும் தாயக்குலத்தை வாழ்த்வமே




- மாரீசன்-

கற்றுயர்ந்த அறிவினொடு சிறுவருள்ளம் மகிழவைக்கும்
சொற்சுவையின் இன்னிசையில் திறமைமிக்க இயல்பினராய்
நற்றவத்தின் செல்வங்களைச் சிறப்பாக வளர்த்தெடுக்கும்
அற்புதத் திறமைமிகு தாய்க்குலத்தை வாழ்த்துவமே

அடக்கியாள முனைவோர்க்கு இறுங்காத மனோதிடத்தால்
மடக்கியினம் அழிக்கின்ற கொடுமைகளைத் தகர்த்தெறியும்
திடசித்தத் தோடுரிமைக் குரலெழுப்பும் சக்திமிக்க
படையினராய்ப் பலமளிக்கும் தாய்க்குலத்தை வாழ்த்துவமே

நீதிக்குக் குரல் கொடுத்து வழக்குரைக்கும் சாதனையால்
நாதியற்று மக்களுக்குக் கொழுகொம்பாய்க் கைகொடுத்து
வாதிக்கும் திறமையொடு சாதிக்கும் வினைதிறத்தால்
ஆதியிறை யாயிலங்கும் தாய்க்குலித்தை வாழ்த்துவமே

பெண்ணினத்தை அடக்கியாளும் இரக்கமில்லா ஆண்களையும்
பெண்ணினமே யீன்றெடுக்கும் பக்குவமாய் பராமரிக்கும்
உண்மையினை உணராத ஆண்களுக்கும் வாழ்வளிக்கும்
தண்ணளியிற் சிறந்துயர்ந்த தாய்க்குலித்தை வாழ்த்துவமே


தரத்தில் சிறந்தவை...
இல்லத்தரசிகளின் முதல் தெரிவு...
நிரு பிராண்ட் தயாரிப்புகள்
Organic
Extra virgin
COCONUT OIL
- 100% Natural
- No Preservatives
- No Genetically Modified Organism
Perfect For:
- Frying
- Cooking
- Baking
COCONUT
Niru
ORGANIC EXTRA VIRGIN
Coconut Oil
100% NATURAL, NO PRESERVATIVES, NON-GMO
PERFECT FOR FRYING, COOKING & BAKING
தமிழ் மளிகைக் கடைகளில் கிடைக்கும்
416 750 1976
www.niru.com
email: info@niru.com
Niru
நிரு

# MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

**OPEN 7 DAYS A WEEK**
9am-11pm



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS
NEW TIRES FROM **$99**
USED TIRES FROM **$49.95**

## FREE OIL CHANGE WITH RUST PROOFING
**$99** Car
**$120** SUV

## BRAKE JOB
STARTING FROM
**$199**

## WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
**$450** Most Cars
**$550** Most Vans

## Castrol
REGULAR OIL CHANGE **$29.95**
CASTROL OIL CHANGE **$39.95**
SYNTHETIC OIL CHANGE **$49.95**
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR **$149.95**

## TRANSMISSION FLUSH
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
SPECIAL SALE ON
THIS WEEKEND
FRI,SAT, SUNDAY.
SPECIALIZING IN 22 KARAT GOLD JEWELLERY
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
PLATINUM, ROSE GOLD WHITE GOLD
YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
Design by Print Sonic
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com

KOENIG
PROPERTY MANAGMENT LTD
We take the stress out of managing your investment property.
416.895.5000 • 1.800.909.7209

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY...
BUYING, SELLING & INVESTING. RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416-670-7436
email: vanyj26@yahoo.ca
www.vanyhomes.ca
LIFE INSURANCE
SUPER VISA
NON MEDICAL
RESP
www.vjsfinancial.ca
Homelife/GTA Realty Inc., Brokerage*
GTA Square, 5215 Finch Ave. East. #203. Toronto ON. M1S 0C2. Bus: 416.321.6969 Fax: 416.321.6963
*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All-Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Chairman's Club Award
RE/MAX Hall of Fame
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate. You're in good hands.
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated

Free Real Estate Class - Call: 416.321.6969

BUY / SELL PROPERTIES IN GTA



MCCOWAN & HWY 401
Bedrooms : 3
Washroom : 2
Asking Price: $299,000



BRAMPTON
Bedrooms : 4
Washroom : 4
Asking Price: $699,990



AJAX
Bedrooms : 4
Washroom : 4
Asking Price: $489,900



OSHAWA
Bedrooms : 3
Washroom : 3
Asking Price: $439,900




PETERBOROUGH
Asking Price: $899,999
BUILDING + BUSINESS



BOWMANVILLE
Bedrooms : 4
Washroom : 3
Asking Price: $479,900

A. Anton Jeeva, FRI
(Broker)
Contact: 416.575.5055
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage
Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail: anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Homes by Natheesh
BUY SELL/ RENT/ INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
FREE Home Evaluation
FREE Home Staging
FREE Virtual Tour
HomeLife/GTA Realty Inc., Brokerage
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
SALES REPRESENTATIVE
647.545.8462

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

FOR ALL YOUR MORTGAGES
Pradeepraj Mani
Mortgage Consultant LIC# M14001956
Cell: 416-997-3862
np_57@hotmail.com
Dedicated and knowledgeable team...
Provide you with the best solutions
for 1st and 2nd Mortgages!
Our commitment to you is to provide you with the very best...